செந்தனல்
SENTHANAL

# செந்தனல்

தணல் 2 | கனல் 25 | 2004 ஜுலை 10 - ஜுலை 29 | 16/=



# கரும்புலிகள் தினத்தில் தமிழீழத் தேசியத் தலைவர்

## இரவல் பதவியில் கொசுவம் பிடிக்க எப்படி மனம் வருகிறது ஆட்சியாளருக்கு (பக்கம்-9)

## ஆயுத எழுத்து- மோசமான அரசியல்வாதியா? (பக்-10)



## ரஜனியை செல்வாக்கில் ஏற்றியது மாயை - ஆனால் ஜெயலலிதா...?



ஈராக் நீதிமன்றத்திற்கு சவாலாக விளங்கும் சதாம்





நானும் ஒரு யாப்பிலக்கிணைக் கவிஞனாக இருந்தேன் பின் அதை தூர எறிந்து விட்டேன்

—மு. பொ



## முதல் முதல் சம்பியனான மரியா ஷரபோவா



# ஆசியக் கிண்ணத்தில் பாகிஸ்தானை தோல்வியடையச் செய்வது உறுதி

— ராகுல் ராவிட்

## சைவ நற்சிந்தனை

### உண்டிகொடுத்தோர்...

உணவு உயிரினங்களின் வாழ்விற்கு வழிவகுப்பது. உணவின்றி எந்த உயிரும் வாழ இயலாது. உணவிற்கு வழிதேடியே மனிதன் உழைப்பதற்கு முற்பட்டான். மொத்தத்தில் உணவுத் தேவையே மனிதனுக்கு உழைக்கின்ற நோக்கத்தை உருவாக்கியது. ஒவ்வொருவரும் உணவு பெறவேண்டும் என்பதில் பெரியவர்கள் குறியாக இருந்தார்கள் "தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்" என்ற பாரதியின் கூற்றிற்கு வள்ளுவப் பெருந்தகை அடியெடுத்துக்கொடுத்தார். "இரந்தும் உயிர்வாழ வேண்டின் பரந்து கொடுக உலகியற்றியான்" என்று இறைவனுக்கே சாபங்கொடுத்தார். இதனாற்தான் உணவைத் தெய்வமாகச் செல்வமாகக் கண்டு அன்னலட்சுமி எனப் போற்றினார்கள்.

பசிவந்திடப் பத்தும் பறந்துவிடும். அந்தப் பத்திற்குள் சமய உணர்வும் அடங்கும். பசியோடு இருப்பவனிடத்தில் இறை சிந்தனை எழாது. அதனாற்தான் திருவீழிமிழலையில் கடும் பஞ்சம் ஏற்பட்ட போது சம்பந்தப்பெருமானும் அப்பர் சுவாமிகளும் இறைவனிடமே படிக்காசு பெற்று மக்களுக்கு உணவளித்துப் பசி நீக்கினார்ககள். ஆபுத்திரனும் மணிமே-கலையும் இப்பணியையே செய்து பயன்பெற்றார்கள். வயிரார உணவிடுவதனை தானங்களில் ஒன்றாக்கி அன்னதானம் என்றார்கள். இவ்வுணவினை நல்ல வழியிலீட்டி இறைவன் தந்தது என இட்டு உண்போமாக அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்.

சைவப்புலவர்
செ.குணபாலசிங்கம் B.A

## கிறிஸ்தவ நற்சிந்தனை

### வாழ்வை வளப்படுத்துவது செபம்.

செபம் என்பது இறைவனோடு தனிப்பட்ட நிலையில் நல்லுறவு கொள்வதாகும். அவர் நம்மைக் காண்கிறார். நாம் சொல்வதைக் கேட்கிறார். என்ற உணர்வோடுதான் செபிக்க வேண்டும். சத்தமாகச் செபித்தால்தான் கடவுள் கேட்பார் என்று நினைப்பது தவறு. இறைமகன் இயேசு கற்பித்த "பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே" என்பது எவ்வவளவு சிறந்த செபம் அதில் கடினமான சொற்கள் இல்லை. இறைவன் நமது அன்புத் தந்தை நமது தேவைகளில் அவர் நமக்கு உதவி செய்கிறார். தனிப்பட்ட நிலையில் நமக்கு இறைவனோடு நல்லுறவு இருப்பது அவசியம்.

ஒரு உப்புச்சிலை கடற்கரையில் கடலைப்பார்த்தவாறு நின்று கொண்டிருந்ததாம். அதற்கு கடலின் தன்மை விளங்கவில்லை. அது கடலிடம் நீ ஓர் அதிசயப்பிறவி உன்னைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை என்றதாம். அதற்குக் கடல் நீ என்னிடம் வா அப்போது புரிந்து கொள்வாய் என்றது. உப்புச்சிலை கடலில் இறங்கியது. கடலோடு கலந்து விட்டதுஅதே போல் நாம் இறைவனோடு இணைந்திட வேண்டும் இறைவனில் கரைந்திட கலந்திட வேண்டும். இதற்கு ஒரே வழி முழுமையான செப வாழ்வே ஆகும்.

ஞா.மனோ(R.C)
ஆசிரியர்
வவுனியா.




## இஸ்லாமிய நற்சிந்தனை

### உணவும் ஆன்மீகமும்

அல்லாஹ்வை நெருங்க வேண்டும் என்பதற்காகத் தொழுகை, திக்ர்குர் ஆன் ஓதுதல் ஹஜ், நோன்பு போன்ற வழிபாடுகளில் ஒருவர் ஈடுபடுகிறார். ஆனால் அவரது உழைப்பு, முயற்சிகள் ஷரீ அத் அனுமதிக்காத வகையில் அமைந்திருந்து. அந்த உழைப்புகளால் பெறப்படும் உணவை அவர் உண்பாராயின் அந்த ஆடைகளை அணியும் பட்சத்தில் அந்த வழிபாடுகளை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. ஹராமான வழியில் பெறப்பட்ட உணவு மாத்திரமன்றி பொதுவாக உட்கொள்ளவோ பருகவோ அனுமதிக்கப்படாதவை கூட உடலில் சேருமாயினும். இதே துர்பாக்கியநிலைக்கு அந்த நபர் உள்ளாக நேரிடுகிறது இது சம்பந்தமாகப் பல்வேறுபட்ட அல்குர் ஆன் ஹதீஸ் வசனங்களைக் காணமுடியும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார் நிச்சயமாக அல்லாஹ் பரிசுத்தமானவன். அவன் பரிசுத்தமானதையே ஏற்றுக் கொள்வான். ரஸூல்மார்களுக்கு கட்டளையிட்டதையே அவன் விசுவாசிகளுக்கும் கட்டடையிட்டிருக்கிறான். அதுதான் தூதுவர்களே பரிசுத்தமான ஆகாரங்களிலிருந்தே நீங்கள் சாப்பிடுங்கள் நல்ல மல்களில் ஈடுபடுங்கள் (அல்முஃமினூன் -51) ஆகவே நாம் அல்லாஹ் வழி காட்டுதலையே பின்பற்றி அவனுக்கேற்றப்படி வாழ்வோமாக.

H.J.M.ஹஸாம்
மன்னார்

## உயிருள்ள பிணம்



பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து சுமார் நானூறு ஆண்டுகளாக உலகையே உலுக்கி ஏழை முதல் பணக்காரன் வரை உயிரைச் சில்லிட வைத்தது "வேம்பயர்" அதாவது. ட்ராகுலா இது உயிருள்ள பிணம். ரத்த வெறிபிடித்தது. இரவானதும் தனது உடம்புத்தோலை உரித்துவைத்துவிட்டு வெளவால் மாதிரி பறந்து வரும்.

இதைக் கண்டு அத்தனை உலகமுமே பயந்து நடுங்கியது. சிறு துவாரத்திற்குள்ளால் கூட நுழைந்து விடும். இரத்தம் உறிஞ்சும் இந்தப் பிணம் கடித்து இறந்தவர்களும் ட்ராகுலாவாக மாறிவிடுவார்கள் என்றபயத்தால் அதனால் கடியுண்டவர்களை நன்றாக சுட்டுப் பொசுக்கி பூமியின் வெகு ஆழத்தில் தோண்டிப்புதைத்தார்கள்.

இந்தட்ராகுலரா பீதி எப்படிவந்தது? 1430ம் ஆண்டில் ட்ரான்ஸிலில் "ப்ளாட் ட்ராகுலா" என்ற இளவரசனின் தந்தையையும் தமை-யனையும் துருக்கிய எதிரிகள் கொடூரமாகச் சிதைத்துக் கொன்றனர். அதன்பின்னர் பல்லாயிரக்கணக்கான மக்களை வேட்டையாடிய அவன் 1476 இல் தலைதுண்டிக்கப்பட்டு இறந்தான். ஆனால் அவனது உடல் வைக்கப்பட்ட சவப்பெட்டியை சில ஆண்டுகளின் பின் திறந்து பார்த்தபோது காணவில்லை. அந்தப்பிணம்தான் இவ்வாறு இரத்தம் உறிஞ்சிப் பழிவாங்குகிறது என்று நம்பப்பட்டது.

இப்படி ஒரு பிணம் இருந்ததா என விஞ்ஞானிகள் ஆராய்ந்தபோது மனித ரத்தம் குடிக்கும் வேம்பயர் வெளவால்கள் உலகில் இருப்பது விஞ்ஞான பூர்வமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# கடலுக்குள் மூழ்கிய கப்பலின் இரகசியம்

1971 டிசம்பர் 9ந்திகதி இந்திய - பாகிஸ்தான் யுத்தம் உச்சக்கட்டத்தில் இருந்த நேரம் பாகிஸ்தானிய கப்பல்களை அழிப்பதற்காக இந்திய கப்பற்படை ஐஎன்எஸ் கிர்பான், ஐஎன்எஸ் குக்ரி என்ற கப்பல்களை அனுப்பிவைத்தது.

அன்று இரவு எட்டுமணி இரு கப்பல்களும் அந்தக் காரிருளில் நடுக்கடலில் தங்கள் இலக்கை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. அதே வேளை 5 மீற்றர் தொலைவில் பாகிஸ்தான் கப்பற்படையைச் சேர்ந்த ஹங்கோர் நிலை கொண்டிருந்தது. இந்திய கப்பற் படையின் இரு கப்பல்களையும் நோக்கி ஆபத்து நகர்ந்தது. ஹங்கோரிலிருந்து புறப்பட்ட முதல்குண்டு நேராக கிர்பானை நோக்கிச் சென்றது. ஆனால் அது கப்பலுக்கு அடியிற் சென்றதால் வெடிக்கவில்லை. இரண்டாவது குண்டு குக்ரியை நேர்க்கிச் சென்றது. அதுதுல்லியமாய் கப்பலைத்தாக்கியது. கடல் நீர் உட்புக குக்ரி கொஞ்சம் கொஞ்சமாய் மூழ்கத் தொடங்கியது.

மூன்றாவது குண்டை கிர்பானை நோக்கிச்சுட்டபோது அதிஸ்ர வசமாக தப்பி இருளில் நழுவி மறைந்தது. கிர்பான் குக்ரியின் படை வீரர்கள் கப்பலின் மேற்பகுதிக்கு வந்து தப்பிக்க எவ்வளவோ முயற்சித்தும் அதிலிருந்த 194 பேரும் பரிதா-பகரமாய் கடலோடு சங்கமமாயினர் இந்தியாவிற்கு ஏற்பட்ட போர் இழப்புகளிலேயே இதுதான் மிகப்பெரிய இழப்பு இரண்டாம் உலகப்போருக்குப் பின் நீர்மூழ்கிக்கப்பலால் மூழ்கடிக்கப்பட்ட இரு கப்பல்களில் குக்ரியும் ஒன்றாகும். முப்பதாண்டுகளுக்கும் மேலாக அரபிக்கடலின் ஆழத்தில் கிடக்கும் குக்ரியை கண்டுபிடிக்க கடந்த ஐந்து ஆண்டுகளாக முயற்சித்துவரும் இந்தியா இந்த ஆண்டு பெப்ரவரி 6இல் கப்பற்படையின் ஹைட்ரோ கிராபிக் கப்பலான ஐ.என்.எஸ் ஜமுனாகுக்ரியைத் தேட அனுப்பப்பட்டது. 80 மீற்றர் ஆழத்தில் இருந்த ஒரு மணல் மேட்டுக்குள் குக்ரி இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குக்ரி மீது நீர்மூழ்கி குண்டுவீசியது உண்மைதான் ஆனால் போர்க்கப்பல்கள் நீர் உட்புகாவண்ணம் கட்டப்பட்டவையல்லவா? அந்தக் குண்டு வெடித்தபிறகும்கூட கப்பல்துறை முகத்திற்கு திரும்பியிருக்க வேண்டும். ஆனால் குக்ரி சில மர்மங்களையும் புதைத்துக்கொண்டு கடலுக்குள்மூழ்கி விட்டது. எந்த இடத்தில் அந்தக்குண்டு தாக்கியது? கப்பல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் போது நீர் உட்புகும் எல்லாவழிகளும் மூடப்பட்டிருக்கும் அப்படி இருக்கும் போது ஒரே ஒரு குண்டு துளைத்ததில் கப்பல் எப்படிமூழ்கியது? வீரர்களை அனுப்பி ஆராய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது இந்தியக்கப்பற்படை.







# மாகாண விளையாட்டுப் போட்டித் திகதிகள் மீழ் பரிசீலிக்கப்படவேண்டும்

2001, 2003 ஆண்டுகளில் உதைபந்தாட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணக்கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை, தேசிய மட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டியில் முதலிடம் பெற்று மன்னார் மாவட்டத்திற்கு மாத்திர மல்லாமல் வடக்குக் கிழக்கு மாகாணம் முழுவதற்குமே பெருமை தேடித் தந்ததை ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

இப்பாடசாலை உலகளாவிய மட்டத்திலான போட்டியில் பங்குபற்றத் தெரிவாகி இருப்பது, வ.கி.மா கல்வித்திணைக்களம் பெருமை அடையவேண்டிய விடயமாகும். தென் கொரியாவில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட் டிகளிலும், இவ்விளையாட்டுக் குழு வெற்றிக்கொடி நாட்டுமேயாகில் அது இப்பெருமைக்கு இன்னும்மெரு கூட்டியதாகவே அமையும் என்பது, தாங்கள் அறியாத விடயமல்ல இந்த உதை பந்தாட்ட வீரர்களுக்கு உற்சாகமூட்டி வழி அனுப்பவேண்டியது மாகாணக் கல்வித் திணைக்களமாகும்.

இவ் விளையாட்டு வீரர்களின் பெற்றோர் மிகவும் வறியவர்கள் பங்குபற்ற வேண்டிய 18 வீரர்களுக்குமாகிய சாப்பாடு தங்குமிடச் செலவினங்கள், உள்ளூர் போக்குவரத்துச் செலவுகள் ஆகியவற்றை, ஏற்பாட்டாளர்களே பொறுப்பேற்கின்றனர். இலங்கைக்கும் தென்னிலங்கைக்குமாகிய விமானப் பயணத்திற்கான செலவை மாத்திரம் இவ்வீரர்கள் ஏற்கவேண்டியுள்ளது. ஆனால் பிரயாணத்திற்குத் தேவையான செலவினத்தை இவர்களால் சேர்க்க முடியாத நிலை உள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களம் இவர்களுக்காகிய இச்செலவினத்தில் ஓர் சிறு தொகையாகுதல் ஏற்றிருந்தால் அது இவர்களை உற்சாகமூட்டுவதாய் அமைந்திருக்கும்.

இவ்விளையாட்டு விழா தென்கொரியாவில் யூலை 20ல் இருந்து 27 வரை நடைபெற உள்ளது. ஆகவே இவர்கள் பயணிக்க வேண்டிய திகதி யூலை 17 அல்லது 18 ஆகும். இது இவ்வாறிருக்க வடக்குக்கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகள் யூலை 17,18 திகதிகளில் நடைபெற இருப்பதாகக் கேள்வியுற்றதும் நாம் பெரும் அதிர்ச்சிக்குள்ளானோம்.

2001, 2003 ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் வெற்றிகொண்ட மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை, இந்த வருடப் போட்டிகளிலும் பங்குபற் றுவதைத் தவிர்க்கும் முகமாகவே ஏற்பாட்டாளர்களால் மேற்படி திகதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன என்ற அபிப்பிராயம் இங்குள்ள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள தென்பதைக் கவலையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

தாங்கள் இத்திகதியையிட்டு மீள் பரிசீலனை செய்யவேண்டியது அவசியமெனக் கருதுகிறோம். வடக்குக் கிழக்கு மாகாணத்தில் அடங்கிய சகல மாவட்டங்களும் மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றவேண்டும், திறமைசாலிகள் தெரிவு பாகுபாடின்றி நடைபெற வேண்டும். தேசிய மட்டத்தில் இவர்கள் பங்குபற்றித்தத்தமது மாவட்டங்களுக்கும், வடக்கு கிழக்கு மாகாணத் திற்கும் பெருமை தேடித்தர வேண்டு மென்பதே எமது நோக்கமாகும். இதை யிட்டு பரிசீலனை செய்து மாகாணமட்டப் போட்டிக்காகிய திகதியை மீள்பரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
இல, AD/ED/01
அ.அடைக்கலநாதன், பா.உ
மாவட்ட காரியாலயம்,
மன்னார்

பிரதி
பிரதம செயலாளர், வ.கி.மா
செயலாளர். ச.ப.வி.து.அ
கல்விப் பணிப்பாளர், மன்னார்.
அதிபர், புனித ச.ஆ.தே.பா

# கடும்மழையால் பாலம் அடித்துச்செல்லப்பட்டது தொழிலாளர் கவலை

*மஸ்கெலியா நிருபர்*

சாமிமலை கொழும்பு தோட்டப் பிரிவில் உள்ள தோட்டத்தொழிலாளர் சுமார் 300 பேர் இன்று தங்களது பணிக்கு செல்வதை நிறுத்தியுள்ளனர். காரணம் கடந்த 13ம் திகதி பெய்த கடும் மழையால் அவர்களது பிரிவில் இருந்த ஆற்றுக்குப் போடப்பட்டிருந்த மரத்தினால் ஆன பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதை தொடர்ந்து அந்தப் பாலத்தைக் கடந்தே சிறுவர் பாராமரிக்கும் நிலையம், பிரட்டு களம், சாமி மலை நகர் ஆகியவற்றிற்கு செல்லவேண்டும். பாதை துண்டிக்கப்பட்டுள்ளதால் தோட்ட மக்கள் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். இங்கு மாலை நேரத்தில் கடும் மழை பெய்வதால் ஆற்றை கடப்பது ஆபத்தானதாக உள்ளது. இவ்வாறு பலவருடகாலமாக உள்ள்தை பல அரசியல் வாதிகளிடம் கூறியும் பலன் எட்டவில்லை, மேலும் இப்பிரிவில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தொழிலாளர் தேசிய சங்கம் என நான்கு தொழிற்சங்கங்களை கொண்ட தொழிலாளர்கள் தோட்டப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் இன்று தொழிற் சங்கங்களில் முறைப்பாடு செய்துள்ளனர். மேலும் தோட்ட நிர்வாகத்திடம் தொழிலாளர்களின் தலைவர்கள் கதைத்தற்கிணங்க தற்போதைக்கு மரத்தினால் ஆனபாலத்தை அமைத்துக் கொடுப்பதாக உறுதி கூறியுள்ளார். தோட்ட முகாமையாளர். இங்கு மாலை நேரத்தில் பெய்யும் கடும் மழையில் மீண்டும் அடித்து செல்லுமானால் அதற்கு உத்தரவாதம் என்ன என்று தோட்டத்தொழிலாளர்கள் அங்கலாய்க்கின்றனர்.

# வவுனியாவில் பண்டாரவன்னியன்படை

பேனாமையின் எச்சரிக்கை உங்கள் கண்களுக்கு தெரியாவிடடடால் துப்பாக்கிறவைகள் மூலம் உங்கள் காதுகளுக்குச் சொல்லித்தருவதற்காக புகைபுகமுடியாத இடத்திற்குள்ளால் புகுந்து வருவோம்

விசேட பிரிவு
பண்டாரவன்னியன் படை
வவுனியா

என விசாலமிடப்பட்ப்பட்ட மண்டையோடு சவப்பெட்டியுடன் கூடிய சுவரொட்டிகள் வவுனியா நகரின் பல இடங்களிலும் ஒட்டியிருப்பதுடன் இதனை அனைவரும் வாசித்துச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

இவ் வவுனியா மாவட்ட விசேட பிரிவு பண்டார வன்னியன் படை அப்பகுதி இளைஞர்களுக்கு கடுமையான உத்தர வினை விடுத்துள்ளது.

மாபெரும் தியாகங்களையும், பல்வேறு அர்ப்பணிப்புகளையும் செய்யும் பல நெருப்பாறுகளைக் கடந்து, உலகமே வியக்கும் நிலையில் வெற்றியின் சிகரத்தில் நிற்கும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை அழிப்பதற்கும், ஒன்றுபட்டுள்ள தமிழினத்தை சிதைப்படுத்துவதற்கும், எதிரியானவன் மேற்கொள்ளும் அனைத்து இராணுவ அரசியல், புலனாய்வு தந்திரோபாய அணுகுமுறைகளுக்கு உட்பட்டு தேசத்துரோக செயல்களிலும். சமூக விரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடுவோர் மன்னிக்க முடியாதவர்கள்.

தொடர்ச்சி 21ம் பக்கம்

# பாடசாலை அபிவிருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு முக்கியம்

க.தங்கேஸ்வரி பா.உ

ஒரு பாடசாலையின் முன்னேற்றத்தில் அதிபர், ஆசிரியர், பெற்றோர் ஆகிய முத்தரத்தாரும் சம்பந்தப் படுகின்றனர். பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இதற்கு ஏற்றதொரு வாய்ப்பாக அமையும். இதன் மூலம் அதிபர் குறைந்த வளங்களைக் கொண்டு நிறைந்த பயனைப்பெறலாம்.

இவ்வாறு அண்மையில் மண்டபத்தடி பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மட்டக் களப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வி க.தங்கேஸ்வரி கூறினார்.

பாடசாலை அதிபர் திரு.புலேந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் மட்டக் களப்பு வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. ஏ.எம்.ஈ.போல் வவுணதீவுப் பிரதேசக் கல்விப்பணிப்பாளர் சி.சண்முகம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி 21ம் பக்கம்

# ஜோசப் தமிழ் வித்தியாலய பரிசளிப்பு விழா

*மஸ்கெலியா நிருபர்*

மஸ்கெலியா சென் ஜோசப் தமிழ் மகாவித்தியாலயத்தின் 64வது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் 7/8/2004 அன்று பாடசாலையின் பிரதான மண்டபத்தில் காலை 9 மணிக்கு வைபவரீதியாக வித்தியாலய. அதிபர் திரு.வ.சச்சுதானந்தன் தலைமையில் நடைபெற்றது.

கடந்த மாதம் இப்பாடசாலை முன்னாள் மத்திய மாகாண கல்வி அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் அவர்களினால் தரம் 1.A.B பாடசாலையாக தரம் உயர்த்தியபின் முதலாவது வருட ஆண்டு விழாவாகவும், 1940-07-26ம் திகதி இப்பாடசாலை முதன்முதல் ஆரம்பித்தநாள் ஆகையினாலும் அதன் 64வது ஆண்டு விழாவாக நடைபெறுகிறது.

கடந்த வருடம் இப்பாடசாலையில் க.பொ.த பரீட்சையில் சித்திபெற்ற 2.மாணவமாணவிக்கு பணப்பரிசும் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் திறமை சித்திபெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசில்கள் வழங்கவும், பாடசாலையின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் முன்வந்துள்ளார்.

# சிறுமியின் பூதவுடலுக்கு சுடுகாட்டில் மறுப்பு குஞ்சுக்குளத்தில் இரயில் பாதையருகில் அனாதரவாய்.

*ச.மயூரன்*

வவுனியா நகரில் இருந்து A9 பாதையில் 35மைல் தொலைவில் கொல்லர் புளியங்குளம் உள்ளது. யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய மக்கள் வசிக்கின்றனர். அதனை அண்டியுள்ள கிராமம் தான் குஞ்சுக்குளம் அங்கு பல ஆண்டுகாலமாக ஒரு சுடலை இருந்து வந்தது. பல பிணங்களை எரித்தும் புதைத்தும் இருக்கின்றார்கள் ஆனால் குஞ்சுக்குளத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவரின் இறந்த பிணத்தை அப்பகுதியில் புதைக்க ஒரு சிலரின் தடுப்புக்களால் அவ்வூரின் ஒதுக்குப்புறமான இரயில் தண்டவாளம் அருகில் அனாதரவாக புதைக்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

இதைப் போன்று முன்னர் ஒருமுறை இடம்பெற்றதாகவும் அதனை அப்பிரதேச அரச அதிபரால் தீர்க்கப்பட்டு அப்பிரதேசத்தில் பிணங்களை புதைக்கவும் எரிக்கவும் அனுமதி வழங்கியிருந்தார். ஆனால் அதே போல பிரச்சினை தற்போது மீண்டும் அப்பகுதியில் மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

இனிமேல் ஊரில் யாரும் பிணமாகினால் அதனை என்ன செய்வது என்பது மிகவும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

# ...சாலை சொந்தஇடத்தில் இயங்குதல்



வ.நீலியாமோட்டை சரஸ்வதி வித்தியாலயம், பூவரசங்குளம் பாடசாலை மாணவர்கள் 1990 ஆண்டிற்குப்பின் குருக்கள் புதுக்குளம் அ.த.க.பாடசாலையில் கல்விகற்று வந்தனர். இப்பாடசாலைக்குச் செல்வதாக இருந்தால் 2KM நடந்து சென்று பின்பு பஸ்வண்டியில் 4KM செல்ல வேண்டும். இந்த மாணவர்களின் சிரமத்தைக் குறைக்கும் நோக்கத்துடன் கடந்த 03-06-2004 அன்று பூவரசங்குளம் பல்நோக்கு மண்டபத்தில் இப் பாடசாலையை மீண்டும் ஆரம்பித்து வைக்கும் முகமாக எளிமையான வைபம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இவ் வைபவத்தில் செட்டிக்குளம் கோட்ட கல்விப்பணிப்பாளர் திரு. ஐ.இராசரத்தினம் தரம் ஒன்று மாணவன் ஒருவனுக்கு இலவசபாடநூல் வழங்குவதையும் அருகே பாடசாலை அதிபர் திரு.செ.வேதநாயகன் முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு.சி.கணேசபாதம் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

வவுநிரு

# படுகொலைகள், வல்லுறவுகளின் சூத்திரதாரி சுட்டுக்கொலை

பாலியல் வல்லுறவு மற்றும் படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்பு டைய பாதத்தாளஉலகக் கோஷ்டியைச் சேர்ந்த யோசுஜீ என்பவர் கடந்த திங்கட்கிழமை வீரதொட்டிய பாத்தகட என்ற இடத்தில் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

கடந்த இருமாதங்களுக்கு முன்னர் மாத்தறை வைத்தியசாலையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டட ஆ.மீ ஜீனொயின் நெருங்கிய சகா இவன் என்பது குறிப்பிடத் தக்கது. 5 பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுடனும் 10 க்கு மேற்பட்ட படுகொலைச் சம்பவங்களுடனும் சம்பந்தப்பட்டவன் சுடப்பட்ட யோசுஜீ என்றும் தெரிவாக்கப்பட்டுள்ளது.

# மாவனல்லை ஆதார வைத்தியசாலையின் மேம்பாட்டுக்கு பொதுமக்கள் உதவி

*மாவனல்லை நிருபர் எஸ்.ஹமீட்*

மாவனல்லை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தியின் நிமித்தம் சுமார் பத்து இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த உபகரணங்களும், தளபாடங்களும் நகர வாழ் தனவந்தர்களாலும் பொதுமக்களினாலும் இவ் வைத்திய சாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன.

மேலும் இவ் வைத்தியசாலையின் மகற்பேற்றுப் பிரிவுக்கு அவசியமான உபகரணங்களைப் வழங்குவதற்கும் பலர் முன்வந்துள்ளனர்.

இவ்வைத்தியசாலைக்குப் புதிதாக நியமனம் பெற்றுவந்த மகப்பேற்று வைத்திய நிபுணர், வைத்தியக் கலாநிதி டாக்டர். நவாஸ் ஜிப்ரி விடுத்துவரும் வேண்டுகோள்களுக்கிணங்கவே மாவனல்லைப் பிரதேசத்திலுள்ள பலரும் இவ்வுதவிகளை நல்கிவருகின்றனர்.

இதனையொட்டி கடந்த 27ம் திகதி ஜூன்மாதம் மாவனல்லை ஆதாரவைத்தியசாலையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்டதொழில்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அதாவுட செனவிரத்தினா ஆஸ்பத்திரியின் அபிவிருத்திக்கு உதவியவர்களுக்கு நற்சான்றிதழ்களை வழங்கியதுடன் உதவி புரிந்தோருக்கு நன்றியும் செலுத்தினார்.

செந்தணல்
"செம்மையைச் செப்புவோம்"

சூரியன் வெளியீட்டகம்
த.பெ.இல. 1601,
கொழும்பு.
தொலைபேசி : (011) 4736837, 4736838
ஆசிரியர் : (011) 4715168
தொலை நகல் : (011) 4715168

## தமிழர்களின் தலைவிதி

சமாதான முயற்சிகள் சமாதானப் பேச்சுக்கள் என்பன நாட்டின் ஒரு யுத்தநிறுத்தத்துடன் தொடர்ந்தவை மீண்டும் பின்நோக்கிச் செல்கிறதே என அனைத்து மக்களையும் இன்றைய நிலை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. நடந்து முடிந்த இரண்டு தசாப்தத்திற்கு மேலான யுத்தம் இலங்கையின் அபிவிருத்திப் போக்கினை ஆயிரமாண்டுகள் பின்நோக்கி அழைத்து, பின்நிலவிய யுத்த நிறுத்த செயற்பாடுகளினால் ஓரளவு பழைய அமைதி ஓட்டம் நிலவிய வாழ்க்கை திரும்பி மீண்டும் நாடு யுத்தத்தை ஏற்க வேண்டிய ஒரு நிலை ஏற்படுமோ என எல்லோரையும் கேள்விக் குறியுடன் வாழ வைக்கிறது.

இதற்குப் பலம் சேர்ப்பதாக கிழக்கும் அங்கு நடைபெறுகின்ற கொலைகளும் வன்முறைகளும். எதிரான ஒரு சூழ்ச்சி போராட்டத்தை நிகழ்தி - அரச யுத்த களேறிகளுடன் தொடர்பு கொண்டு தமிழ் தேசத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டமை, என ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் கூர்ந்து நோக்கும் போது இவை ஒவ்வொன்றும் இலங்கை வாழ் தமிழர்களை இன்னலுக்குள்ளாக்குவதாகவே உள்ளது.

சிறிது சிறிதாக நடந்து முடிந்த வன்முறைச் சம்பவங்கள், அதனை அடுத்து நடந்த நடேசன் கொலை இவை தமிழ் மக்களுக்கு மிகவும் மோசமான செய்திகளையே எடுத்துக் கூறுகின்றன.

இதன் தொடர்ச்சியாய் அரச பாதுகாப்புப் படைகளின் ஒத்துழைப்புடன் சங்கிலித் தொடராய் கிழக்கில் கொலைச் சம்பவங்கள் அண்மையில் நடைபெற்ற கறுப்பு யூலை அனுசரிப்பு நாட்களில் விடுதலைப்புலிகளைக் குறிவைத்துத் தாக்கியமை என்பது எவ்வாறான விளைவை ஏற்படுத்தப் போகிறதோ என ஒவ்வொருவருடைய நெஞ்சங்களையும் அழுத்திக் கொண்டே இருக்கின்றது.

இதைவிட முக்கியமான விடயம் புதிய சோதனை நிலையங்களும், வாகன மறிப்பைத் தொடர்ந்து சோதனை நடவடிக்கைகளும், ஈழத் தமிழரை அழிப்பதில் அப்படி என்ன அலாதி இருக்கிறதோ? முதுகில் கத்தி குத்தும் போலித் தமிழர்கள் வாழுகின்ற வரை தமிழன் தலைவிதிகள் இப்படித் தலைகீழாகவே வாசிக்கப்படும்.

# இந்துசமயக் கருத்தரங்கு

செ.தி.பெருமாள்

அகில இலங்கை இந்துமாமன்றம் கடந்த வாரம் கிளிநொச்சியில், உள்ள அரச பாடசாலைகளிலும், ஏனைய பாடசாலைகளிலும் உள்ள இந்து சமய ஆசிரியர்களுக்குச் சமயக் கருத்தரங்கு ஒன்றை இரண்டு தினங்களுக்குச் செய்தது.

அவ்வாறு செய்யப்பட்ட கருத்தரங்கில் அறநெறிப் பாடசாலை ஆசிரிய ஆசிரியைகளும் கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாட்டை அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர். திரு.கந்தையா நீலகண்டன் மேற்கொண்டார். அவருடன் இணைந்து கிளிநொச்சி அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் அனுசரணை மேற்கொண்டனர்.

கருத்தரங்கு கிளிநொச்சியில் கலாசார மண்டபத்தில் சனிக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகியது.

அன்றைய தினம், வைபவரீதியாக கிளிநொச்சியின் தேசியக்கொடியும், நந்திக்கொடியும் ஏற்றிய பின்பு மக்களால் விளக்கு ஏற்றப்பட்டது.

சுமார் 80க்கு அதிகமான ஆசிரியர், ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கில் கௌரவ கந்தையா நீலகண்டன், அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவரும், கொழும்பு விவேகானந்த சபையின் பொதுச் செயலாளர் கௌரவ இராஜபுவனேஸ்வரன், மற்றும் சப்பிரகமுவ பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு.நாகேஸ்வரன், கொழும்பு திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கார்த்திகேயன், அகிலஇலங்கை இந்து மாமன்ற பொருளாளர், திரு.சொக்கலிங்கம் பிள்ளை, அப்பலோ வைத்திய சாலை, கொழும்பு திரு.நடராஜா கொழும்பு லீலா அச்சக உரிமையாளரும், கொழும்பு தமிழ் சங்க தலைவருமான திரு. தனபால் மஸ்கெலியா இந்துமாமன்ற செயலாளர், கௌரவ A.R.C. திருகோணப் பொருமாள், விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு.இராசநாயகம் அவர்களும் உதவி அரசாங்க அதிபர், மற்றும் அவரது சேவையாளர்களும் கலந்து கொண்டனர்.

மறுநாள் நிகழ்வில் மாலை 5 மணிக்கு சிறுவர் பராமரிப்பு இல்லம் முதியோருக்கான வைத்தியசாலை, அனாதை இல்லம் போன்றவற்றை பார்வையிட்டதுடன் அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் நடாத்தப்படும் அனாதை இல்ல வைத்திய சாலையையும் பார்வையிட்டு அங்குள்ள குறைபாடுகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.



## முன்பள்ளிப் பிரதேச இணைப்பாளருக்கான பயிற்சி நெறி

ச.மயூரன்

முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையமும் போரூட் நிறுவனமும் இணைந்து இதுவரை பயிற்சி பெறாத முன்பள்ளிப் பிரதேச இணைப்பாளர்களுக்கான வதிவிடப் பயிற்சி நெறியினை மேற்கொண்டது.

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் சர்வோதயா பயிற்சி நிலையத்தில் யூன் 18ம் திகதி முதல் 24ம் திகதிவரை இடம் பெற்றது.

இதில் மட்டக்களப்பைச் சேர்ந்த 23 பிரதேச இணைப்பாளரும் யாழ்ப்பாணம் ஒரு பிரதேச இணைப்பாளரும் வவுனியாவைச்சேர்ந்த 2 பிரதேச இணைப்பாளர்களும் பயிற்சி பெற்றனர்.

இத்தொடர்பயிற்சியின் 1ம் கட்டம் பூர்த்தியடைந்துள்ளது. இங்கு குழந்தை உளவியல், குழந்தைகளுக்கான சுகாதார ஆக்கத்திறன், அழகியல்ற் திறன், கணித,மொழி விருத்திச்செயற்பாடுகள் போன்றவைகளுக்கான விளக்கங்களுடன் வரிவுரைகள் இடம்பெற்றது.

## இதய ஒலி

### முதலாம் ஆண்டு நிறைவில் காலடி எடுத்து வைத்திருக்கும் செந்தணலே!

உன் அட்டைப்பட வண்ணம் கண்டு வானவில் வாயடைக்கிறது. உண்மையில் உனது ஆக்கங்கள் அனைத்தும் மிகவும் தரமானவை, அவை அனைத்தும் வாசகர் எம் இதயங்களைக் கொள்ளை கொள்கிறது. இதய ஒலிதனில் என் இதயம் திறந்து எப்படி உனை நான் வாழ்த்திடுவேன் ஆனாலும் இன்றல்ல என்றென்றும் நீ நிலைத்து நின்று திக்கெட்டும் புகழ்பரப்ப இவ் வாசகனின் உளமார்ந்த வாழ்த்துக்கள்!

ச.ஜீபத்
மல்லாவி.

### பிரியமுள்ள செந்தணலுக்கு

பிரியமுடன் எழுதுவது என்னைப் போல இச் செந்தணலுக்கு நிறையவாசகர்கள் இருப்பார்கள். இப்பொழுது இவ் வாசகர்களுள் என்னையும் இணைத்துக்கொள்க. நான் புதுமுகம், கவிதைகள், சிறு கதைகள், உலகச் செய்திகள் என்று நான் பார்த்த முதல் நாளில் என்னை கவர்ந்துள்ள இப்பத்திரிகைக்கு என்னுடைய ஆக்கங்கள் சிறுகதை, கவிதைகள் என்பவற்றினையும் இச்செந் தணல் ஏற்றுக்கொள்ளுமா?

A.விஜயகலா
எல்பட

### ஆசிரியர் அவர்களிற்கு

முதல் வணக்கம். நான் ஒரு தணலின் தீவிர வாசகன். அந்த வகையில் இக்கடிதம் வரைகின்றேன். நீண்ட நாட்களாக தணலின் கவிதைக்களம் பகுதியில். எனது கவிதையை இடம்பெறச் செய்ய வேண்டும் என்ற விருப்பம் ஆதலால். என் ஆக்கத்தை தங்களிடம் சமர்பிக்க விளைகின்றேன். எனது ஆக்கத்தை இணைத்துக்கொள்வீர்கள் என்று நம்புகின்றேன். மேலும் ஆசிரியர் அவர்களே இறுதியாக வெளியாகிய தங்களின் தணலில் கேட்டன் பிளேஸில் ஒரு அலுவலகப் பலகையில் தமிழ் மொழி சிதைக்கப்பட்டு இருந்ததை எடுத்துக்காட்டி இருந்தீர்கள். அன்பான ஆசிரியர். அவர்களே இது ரொம்பவும் வரவேற்கத்தக்கது இவ்வாறான உங்கள் பணிகள் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றேன். நாம் ஆயிரம் மொழிகளை கற்றாலும் எம் தாய் மொழி போல் எவையும் ஈடாகாது. இது பலருக்குத் தெரிவதில்லை.

பா.பிரதீபன்
வவுனியா

### என் அன்பிற்கு இனிய செந்தணலே

செம்மைகளையும் புதுமைகளையும்
நாடறிய, நாம் அறிய
பாரினிலே பகிர்நத்ளிக்கும்
உனக்கொருராயிரம் வந்தனங்கள்
உன்னுடைய அழகிய சேவை இந்த
அகிலத்தை ஆழ்த்திடவே, உன்னுடைய
அழகிய பெயர்
இம்மண்ணில் செழித்துடவே,
ஓராயிரம் வாழ்த்துக்கள்.
என் வாழ்வில் வரிகொடுத்து
எழுத்திற்கு துணைகொடுத்த
செந்தணலே நீ வாழ்க
இந்த வானும் பூமியும் உள்ளவரையும்
உன்னுடைய அழகிய
பெயர் செழித்திடவே.

செந்தணல் பிரியன்
அல்லமுத்து செல்வா
நானுஓயா

### செந்தணல் ஆசிரியருக்கு

செந்தணல் பத்திரிகை முதல்முதலாய் வெளிவந்த நாட் கொண்டு நான் தணலின் பரம ரசிகன். உண்மையில் தணலின் அட்டைப்படகவர்ச்சிதான் முதலில் என் கண்களைத் தைத்தது. ஒரு சாதாரணமான தன்மையில் தான பக்கங்களைப் புரட்டினேன் விடயங்கள் யாவும் தரமானதாகய இருந்தாலும் இன்னும் நிறைய விடயங்களைச் சேர்த்திருக்கலாம் என்று என்மனதில் தோன்றியது. அடுத்தடுத்து வரும் இதழ்களையும் தவறவிடாமற் வாங்கிக் கொண்டு மிகுந்த எதிர்பார்ப்புடன் பக்கங்களைப் புரட்டுவேன். கொஞ்சங் கொஞ்சமாய் விடயங்களை கூட்டி வித்தியாசமான படைப்புகளையும் தந்து அசத்தி வருகிறீர்கள். கடைசியாய் வந்த 24 வது தணல் மிகப் பிரமாதம் ஆக்கங்கள் செய்திகள், கதைகள், கவிதைகள், கட்டுரைகள், சிறுவர் பகுதி, பொது அறிவு, பெண்கள் பக்கம், சினிமாப்பக்கம் என எல்லாமே தரமானதாகவும். அட்டைப் பக்கமும் இம்முறை மிகக் கவர்ச்சியாய் வந்துள்ளது இங்கு எங்கள் ஊரில் செந்தணல் ரசிகர்கள் அதிகம். கடைகளில் செந்தணல் பத்திரிகை இருக்கிறதா என்று கேட்பவர்கள் தான் அதிகம் அதோடு இன்னும் ஒன்று கூற வேண்டும் உங்கள் பத்திரிகையின் முதலாம் ஆண்டு பூர்த்தியை யொட்டி நடாத்தும் போட்டிகள் வரவேற்கத்தக்கது ஏனென்றால் கலைஞர்கள் அதிகமாய் உங்கள் பத்திரிகையின் போட்டியில் பங்குபற்ற ஆசை ஒருபுறம் இருக்க இந்தப் பத்திரிகை நடாத்துபவர்கள் சிறுவய தென்றாலும் திறமை மிக்கவர்கள் என்று பரவலாகப் பேசப்படுவதால் அவர்களையும் நேரில் காண வேண்டும் என்ற மிகுந்த ஆவலாலுமே இங்கள் ள மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்ற ஆர்வம் காட்டுவதாக தங்கள் ஆக்கங்களும் வெளிவருவதைப் பார்க்க வாங்குகின்றார்கள். இப்படி எல்லோர் மனதினையும் கொள்ளை கொண்ட செந்தணல் இன்னும் பல்லாண்டு காலம் வாழந்து வளர கோடி வாழ்த்துக்கள்

ஜி.சி.றோய்
கிளிநொச்சி

### வாசகர்களே,

இளைய எழுத்தாளர்களே உங்கள் தரமான ஆக்கங்களுக்கு செந்தணல் நிச்சயமாகக் களமமைத்துக் கொடுக்கும் ஆகவே உங்கள் தரமான ஆக்கங்களை எமக்கு தயங்காமல் அனுப்புங்கள் உங்கள் சிறுகதை, கவிதை போன்றவை கருத்துடன் சுருக்கமானதாக அமைந்தால் வரவேற்கத்தக்கது.

ஆசிரியர்.

# தமிழ் இனம் அகதிகளாக அலைகிறது சர்வதேச நிறுவனங்கள் அக்கறை

-சமயூரன்-

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மண்மீட்பு யுத்தத்தைச் சிங்கள இனவெறியாளர்களுக்கு எதிராக, தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ந்து யுத்தங்களைச்செய்ததையடுத்து அவைகளால் தாக்குப் பிடிக்க முடியாமல் சிங்கள இராணுவம் தத்தளித்தது. அதன் இறுதி முயற்சியே சமாதானப் பேச்சுவார்த்தைக்கு யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.

ஒரு நாட்டில் உள்நாட்டு யுத்தங்கள் ஏற்படுகின்றபோது அப்பிரதேசங்கள் பாதிக்கப்படுவதுடன், இடம்பெயர்வுகள் நடைபெறுவது வழமையாகும். ஆனால் யுத்தம் முடிவடைந்து சமாதானம் ஏற்பட்டால் மக்கள் தங்கள் பகுதிகளுக்கு மீளவும் வருவது இயல்பு.

வடகிழக்கு மாகாணங்களில் யுத்தம் இடம்பெற்றது. அதனால் பல்லாயிரக் கணக்கான மக்கள் தங்கள் சொந்த நிலங்களில் இருந்து வெளியேறி அன்னிய இடங்களில் இடம்பெயர்ந்து வாழ்ந்தார்கள். வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் ஒரு பகுதியினர் அரசினாலும் சர்வதேச நிறுவனங்களாலும் பராமரிக்கப்பட்டு, உதவிகள் வழங்கும் நலன்புரி முகாம்களில் அடைபட்டும் இருக்கின்றார்கள்.

அவர்களின் ஆசாபாசங்களுடனும் ஓரளவான அந்தஸ்துடனும் வாழ விரும்புகின்றார்கள். ஆனால் அவைகள் நலன்புரி முகாம்களில் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற மக்களால் அடைய முடியுமா? சர்வதேச நிறுவனங்களும் அரசும் என்ன செய்கிறது

சர்வதேச நிறுவனங்களும், அரசும் கொடுக்கின்ற அன்றாட உணவுகளை வழங்குவதால் மட்டும் அவர்களின் சமூக வாழ்வினைப் பூரணப்படுத்திக் கொள்ள முடியாது. இவைகளை அவர்கள் உணராதவர்களாக இருப்பது கவலைதருகின்றது.

அகதிமுகாம்களில் பல பிரதேச மக்கள் ஒரே கூரையின் கீழ் வாழ்வதால் பல்வேறுவகையான இன்னல்களை தினமும் அனுபவிக்கின்றார்கள், கல்வியின்மை, சமூக கலாச்சாரப் பண்பாட்டுப்பிரச்சனை பாலியல் பலாத்காரம், சிறுவர் துஷ்பிரயோகம் கட்டுப்பாடற்ற வாழ்க்கைமுறை. என பட்டியறபடுத்த முடியும்.

இந்த சமூகத்தை ஓர் சமூக அந்தஸ்துள்ளவர்களாக மாற்ற முடியாதா? நிச்சயமாக சர்வதேச நிறுவனங்களோ, அரசோ மனங்கொண்டு செயற்பட்டால் முடியும்.

ஆனால் அவர்கள் தொடர்ந்தும் அக்கறையீனத்துடன் செயற்படுவதால் தான் மக்கள் அகதிமுகாம்களில் இன்னும் அல்லல்படுகின்றனர்.

1949ம் ஆண்டு ஜெனிவாவில் வைத்தே பல நாடுகள் இணைந்து மனித நன்மைக்காக அவனுடைய சுதந்திரத்தில் பாதிப்புக்கள் எற்படுகின்ற போது தட்டிக் கேட்கும்முகமாக சர்வதேச மனித உரிமை பிரகடனம் செய்யப்பட்டது.

ஆனால் அந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்ட சர்வதேச நிறுவனங்களே மனித உரிமைகளை தமிழ் சமூகத்திற்கு பெற்றுக்கொடுக்காமல், எங்கள் மண்களில் உலாவிக்கொண்டிருப்பது நியாயமான விடயமா?

அகதி வாழ்க்கையினை அகதிமுகாம்களிலுள்ள மக்கள் முற்றாக வெறுக்கின்றார்கள். தங்கள் சொந்த நிலத்திற்கு சென்று சுயதொழில்களைச் செய்து சுதந்திரமாக வாழ்க்கையினை வாழ்வதற்கு விரும்புகின்றார்கள்.

சர்வதேச நிறுவனங்களோ, அரசாங்கமோ அவர்களை மீளக் குடியமர்த்தவில்லை. அப்படிச்செய்யப்பட்ட ஒரு சில குடியேற்றத்திட்டங்களில் குடியேறிய மக்கள் பல பிரச்சினைகளை அந்தப் பிரதேசங்களில் அனுபவிக்கின்றார்கள். அதாவது போக்குவரத்து, சுகாதாரம், சுயதொழில், ஜீவனமின்மை போன்றவைகளால் மிகக்கஸ்ரப்பட்டு வாழ்கின்றார்கள்.

இவைகளைப் பார்த்த ஏனையோர் அகதிமுகாம்களிலிருந்து செல்ல விருப்பமில்லாதவர்களாக செயற்படுகின்றார்கள்.

இவைகளிலிருந்து நோக்கும் போது தமிழ் இனம் அகதிமு காம்களில் அங்கலாய்த்து சீரழிந்து கொண்டு இருப்பதில் சர்வதேச நிறுவ னங்கள் அக்கறையுடன் செயற்படுவதை தெட்டத்தெளிவாக காட்டுகின்றது.

# ஓய்வூதியம் பெறுவோர் ஏமாற்றம்

மாவனல்லை நிருபர் எஸ்.ஹமீட்

ஓய்வூதியம் பெற்றுவரும் அரசாங்க ஊழியர்களுக்கான மேலதிகக் கொடுப்பனவுகளை வழங்குவதில் கேகாலை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் ஆமை வேகத்திலேயே இயங்கிவருகின்றன.

ஓய்வூதியம் பெறுவோரின் சம்பள முரண்பாடு கடந்த ஐ.தே.முன்னணி அரசின் இறுதிக்காலப்பகுதியில் நீக்கப்பட்டதனால் 2004.01.01 லிருந்து ஓய்வூதியம் பெற்றுவரும் அரச ஊழியர்கள் கணிசமான தொகைப் பணத்தை நிலுவையாகப் பெறவுள்ளதுடன் மாதாந்த ஓய்வூதிய வேதனமும் இவர்களுக்கு அதிகரிக்கிறது.

இதன்பொருட்டு கடந்த மாதங்களில் ஓய்வூதியம் பெறுவோரிடம் விபரங்கள் கோரப்பட்டு இவ்விபரங்கள் ஓய்வூதியம் பெறுவோரினால் அவ்வப்பகுதி பிரதேசச் செயலகங்களில் ஒப்படைக்கப் பட்டுமுள்ளன. என்றாலும் வழங்கப் படவுள்ள மேலதிக கொடுப்பனவுகளும், புதிய ஓய்வூதிய வேதனமும் இன்னும் ஓய்வூதியம் பெறுவோருக்குக் கிடைத்ததாயில்லை. இதனால் வயது முதிர்ந்த ஓய்வூதியம் பெறுவோர் பலருக்கும் பிரதேச செயலகங்களுக்கு அடிக்கடி சென்று அலைக்களியும் நிலை ஏற்பட்டுள்ளது.



அண்மையில் அமைச்சர் திரு.டக்ளஸ்தேவானந்தாவை கொட்டகலை ஸ்ரீ.முத்துவிநாயகர் ஆலய பரிபாலன சபையின் ஆலய நிருமாண பணிசம்மந்தமாக கலந்துரையாடிய பிறகு அமைச்சருடன் எடுத்துக் கொண்டபடம்.

இடமிருந்து வலமாக ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு.எம்.மோகனதாஸ், திரு.எம்.பிரதீப், அமைச்சர், மற்றும் திரு.பிரகாஸ், திரு.கணேசன், செயலாளர் திரு.விஸ்வநாதன் ஆகியோர்.




மன்னார் வாழ்வுதய நிறுவனமும் வூஸ் (Wuse) நிறுவனமும் இணைந்து மன்னார் பெரிய குஞ்சுக்குளத்தில், அண்மையில் 25 மாணவர்களுக்கு மேசன் தொழில் பயிற்சியை ஆரம்பித்து வைக்கும் முகமாக வாழ்வுதயநிறுவன இயக்குனர் அருட் தந்தை இயேசுராஜா அடிகளார் அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதை படத்திற் காணலாம்.

## வவுனியா மாவட்ட பின்தங்கிய கிராமங்களுக்கான அபிவிருத்தித்திட்டங்கள்

வவு-நிரூ

வவுனியா மாவட்டத்திலிலுள்ள பன்றிக் கொய்தகுளம், கொல்லர் புளியங்குளம் மக்களின் தேவைகளை இனங்கண்டு, *NECORD* திட்டத்தின்மூலம் கிராம அபிவிருத்தி திட்டத்தைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் செயற்படுத்தவுள்ளது.

வவுனியா நகரிலிருந்து 35 மைல் தொலைவில் *A9* பாதையில் உள்ள கொல்லர் புளியங்குளக் கிராமத்தில் 65 குடும்பங்களை மீளக்குடியமர்த்தி, அவர்களுடைய அத்தியாவசியத் தேவைகளையும் ஏனைய தேவைகளையும் நிறைவேற்றுவததற்கு நடவடிக்கை எடுப்பதாக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் *NECORD* திட்ட இணைப்பாளர் ரி.தயானந்தனந்தன் கூறியுள்ளார்.

இதேபோன்று பன்றிக்கொய்தகுளம் கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை இனங்கண்டு அதற்கான கிராம அபிவிருத்தித்திட்டத்தை வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் (*VDRO*) செயற்படுத்தவுள்ளது.

## வீட்டுத்திருத்த வேலைகள் முடிவடைந்துள்ளது

ச.மயூரன்

வடகிழக்கு யுத்தத்தால் ஓரளவு பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த நெடுங்கேணிக்கிராமத்திலுள்ள 18 வீடுகளுக்கான சகல திருத்தப் பணிகளும் நிறைவடைந்துள்ளது.

இவ்வேலைத்திட்டத்தினை வவுனியா தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டது. இதற்கான நிதியினை NECORD நிறுவனம் வழங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

18 வீடுகளுக்கும் உரியவர்கள் தங்கள் வீடுகளுக்கான திருத்தப்பணி நிறைவடைந்ததால் வீடுகளில் பூரணமாகக் குடிவந்துள்ளனர். இவர்கள் யுத்த அனர்த்தத்தால் ஏனைய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து வாழ்ந்திருந்தனர்.

## கேகாலை மாவட்டத்தில் பல தமிழ் - முஸ்லிம் பாடசாலைகளில் நிரந்தர அதிபர் இல்லை

மாவனல்லை நிருபர் - எஸ். ஹமீட்

கேகாலை மாவட்டத்தில் உள்ள தமிழ் மூலப்பாடசாலைகள் பலவும் நீண்டகாலமாக நிரந்தர அதிபர்கள் இன்றியே இயங்கிவருகின்றன.

இம்மாவட்டத்திலுள்ள ஒரே ஒரு தமிழ் மூல தேசியப்பாடசாலையான மாவனல்லை ஸாஹிரா தேசியக்கல்லூரி உட்பட மாவனல்லை பதுரிய்யா மத்திய கல்லூரி, அரனாயக்கா முஸ்லிம் மஹா வித்தியாலயம் வறகக்காப்பொளை பாபுல்ஹஸன் மத்திய கல்லூரி கண்ணத்தோட்டை சுலைமானிய மத்திய கல்லூரி போன்ற பெரிய வித்தியாலயங்கள் பலதிலும் நிரந்தர அதிபர்கள் இல்லை. இதே போன்று கேகாலை மாவட்டத்திலுள்ள அதிகமான தோட்டப்பாடசாலைகளும் நிரந்தர அதிபர்கள் இன்றியே இயங்கி வருகின்றனர்.

தகமையும் தகுதியும் வாய்ந்த பல சிரேஷ்ட ஆசிரியர்கள் இம்மாவட்டத்திலிருந்தும் நிரந்தர அதிபர்கள் நியமிக்கப்படாமல் இயங்கும் தமிழ் முஸ்லிம் பாடசாலைகளையிட்டு பெற்றோர்களும், புத்திஜீவிகளும் கவலை கொண்டுள்ளனர்.

## பாகிஸ்தான் ஜனாதிபதி பேர்வஸ் முஷாரப் இம்மாத இறுதியில் இலங்கைக்கு வருகைதரவுள்ளார்

யூலைமாதம் 31இல் வருகைதரவிருக்கும் முஷாரப் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திடுவாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

1998 டிசம்பரில் இலங்கையும் இந்தியாவும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. பாகிஸ்தானுடன் இலங்கை சுதந்திரவர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதன் மூலம் இலங்கைக்கான ஏற்றுமதி விடயத்தில் கடும் போட்டி எற்படுமெனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

புதுடில்லியில் இந்தவாரம் இந்திய பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலாளர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியமை உட்பட இருநாடுகளுக்குமிடையிலான உறவுகளில் தற்போது ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் தொடர்பாக இருநாட்டுத் தூதுவர்க்ளும் கொழும்புச் சந்திப்பில் கலந்துரையாடினர். உயர்மட்டச் சந்திப்புகள் இருநாடுகளுக்குமிடையிலான வேறுபாடுகளைக் குறைப்பதற்கு உதவுமென இருநாட்டுத் தூதர்களும் அபிப்பிராயம் தெரிவித்தனர் அத்துடன் இருநாடுகளுக்குமிடையிலான நல்லுறவுப் பிராந்தியத்தின் சமாதானத்துக்கும் ஸ்திரத்தன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் உதவுமென்பதில் இரு தூதுவர்களுமே இசைவான கருத்தைக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் உளவுப்பிரிவின் உயர் அதிகாரியாகவிருந்த பாஸிர் இலங்கைக்கான தூ[illegible]வராக நியமிக்கப்படுவதனால் தென்நிந்தி[illegible]வில் பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் அதிகரிக்கும் நிலமை ஏற்பட்டு தீவிரவாதிகள் தமிழ்நாடு, கேரளம் உட்பட தென்னிந்திய மாநிலங்களுக்குள் நுழையும் வாய்ப்பு ஏற்படுமெனவும் இந்திய ஊடககங்களில் சாதேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## மன்னாரில் டெங்கு ஒழிப்புப் பேரணி

மன்னாரில் கடந்த 21ம் திகதி தொடக்கம் 27ம் திகதிவரை டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மன்னார் மாவட்ட சுகாதாரத் திணைக்களம் இவ்வாரத்தை பிரடகனப் படுத்தி இருந்தது.

வீடுகள், பாடசாலைகள், அரச, தனியார் நிறுவனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் மற்றும் பொது இடங்கள் என்பவற்றில் டெங்கு நுளம்பு பரவாது இருக்குமுகமாக கூளம், குப்பைகள் அகற்றப்பட்டு துப்பரவு செய்யப்பட்டது. இந்த நடவடிக்கைகளுக்குஅனைவருமே ஒத்துழைப்பு நல்கினர்.

இந்நடவடிக்கையின் ஒரு கட்டமாக டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கடந்த 25ம் திகதி மன்னார் நகரில் பேரணி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

மன்னார் நகர மண்டபத்திலிருந்து மன்னார் நகரை வலம் வந்து, மீண்டும் பேரணி நகரமண்டபத்தை வந்தடைந்தது இதில் பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் அரச அரசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மன்னார் அரச அதிபர் வே.விஸ்வலிங்கமும் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

நகர மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் டெங்கு ஒழிப்பு தொடர்பாக பல்வேறுபட்ட கருத்துரைகளையும் வழங்கினர்.

அனைவரும் டெங்கு நோயிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் இதற்காக எல்லோருமே ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனவும் கோரிக்கைகள் விடப்பட்டன.




## பிரித்தானியாவில் ஏழாவது சைவ மாநாடு – 2004

பிரித்தானியாவில் சைவக்கோயில்கள் ஒன்றியத்தின் ஏழாவது சைவ மாநாடு இம்மாதம் 10ம்,11ம் திகதிகளில் நடைபெற வுள்ளது.

வருடாவருடம் அங்கு வாழும் தமிழ் மக்களிடையே சைவசமய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நடாத்தப்படும் மாநாடுகளில் பல்வேறு நாட்டு சைவ சமய அறிஞர்கள். ஆத்மீகநெறியாளர்கள் பங்கு கொள்வார்கள்.

இவ்வாண்டு பிரித்தானியாவின் இரு முக்கிய ஆலயங்களான உயர்வாசற்குன்று முருகன் ஆலயத்திலும், லண்டன் சிவன் கோவிலிலும் இம்மாநாடு இடம் பெறவுள் ளது. இந்த இருநாள் நிகழ்ச்சிகளில் இலங்கைப் பல்கலைக்கழக பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், இந்தியாவிலிருந்து உயர்நீதிமன்ற நீதியரசர் சு.மோகன், சைவ சித்தாந்த வித்யாநிதி ச. சண்முகவடிவேல் ஆகியோர் பேருரைகள் நிகழ்த்தவுள்ளனர்.

## தீவிரவாதிகளின் வெடிகுண்டுத்தாக்குதல்

ஸ்ரீநகரில் வெடிகுண்டுத்தாக்குதலில் இருவர் பலியானதோடு, 29பேர் படுகாயம் அடைந்துள்ளனர். ஜம்மு காஸ்மீரின் வங்கிக்கு அருகில் கைவண்டி ஒன்றில் பழங்களை விற்பவர் போன்று வேடமிட்டு வந்த தீவிரவாதிகள் பள்ளி மாணவ மாணவிகள் பஸ்ஸிற்காக காத்துக்கொண்டிருந்த வேளையில் திடீரென வெடிகுண்டை வெடிக்க வைத்துள்ளனர். இதனால் 31பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் உடனடியாக வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் 2 பள்ளி மாணவர்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். ஏனையோரில் 6பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதுடன் மற்றையோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## அமெரிக்கப்படைவீரர் ஹசூனை சிரச்சேதம் செய்ததை ஈராக்கிய போராளிகள் நிராகரிப்பு

கடந்த சனிக்கிழமை இரு இஸ்லாமிய இணையத் தளங்களில் அன்சார் அல்-சுன்னா அமைப்பு, தாம் பணயக்கைதியாகப் பிடித்து வைத்திருந்த லெபனானில் பிறந்த 24 வயதான அமெரிக்க இராணுவ கோப்ரலான ஹசூனை சிரச்சேதம் செய்ததாக அறிக்கை வெளியிட்டிருந்தது. இதனையடுத்து ஹசூன் சிரச்சேதம் செய்யப்பட்டதாகவே கருதப்பட்டது.

ஆனால் தற்போது ஹசூன் சிரச்சேதம் செய்யப்பட்டதாக இணையத்தளத்தில் வெளியான அறிக்கையையோ அல்லது தற்போது அல்-சுன்னா அமைப்பு இணையத்தளத்தினூடாக இப்போது விடுத்திருக்கும் அறிக்கையையோ உறுதிப்படுத்த முடியாமலிருக்கிறது எனவும், ஹசூன் கொலை செய்யப்பட்டதை உறுதிப்படுத்தக்கூடிய எந்த விதமான ஆதாரமும் இல்லையெனவும் அமெரிக்க இராணுவமும் லெபனான் வெளிவிவகார அமைச்சும் தெரிவித்துள்ளது.

## குட்டிச்சாத்தானா? மந்திரவாதியா?

உடுமலை அருகே குட்டிச்சாத்தானால் இருவர் பலியானதை அடுத்து சுற்றியுள்ள கிராமவாசிகளிடம் குட்டிச் சாத்தான் குறித்து பெரும் பீதி பரவியுள்ளது.

உடுமலையில் இருந்து திருமூர்த்திமலை செல்லும் வழியில் உள்ள ஜல்லிபட்டி கிராமத்தைச் சேர்ந்த லட்சுமி அம்மாள் (வயது 57), ராம்பிரசாத் (வயது 7) ஆகியோர் மர்மமான முறையில் அடுத்தடுத்து இறந்துள்ளனர். இவர்கள் மரணத்திற்கு ஜல்லிபட்டி கிராமத்தில் வசிக்கும் ர.நடராஜ் (வயது 55) என்ற மந்திரவாதிதான் காரணம் என்ற பொதுமக்களின் குற்றச்சாட்டின் பேரில் பொலிசார் அவரைக் கைது செய்துள்ளனர்.

மந்திரவாதியிடம் 5 குட்டிச்சாத்தான்கள் இருப்பதாகவும் அதை வைத்து அவர் பல தீயகாரியங்களை நடத்தி வருவதாகவும் மக்கள் கூறியுள்ளனர். இறந்த ராம்பிரசாத் என்ற பள்ளி மாணவன் அன்று மாலை மந்திரவாதி வீட்டுத் திண்ணையில் இருந்து கடலை சாப்பிட்டுக் கொண்டிருந்த போது திடீரென ஏதோ ஒன்று கன்னத்தில் அறைந்து விட்டதாக அழுது கொண்டு வந்தான். சிறிது நேரத்தில் வாயில் நுரைதள்ள மயங்கி விழுந்தான். மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே இறந்து விட்டான். அதற்கு மந்திரவாதிதான் காரணம் என்று பொலீஸில் கூறிய பிரசாந்தின் தந்தை சிவகுமார் உடனடியாக அவரைக் கைது செய்யும்படி கூறினார்.

இதையடுத்து கைது செய்யப்பட்ட மந்திரவாதியிடம் விசாரணை நடத்திய போது மறுத்துக்கூறிய அவர்தான் கடவுளை மட்டும் பூஜை செய்வதாகக் கூறினார். அவரது வீட்டைச் சோதனையிட்ட பொலிஸார் அங்கு மண்டையோடுகளும் சாம்பல்களும் வேறு இத்யாதி பொருட்களையும் கண்டு அவரது வீட்டைச் சீல் வைத்து மந்திரவாதியை கடும் விசாரணைக்கு உட்படுத்தி உள்ளனர்.

## ரஜனி என்னிடம் ஆசிர்வாதம் வாங்கினார்.



சேலத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டுவரும் இளம் சாமியார் பரணிதரன் திருமண மண்டபம் ஒன்றில் அவர் பெற்றோராலேயே கடத்தப்பட்டு இப்போது போலீசின் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

பரணிதரன் பற்றி அவரது பெற்றோர்கள் குறிப்பிடுகையில், "சிறு வயதிலேயே அவனுக்கு கடவுள் பக்தி அதிகமாக இருந்ததால், நாங்கள் தான் விருப்பப்பட்டு காஞ்சி மடத்தில் சேர்த்தோம். ஆனால் அவன் மந்த்ராலயத்தில் சந்நியாசம் வாங்கிக் கொண்டதாகச் சொல்லிக்கொள்கின்றான். சந்நியாசம் என்பது 18 வயதில் அதுவும் காஞ்சி சங்கரமடத்தில் தான் கொடுக்கப்பட வேண்டும். எங்கள் மகன் மூலம் உலகத்திற்கு நன்மை ஏற்படவே விரும்புகின்றோம். ஆனால் சந்நியாசம் கொடுத்தாகச் சொல்லி இவனை மையமாக வைத்து முறைகேடான வழிகளில் பணம் சம்பாதிக்க முயல்கிறார்களோ என்றுதான் பயமாக இருக்கிறது" என்று குறிப்பிட்டார்கள்.

அதேவேளை பரணிதரனோ "நான் சந்நியாசம் பெற்றுவிட்டேன். இனிமேல் பெற்றோருடன் வசிப்பது தர்மம் அல்ல. அவர்கள் என்னுடன் வந்து தங்கி எனக்கு சீடர்களாக இருந்து கொண்டு பணிவிடைகள் செய்யட்டும். எனது பெற்றோர்கள் குறிப்பிட்டது போல், ஒரு குறிப்பிட்ட இனத்தினரை மட்டுமே எனது சீடர்களாக வைத்துக் கொள்ள முடியாது. நானோ பற்றற்றவன் எப்படி நான் இனவேற்றுமை கொள்வேன்?" என்று கூறிய சாமியார் அதிர்ச்சி தரும் இன்னொரு தகவலையும் குறிப்பிட்டார்.

"நான் மந்த்ராலயத்தில் இருக்கும் போது வேட்டி சட்டையுடன் உத்திராட்சம் அணிந்த ஒருவர் எனது பாதங்களில் பணிந்து நமஸ்காரம் செய்து ஆசீர்வாதம் வாங்கி, தனது வீட்டில் வைப்பதற்காக பூஜிக்கப்பட்ட ராகவேந்தர் படம் ஒன்றும் வாங்கினார். அப்போது அருகில் நின்றவர் இவர்தான் "ரஜனிகாந்" என்று சொன்னார் அப்போதுதான் நான் அவரைப் பார்த்தேன்" என்கிறார்.

இந்த இளம் சாமியாருக்கு பக்தர்கள் சார்பில் நன்கொடை என்ற பெயரில் பணமும் பொருளும் நிறையவே குவியத் தொடங்கி உள்ளன. இவற்றைச் சுற்றிப் புதிதாக நிரம்பிவழியும் சீடர்களும், பக்தர்களும் உண்மையானவர்களா? நம்பிக்கைக்குரியவர்கள்தானா? போலீசின் சந்தேகம் வலுக்கத் தொடங்கி தீவிர புலன் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

## ஈராக் நீதிமன்றத்திற்கு சவாலாக விளங்கும் சதாம்

பல குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகி ஈராக் நீதிமன்றத்தின் முன் நிற்கும் அதன் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் சட்டம் படித்தவர். இதனால் நீதிமன்ற விசாரணையில் அவர் ஒரு சவாலாக விளங்குவார் என குற்றச் சாட்டுகளுக்கு ஆளாகி நீதிமன்ற விசாரணையில் உள்ள முன்னாள் உயர் அதிகாரிகளின் வழக்கறிஞராக இருக்கும் அரீப் இஸ்சாட் தெரிவித்தார்.



கடந்த ஆண்டு டிசம்பர் 10ம் திகதி சென்றவாரம் பதவிவிலகிய அமெரிக்கத் தலைமை நிர்வாகி, போல் பிரிமர், பிறப்பித்த உத்தரவின்படி சதாம் மீது விசாரணை நடத்தப்படுகிறது. போர் குற்றங்கள், இனப்படுகொலை, மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் எனப் பல குற்றச் சாட்டுக்கள் சதாம் மீது பதிவு செய்யப்பட்டுள்ளன.

சதாம் 20 ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்து பல சட்டங்களில் கையெழுத்திட்டவர். அவருக்கு சட்ட நுணுக்கங்கள் நன்கு தெரியும் அவருக்கு எதிராக அமர்ந்து இருக்கும் நீதிபதியோ 1999 ஆம் ஆண்டில் சட்டம் படித்து விட்டு பதவிக்கு வந்துள்ளார் என்றும் அந்த வழக்கறிஞர் குறிப்பிட்டார்.

வியாழக்கிழமை முதல்நாள் விசாரணை நடைபெற்றது. 25 நிமிடங்கள் நடைபெற்ற இந்த விசாரணை வீடியோ நாடாவில் 12 நிமிட நீதிமன்ற நடவடிக்கைகளே தெளிவாகக் கேட்க முடிகிறது. இந்த வீடியோ நாடாவை அமெரிக்கா இராணுவம் வெளியிட்டது.

விசாரணையின் போது நான் ஈராக் நாட்டின் ஜனாதிபதி, நீதிபதியோ ஈராக்கில் உள்ள கூட்டணிப் படைகளால் நியமிக்கப்பட்டவர் என்று உரத்த குரலில் சதாம் குறிப்பிட்டதை அவர் சுட்டிக் காட்டினார். விசாரணை நடைபெறும் போது நீதிபதிக்கு சதாம் ஒரு சாவாலாக இருப்பார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சதாம் ஹுசைனுக்காக வாதாட லிபிய ஜனாதிபதி கடாபியின் மகள் ஆயிஷா ஆஜராகவுள்ளார். இவர் சட்டத்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றவர். இவர் சதாமுக்காக ஆஜராகும் வழக்கறிஞர் குழுத் தலைவர் முகமட் ரஷ்டானைச் சந்தித்து சதாமிற்காக வாதாட விரும்புவதாக தெரிவித்ததையடுத்து, இவர் இந்தக்குழுவில் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளார். இவரோடு சேர்ந்து மொத்தம் 29 வழக்கறிஞர்கள் சதாமுக்காக வாதாடவுள்ளனர்.

நாங்கள் சதாம் ஹுசைனுக்கு ஆதரவாக ஆஜராகக் கூடாதென்று எங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்கள் வந்துள்ளன. எங்கள் அலுவலகங்களை வெடிகுண்டு வைத்து தகர்த்தப் போவதாகவும் மிரட்டல்கள் வந்துள்ளனவென இவ்வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பொழுது போக திருமணங்களா?

"முறைகேடான வழிகளில் நெற்வேக் மூலம் மைனர் பெண்களை அரபியர்களுக்கு மணமுடித்து வைத்த ஷம்சுதீன் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதையடுத்து சில காஜிக்களும் இதில் சம்பந்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு மாதமும் ஹைதரபா மைனர் பெண்களுக்கும் அரபியர்களுக்கும் நெற்வேக் மூலம் 35 திருமணங்கள் நடந்துள்ளதாக தெரியவந்துள்ளது. சில தினங்களிலேயே சில பெண்கள் விவாகரத்துச் செய்யப்படுகின்றனர். சிலரை அரபியர்கள் தங்கள் நாட்டுக்கு அழைத்துச் சென்று வேலைக்காரியாக அமர்த்துகின்றனர். "இந்தத் திருமணங்களைச் சட்ட ரீதியாக தடுக்க முடியாது" என கூடுதல் பொலிஸ் கமிஷனர் ஏ.கே.கான் தெரிவித்துள்ளார்.

இப்படி ஏழை முஸ்லீம் பெண்களை கடத்திச் செல்வது 1991 இல் தான் அம்பலமானது. நரைதட்டிக் கிழவராய்ப் போன ஒருவருக்கு 11 வயதேயான ஆமினா என்ற பெண் கட்டாயமாக கடத்திச் சென்று கல்யாணம் செய்து வைக்கப்பட்டாள். இதைத்தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன இதனால். நின்று போயிருந்த இத்தகைய திருமணங்கள் இப்போது மீண்டும் அம்பலத்துக்கு வந்துள்ளது.

இவ்வாறு ஏமாறும் பெண்களை பாலியல் தொழில் செய்ய ஈடுபடுத்துகின்றார்கள். முஸ்லீம் மதகுருமார்களும் சமூகத் தலைவர்களும் இப்படிப் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டும் காணதவராய் இருப்பதுதான் ஆச்சரியம்.

இவ்வாறான திருமணங்களை எதிர்த்து கடும் சட்ட நடவடிக்கைகளை இந்தியா எடுக்க வேண்டும். இவ்வாறு ஜெரானி என்ற அரபியரால் திருமணம் செய்யப்பட்டு இரண்டு நாட்களில் கைவிடப்பட்ட ஹசீனா பேகம் பொலீஸில் அம்பலப்ப டுத்துயுள்ளார்.

# சமாதான முன்னெடுப்புகளுக்கான அறிகுறிகள் அரசாங்கத்திடம் இன்னும் இல்லை

வே. தி. திருமாறன்

இலங்கை அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படலாம் என்ற நம்பிக்கை நாளுக்நாள் தேய்ந்து கொண்டிருக்கின்றது. இரு தரப்பினருக்கும் இடையிலான போர் நிறுத்தமும், தொடர்ந்து எவ்வளவு காலத்திற்கு நீடிக்கப் போகின்றது என்ற கேள்வியும் இப்போது பூதாகரமாக எழுந்து நிற்கின்றது.

சமாதான முயற்சிகளுக்கான அனுசரணையாளர்களாகிய நோர்வே தரப்பினர் ஒரு மாதகால இடைவெளிக்குள் இரண்டாவது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்து தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் முன்னெடுப்பதற்காக மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்துவிட்டது.

"எமது இந்த விஜயத்தின் போது" குறிப்பிடத்தக்க வெற்றி எதுவும் கிடைத்ததாகச் சொல்வதற்கில்லை. அனுசரணையாளர்கள் என்ற முறையில் இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்கு விரைவில் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் நாங்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றோம்" என்று இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியதன் பின்னர் கிளிநொச்சியில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். அவருடைய இந்தக் கூற்று சமாதான முயற்சிகளின் இப்போதைய நிலைமையை மிகவும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்காக கிளிநொச்சிக்குச் செல்வதற்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவைச் சந்தித்து சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள முயற்சித்த போதிலும் அது கைகூடவில்லை. இதனால், அரசாங்கத்தின் நிலைப்பாடு பற்றி ஜனாதிபதியின் ஊடாக எதனையும் பெற முடியாத நிலையிலேயே அவர் வன்னிக்குச் சென்ற விடுதலைப்புலிகளின் அரசியற் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

"சமாதான பேச்சுக்களிலும், போர்நிறுத்த ஒப்பந்தத்திலும், அரசாங்கமும் ஜனாதிபதியும் உண்மையாகவே ஆர்வம் இருக்குமானால், படுகொலைகளுக்குப் பின்னணியில் இருந்து செயற்பட்டு, மட்டக்களப்பில் இயல்பு நிலைமையைக் குழப்புவதற்குக் காரணமாக உள்ள கருணாவுக்கு ஆதரவு கொடுப்பதை அவர்கள் நிறுத்திக் கொள்ளவேண்டும். இதைத்தான் நாங்கள் அனுசரணையாளர்களிடம் தெரிவித்தோம்" என்று நோர்வே குழுவினருடனான சந்திப்பு குறித்து செய்தியாளர்களிடம் விளக்கமளித்த விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் நோர்வையின் விசேட தூதுவர் எரிக் சொல் ஹெய்முக்கும் இடையிலான சந்திப்பு கடந்த மாதம் 30ஆம் திகதி கிளிநொச்சியில் உள்ள அரசியற்துறை நடுவப் பணியகத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போது கருணாவுக்கு இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கும் விவகாரமே முதன்மை பெற்றிருந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பினருடன் முரண்பட்டுக்கொண்டு அவ்வியக்கத்திலிருந்து பிரிந்து சென்ற ஒருவரைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளைப் பலவீனமாக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் போது அதனுடன் எவ்வாறு சமாதான பேச்சுக்களை நடத்த முடியும் என்ற கேள்வி விடுதலைப் புலிகள் தரப்பில் மிகவும் உரமாக எழுப்பப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படை அம்சங்களை மீறும் வகையிலேயே கருணாவுக்கு இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கியுள்ளார்கள். அத்துடன், கருணாவைப் பயன்படுத்தி இராணுவத்தின் உளவுப் பிரிவினர் விடுதலைப் புலிகள் மீது ஓர் உளவியல் யுத்தத்தை ஆரம்பித்துள்ளார்கள். மட்டக்களப்பு பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள், அவர்களின் ஆதரவாளர்கள் மற்றும் புத்திஜீவிகள், செய்தியாளர்களும் இந்த யுத்தத்தின் மூலம் வேட்டையாடப்பட்டு வருகின்றார்கள். இந்த வகையிலேயே கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறைத் தலைவரும் மூத்த விரிவுரையாளருமாகிய குமாரவேல் தம்பையா, மூத்த செய்தியாளர் ஐயாத்துரை நடேசன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் திட்டமிட்ட முறையில் தமது கையாட்களை வைத்து கருணாவின் கீழ் ஓர் இருண்ட யுத்தத்தை ஆரம்பித்துள்ள இராணுவத்தினருக்குத் தலைமைத் தளபதியாக இருக்கும் ஜனாதிபதியுடன் இந்தக் கட்டத்தில் சமாதானப் பேச்சுக்களை எவ்வாறு நடத்த முடியும் என்பதில் விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் கடும் சீற்றத்துடன் இருப்பதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் மூலம் தகவல்கள் கசிந்திருக்கின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக ஒரு தலைப்பட்சமாக விடுதலைப் புலிகளே முதன் முதலில் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடித்தார்கள் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். கடந்த 2002 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட விடுதலைப்புலிகள் போர் நிறுத்தம் செய்து கொண்டார்கள். இதன் மூலம் ஒரு தலைப்பட்சமாக இருந்த போர் நிறுத்தம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் முழுமையான ஒரு போர் நிறுத்தமாகப் பரிணமித்தது.

கடந்த ஏப்ரல் 2ம்திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலின் மூலம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியைக் கைப்பற்றியதும், நடைமுறையில் இருந்த போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைபிடிக்கப்போவதாக ஜனாதிபதி அறிவித்தார். இதற்கான உத்தரவும் படைத்தரப்பினரிடம் விடுக்கப்பட்டது. யுத்த நிறுத்தம் புதிய அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து முன்னாள் கிழக்கு மாகாணத் தளபதி கேணல் கருணா பிரிந்து சென்றதும் ஏற்பட்ட தலைகீழான அரசியல் சூழ்நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலான போர் நிறுத்தத்தை ஜனாதிபதி சந்திரிகா சரியான முறையில் பேணவில்லை என்பதே விடுதலைப்புலிகளின் குற்றச்சாட்டாக உள்ளது. அரசாங்கத்துடன் குறிப்பாக இராணுவத்தின் உளவுப்பிரிவினருடன் இணைந்து செயற்படுகின்ற தமிழ்க்குழுக்களின் செயற்பாடுகள் இந்தப் போர் நிறுத்தத்தின் பலவீனமான தொடர்புச் செயற்பாடாக இருக்கின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தனிப்பட்ட படையணிகள் என்ற மகுடத்தின் கீழ் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 1.8ஆம் பிரிவில் முக்கியமான விடயம் ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது. "போர் நிறுத்தம் அமுலுக்கு வருவதற்காக கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வந்த தினதிலிருந்து 30 நாட்களுக்கு தமிழ் ஆயுதக்குழுக்கள் கலைக்கப்பட வேண்டும். அல்லது இந்தக் குழுக்களை அரசாங்கத்துடன் இராணுவ கட்டமைப்புக்குள் உள்வாங்கி அதன் ஓர் அம்சமாக மாற்றிக்கொள்ள வேண்டும். அத்துடன் அவற்றின் செயற்பாடுகள் அனைத்திற்கும் அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். இல்லையேல் அத்தகைய குழுக்களை வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு வெளியில் செயற்படத்தக்கதாக அப்புறப்படுத்திவிட வேண்டும். இதனையே புரிந்துணர்வு (போர் நிறுத்த) ஒப்பந்தத்தின் 18 ஆம் பிரிவு குறித்துக் கூறுகின்றது.

இதனடிப்படையில் பார்க்கும்போது கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தின் ஆதரவு டன் செயற்படுகின்ற குழுக்களின் செயற்பாடுகளுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். இதனை அரசாங்கம் தட்டிக்கழிக்க முடியாது. போர்நிறுத்தத்தைச் செம்மையாகக் கடைப்பிடிப்பதனால் இத்தகைய செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய கட்டாயப் பொறுப்பும் அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரண்டு வருடகால போர்நிறுத்த ஒப்பந்தம் இந்த வகையிலேயே இப்போது சிக்கலுக்குள்ளாகி இருக்கின்றது.

இந்த விபரங்கள் குறித்து நோர்வே தரப்பினருடான பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகள் எடுத்துரைத்து. கருணாவுக்கு ஆதரவளிப்பதை அரசாங்கமும், இராணுவத்தினரும் விலக்கிக் கொள்ள வேண்டும் என எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

இந்தச் சந்திப்பின் பின்னர் கொழும்பு திரும்பிய நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதியை நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடிய போது விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறினார். ஆனால் ஜனாதிபதி முதல் தடவையாக, இராணுவம் கருணாவிற்கு ஆதரவளித்து பாதுகாப்பு வழங்குகின்றது. என்ற புலிகளின் குற்றச்சாட்டை மறுத்துள்ளார். அத்துடன் போர் நிறுத்தத்தை இராணுவத்தினர் தொடர்ந்து கடைப்பிடிப்பார்கள் என்றும்' அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் கருணாவுடன் ராணுவத்திற்கு எதுவித தொடர்பும் இல்லை என மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இராணுவத்தின் போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பார்கள் என்று ஜனாதிபதி நம்புவதாகவும் தெரிவிக்கப்டுகின்றது. அது மட்டுமல்லாமல் வடகிழககுப் பகுதியில் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து திட்டங்கள் அமுல் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்தம் தொடர்பாகவும், சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாகவும், இப்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கும் இத்ன மீது ஏற்பட்டுள்ள சந்தேகங்களுக்கும் தீர்வு காணும் வகையில் ஜனாதிபதியின் நிலைப்பாடு பொருத்தமானதாக அமையவில்லை. இந்த சந்தேகங்களை மேலும் வலுப்படுத்துவதாகவே இருக்கின்றது. நாட்டில் பொதுத் தேர்தல் நடந்து முடிந்த பின்னர் ஒருபோதும் இல்லாத வகையில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அரசியல் ஸ்திரதன்மை காணப்படவில்லை.

நாட்டின் முதன்மையான பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கை ஒளிக்கீற்றையோ, அல்லது அதற்குரிய சமிக்ஞைகளையோ காணமுடியவில்லை. பொறுப்பு வாய்ந்த நாட்டுத் தலைவி என்ற முறையில் ஜனாதிபதி இந்த நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காணும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு அவர் நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்ற நம்பிக்கையூட்டும் வகையில் அவரது தரப்பிலிருந்து கருத்துக்கள் வெளியாக வேண்டும். இது எதுவுமே நடைபெறவில்லை. இந்த நிலைமையில் இந்த நாட்டின் தலைவிதி குறித்துச் சந்தேகம் எழ வேண்டிய ஒரு சூழ்நிலையே உருவாகி இருக்கின்றது. இது நாட்டின் எதிர்காலப் போக்கிற்கோ அல்லது சுபீட்சமான முன்னேற்றத்திற்கோ நம்மையானதாகத் தெரியவில்லை.

> **கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் திட்டமிட்ட முறையில் தமது கையாட்களை வைத்து கருணாவின் கீழ் ஓர் இருண்ட யுத்தத்தை ஆரம்பித்துள்ள இராணுவத்தினருக்குத் தலைமைத் தளபதியாக இருக்கும் ஜனாதிபதியுடன் இந்தக் கடத்தில் சமாதானப் பேச்சுக்களை எவ்வாறு நடத்த முடியும்.**

## கொழும்பில் தற்கொலைக் குண்டுவெடிப்பு

கொழும்பு கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் புதன்கிழமை இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலால், குண்டுதாரியும் மற்றும் பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட ஐவர் உயிரிழந்ததுடன் 9 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்துக் கலாச்சார அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தாவை இலக்குவைத்தே இத்தாக்குதல் இடம்பெற்றதாகவும், இப்பெண் குண்டுதாரி கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் அமைச்சரின் அலுவலகத்தில் அவரைச் சந்திக்க வந்ததாகவும் அப்பெண்ணின் மேல் ஏற்பட்ட சந்தேகத்தின் பேரில் இவரைப் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணைக்குட்படுத்த முற்பட்ட போதிலே இக்குண்டு வெடிப்பு இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை இத்தற்கொலைக் குண்டுதாரியுடன் ஒன்றாக வந்தவரென தமிழ் யுவதியொருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

# நாங்கள் யாரின் தயவிலும் இல்லை

**- ரவூவ் ஹக்கீம்**



பேரினவாதக் கட்சிகளில் தம்மை இணைத்துக் கொண்டு போலியாக வெற்றி பெற்றவர்கள் சமூகத்தைப் பாதிக்கின்ற விடயங்களில் வாய் திறக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். முஸ்லீம்களுக்கு எதிரான வன்முறைகளின் போதும், அடாவடித்தனங்களின் போதும் தமது பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்து கொண்டார்கள்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் தலைவரும் திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண சபைக்கு ஐக்கிய தேசிய பட்டியலில் போட்டியிடும் எம் நயீமுல்லா, முகமட் மர்ஜான் ஆகிய இருவருக்கும் ஆதரவு திரட்டு முகமாக கடந்த சனிக்கிழமை கடுகண்ணாவை குருநாகலைக் கிராமத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்:-

இந் நாட்டின் அரசியல் யாப்பை தனது சொந்த நலனுக்காக மாற்றியமைக்க ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். அது சிறுபான்மை சமூகங்களின் நலனுக்காக ஆப்பு வைக்கக் கூடியது. இத்தேர்தலில் அவர்கள் வெற்றி பெற்றால் அரசியல்யாப்பை மாற்ற மக்கள் அங்கீகாரம் தந்து விட்டார்கள் எனப் பறை சாற்றுவார்கள். அதனை முறியடிக்க வேண்டும். அதற்காகவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முஸ்லீம் காங்கிரஸ் என்பன தமது ஆசனத் தொகையை அதிகரித்துக் கொள்ள மத்திய மாகாணத்தில் ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து போட்டியிடுகின்றன.

சிறுபான்மை மக்களுக்கு இத்தேர்தல் முக்கியமான ஒரு தேர்தலாகும் முஸ்லீம் சமூகத்தின் ஒற்றுமையைக் கூறுபோட நினைத்தவர்களுக்கு நிறுவன ரீதியாக ஒன்றிணைந்து ஒற்றுமையை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பம் கொள்கையின் அடிப்படையில் இயங்கும் இக்கட்சிக்கு சமூக நலன்தான் முக்கியம். அந்த சமூக நலனைப் பேணிப் பாதுகாக்கும், நடவடிக்கைகளுக்கு உறுதிசேர்க்க மத்திய மாகாண சபையில் முஸ்லீம் காங்கிரஸின் பிரதிநிதித்துவம் எல்லோராலும் உணரப்படுகிறது.

தனிப்பட்டவர்களின் பின்னால் நின்று அவர்களை வெற்றி பெறவைப்பதன் மூலம் முஸ்லீம் சமூகத்தின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பது கடந்த காலங்களில் தெரியப்பட்ட உண்மைகள்.

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் அரசியல் வாழ்க்கைக்கு பலவிதமான சவால்களால் உருவாகியிருக்கிறார்கள். இன்றைய காலகட்டத்தில் விகிதசாரத் தேர்தல் முறையின் விசித்திரங்களைக் கவனத்திற் கொண்டு தேசிய அரசியலில் முஸ்லீம் காங்கிரஸ் மிகவும் சாணக்கியமாகச் செயற்பட்டு வருகிறது.

முஸ்லீம் காங்கிரஸ் அதன் ஆரம்பம் முதல் முஸ்லீம் மக்களின் உரிமைகளுக்காகவும் பாதுகாப்பிற்காகவும் குரல் கொடுத்து வந்துள்ளது.

முஸ்லீம்களின் பேரம் பேசும் சக்தியாக தேசிய கட்சிகளுடன் இணைந்திருந்த போதும் அவர்கள் எமது தயவில் தங்கியிருந்தார்களே தவிர நாம் யாரின் தயவிலும் இருக்கவில்லை. எந்தக் கட்சிக்கும் முட்டுக் கொடுத்து அவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் கட்சியாக முஸ்லீம் காங்கிரஸ் தமது அரசியலைச் செய்யவில்லை. முஸ்லீம்களின் நலன் கருதியும் எந்தப் போராட்டத்தையும் முன்னெடுக்க இந்தக் கட்சி தயாராக உள்ளது.

முஸ்லீம் காங்கிரஸ் என்ற நிறுவனத்தை எவர் நினைத்தாலும் அழிக்க விடமாட்டேன் இன்று முஸ்லீம்களுக்கு உறுதியாக இருக்கிறார்கள். அம்பாறையில் கடந்த தேர்தலின் போது முஸ்லீம் காங்கிரஸ் தலைமைக்கு கிடைத்த வெற்றி முஸ்லீம் காங்கிரஸ் வரலாற்றில் ஒரு தடம் பதித்த நிகழ்வாகும். முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் தேசியக் கட்சியாளரின் தயவில் பாராளுமன்றம் போக வேண்டிய அவசியம் இனிமேலும் இல்லை என்பதை தேர்தல் முடிவுகள் முழு நாட்டிற்கும் சொல்லியிருக்கிறது.

அதனையடுத்து வட மேல் மாகாண சபை முடிவுகள் எமக்குப் பாரிய வெற்றியைத் தருகின்றது. இவற்றைக் கண்டு அரசும் எமது எதிரிகளும் அச்சமடைந்துள்ளனர். நடைபெறவுள்ள ஐந்து மாகாண சபைத் தேர்தகளிலும் நாங்கள் சிறந்த வெற்றிகளைப் பெறுவோம் என்கிறார்.

## அரசியலில் இடம் யாருக்கு

அரசியல் ரீதியான தட்ப வெப்பங்கள் மாறும்போது ஓர் அதிபுத்தி சாலியான, அரசியல்வாதி மனிதல்லாத ஏனைய உயிரினங்களை விட மிக விரைவாக தன் இருப்பிடத்தை மட்டுமல்ல இதயத்தையே மாற்றிக் கொள்ளும் விசித்திரத்தைக் காணமுடியும் என்ற கருணாநிதியின் அவதானிப்புக்கு சான்றாக அமைந்துள்ளது கடந்த தேர்தல் முடிவுகள்.

தேர்தலில் பல இடையூறுகளுக்கும் இன்னல்களுக்கும் நடுவில் நையப்புடைபடடெழுந்து சோனியாகாந்தி வெற்றி பெற்ற சிங் ஆட்சியைத் தனதாக்கிக் கொண்டார். என்னதான் முகங்களுக்கும் முன் பல்வேறு நியாயமான காரணங்களைக் கூறினாலும் இதன் பின்னால் நீண்டு நிற்கும் சதித்திட்டத்தின் வேர்கள் பல...

மேலும் தேர்தலில் போட்டியிட்ட ஜெயலலிதா அம்மையாரும், ரஜனிகாந் ஜயனாருக்கும் இடையில் என்ன நடந்தது. ரஜனி ரசிகர்கள் ஏன் அவரைக் கைவிட்டனர். அவர் பண்ணுகின்ற காரியங்கள் எல்லாம் ரசிகர்களை ஒரு மாயத்தனமாக வைத்திருந்தனவையா? இல்லை சினிமாவில் மட்டும்தான் ரஜனிக்கு ரசிகர்களா?

ஜெயலலிதா அரசியலில் கால் வைத்த முதல் இன்றுவரை விட்டதில்லை. இம்முறை தேர்தலில் தோல்வியுற்றிருந்தாலும் இந்திய அரசியலில் அவருக்கெனத் தனியிடம் ஒன்று எப்போதுமே இருந்து வருகிறது இது எப்படி... இவை எல்லாம் பற்றி விரிவான கட்டுரை ஒன்று அடுத்த இதழில் இடம்பெறும். வாசகர்களே எதிர் பாருங்கள்.

# ஸ்ரீலங்கா இராணுவத்தின் சிம்ம சொப்பனமான நெருப்பு மனிதர் கரும்புலிகள்

தமிழீழ வரலாற்றின் விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரை ஆகுதியாக்கி தமிழீழ போரியல் வரலாற்றின் பால் உலகின் போரியல் நிபுணர்களின் இமைகளை உயர்த்திட வைத்த கரும்புலிகளின் 17வது ஆண்டு நிறைவு விழா, தமிழர் தேசமெங்கும் மிகவும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு தமிழர் தாயகப் பகுதி முழுவதும் விடுதலைப்புலிகளின் ஏற்பாட்டில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும், இராணுவக் கட்டுப்பர்டற்ற பிரதேசங்களிலும் கரும்புலிகள் தின நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்நிகழ்வுகளை முன்னிட்டு தமிழ் பகுதிகள் யாவும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரித்து, விடுதலைப் போராட்டத்தை சித்தரிக்கும் வகையில் சோடனைகள், பாதாதைகள் மற்றும் நினைவுப் படிகங்களாகவும் அமைக்கப்பட்டிருந்தன. அத்துடன் வர்த்தக நிலையங்கள், அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் எல்லாம் மூடப்பட்டு கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வன்னியில் இடம் பெற்ற கரும்புலிகள் தின விழாவில் மாணவர்கள், பொதுமக்கள், போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள் எனப் பல்லாயிரக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். அத்துடன் தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் கரும்புலிகளின் நினைவாலயத்தில் ஈகைச்சுடரேற்றி கரும்புலி வீரர்களுக்கு அகவணக்கத்தையும், அஞ்சலியும் செலுத்தினார்.

அதேபோல் மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான பழுகாமத்தில் கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட இராணுவத் தளபதி ரமேஷ் தலைமையில் இடம்பெற்றது. இத்தினத்தை முன்னிட்டு ஆரையம்பதியில் அமைதி நிலை அனுஷ்டிக்கபட்டது. போக்குவரத்து சேவைகள் எதுவும் இடம் பெறவில்லை. வீதியில் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

திருகோணமலை மாவட்டத்தின் பிரதான நிகழ்வு சேனையூர் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. கல்லூரி அதிபர் இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் புலிகளின் மூதூர் பிரதேச நிர்வாகப் பொறுப்பாளர் பிரகாஷ் ஈகைச்சுடர் ஏற்றி வைக்க, திருமலை மாவட்ட புலிகளின் வனவளப் பொறுப்பாளர் வேந்தன், தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

குடாநாட்டில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம், நெல்லியடி மில்லர் சதுக்கம் ஆகியவற்றில் முக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றன. துயிலும் இல்லப் பொறுப்பாளர் தலைமையில் தமிழீழ மாவீரர் பணிமனைத் துணைப் பொறுப்பாளர் கு. தமிழரசியின் தேசியக் கொடியேற்றலுடன் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உட்பட பலர் ஈகைச்சுடர் ஏற்றினர். அங்கு அமைந்துள்ள 28 கரும்புலிகளின் நினைவுக் கல்லறைகளுக்கும் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

நெல்லியடியிலுள்ள மில்லர் சதுக்கத்திலும் பலமுக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றன. கரும்புலி மாவீரர்களின் பெற்றோர்களை நெல்லியடிச் சந்தியில் இருந்து பாண்ட் இசையுடன் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அங்கு மலரஞ்சலிகள் நினைவுரைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

வவுனியாவில் உக்கிளாங்குளம் பைட்டர் மைதானத்தில் பல பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றன. கரும்புலிகள் தினம் காரணமாக அன்று வவுனியா நகரம் முழுவதும் செயலிழந்து காணப்பட்டது.

மன்னாரில் அரிப்புத்துறை பாடசாலை மைதானத்தில் கரும்புலி தின நிகழ்வுகள் இடம்பெற்றன. பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இனியவன், நகரப் பொறுப்பாளர் வேந்தன், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் யாழவன் உட்பட மற்றும் பல முக்கியஸ்தர்களும் போராளிகளும் பங்கு பற்றினர்.

தமிழீழமெங்கும் மிகவும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகின்ற இந்தக் கரும்புலிதினம் 17 ஆண்டுகளுக்கு முன் தமிழீழ விடுதலை வரலாற்றிலே என்றுமே நிகழ்ந்திராத வரலாறு ஒன்று எழுதப்பட்டு ஜூலை 5ம் நாள் முழு இலங்கைத் தீவையுமே அதிர வைத்து, சிங்கள இராணுவத்தை நிலைகுலையச் செய்து அன்றைய இராணுவ அரசியல் வரலாற்றுச் சூழ்நிலையினை மாற்றியமைக்கும் வகையில் கரும்புலி வீரன் கப்டன் மில்லரின் சாதனை, வரலாற்றில் எழுதப்பட்டது. அந்த இளம் புலி வீரன் தனி மனிதனாக வெடி மருந்து நிரம்பிய சக்கை வண்டி ஒன்றைக் கொண்டு சென்று, பாரிய இராணுவ முகாமைத் தகர்த்தெறிந்தான். தன்னுயிரை ஆகுதியாக்கி முதல் தற்கொலை வீரனான மில்லரின் நினைவு நாளையே கரும்புலிகள் தினமாக பிரகடனப்படுத்தி அனுஷ்டிக்கப்படுகிறது.

கப்டன் மில்லருடன் கரும்புலிகள் சகாப்தம் ஆரம்பமாகி, போராட்ட வரலாறின் தியாகத்தின் அதி உன்னதமான ஒரு மைல் கல்லை பதிவு செய்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் புதிய அத்தியாயம் ஒன்றும் திறக்கப்பட்டது.

கரும்புலி வீரர்களைத் தமிழீழ மக்கள் உயுராயுதங்கள் என்றும் தேசத்தின் புயல்கள் என்றும் அக்கினிச் குஞ்சுக்ள் என்றும், தற்கொலை வீரர்கள் என்றும் அழைக்கின்றனர். 31-10-2002 வரை வீரச்சாவடைந்த கரும்புலிகளில் தரைக்கரும்புலிகள் 78 பேரும், கடற்கரும் புலிகள் 163 பேருமாக மொத்தம் 241 பேர் வீரச்சாவடைந்துள்ளனர்.

கரும்புலிகளின் வீரம் பற்றியும் அவர்களின் உணர்வு, தியாகம் பற்றியும் பிரபாகரன் கூறுகையில்...... "பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம் வாய்ந்த ஆயுதமாகவே கரும்புலிகளை நான் உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள், எமது போராட்டப் பாதையின் தடை நீக்கிகள், எதிரியின் படைப்பலத்தை மனோ பலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

ஒரு கரும்புலிவீரன் தன்னை விட தனது இலட்சியத்தைக் காதலிக்கிறான். தனது உயிரை விட தான் வரித்துக் கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்தக் குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராகின்றான்.

அந்தக் குறிக்கோள் அவனது சுயநலத்திற்கு அப்பாற்பட்டது. மற்றவர்களுடைய நலனையும் நல்வாழ்வையும் பற்றியது. மற்றவர்களுக்காக தன்னையே இல்லாதொழிக்கதுணிவது தெய்வீகத்துறவறம். அந்த தெய்வீகப் பிறவிகள், மரணத்தின் நாளை எதிர்பார்த்து மகிழ்வுடன் காத்திருக்கும் இலட்சிய உறுதி கொண்ட இரும்பு மனிதர்கள்" என்கிறார்.

கரும்புலிகள், சொற்பதத்தில் கருமை என்பது மனோதிடத்தையும் உறுதிப்பாட்டையும் குறிப்பிடுவதோடு இருளையும் குறியீடு செய்து பார்வைக்குப் புலப்படாத பூடகமானதும் இரகசியமானதுமான தன்மையினையும் செயற்பாட்டினையும் அது குறிக்கும் என்பது தான் புலிகளின் தத்துவம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பத்துக் கரும்புலி வீரர்கள் பெயர் குறிப்பிடாத கல்லறையில் அநாமதேயமாக உறங்குகின்றனர். அவர்களின் முகவரி என்ன? யார் பெற்ற பிள்ளைகள் எங்கே எப்படிச் சாதனை படைத்தார்கள்? என்பது பலருக்கும் தெரியாது. இவர்கள் முகமூடி வீரர்களாக மாற்றுவேடம் தரித்து எதிரிகளுடன் கூடி இயல்பு வாழ்க்கை வாழ்வது போல் வாழ்ந்து எதிரியையும் அழித்து தாமும் அழிந்து கொண்டவர்கள்.

தம் மக்களுக்காக பேரின்றி ஊரின்றி உறவின்றி முகவரியுமின்றி உறங்குபவர்கள், ஓரிரண்டு பேருக்குள்ளே உறங்கும் உண்மைகளாக இவர்களின் வரலாறு உள்ளது.

காற்றோடு காற்றாகி கடலோடு கடலாகி மண்ணோடு மண்ணாகிக் கரைந்தவிட்ட இவர்கள் மனித தியாகத்தில் இமயத்தை தொட்டுவிட்டவர்கள். கரும்புலிகளின் வரலாறு மனித உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட விடயம் எல்லோராலும் செய்யமுடியாத தியாகம்.

தமிழீழ விடுதலைக்காய் இலட்சியத்தை மூச்சாகக் கொண்டு காற்றோடு கலந்த விட்ட இந்த இலட்சிய சரித்திர நாயகர்களை தமிழர்களின் நெஞ்சங்கள் என்றும் மறவாது.

## பேச்சுவார்த்தை! பேச்சுவார்த்தை!! பேச்சுவார்த்தை!!!

பேச்சுவார்த்தை பேச்சுவார்த்தை
முடிவில்லாத பேச்சுவார்த்தை...!
ஆரம்பத்திலேயே முட்டுக்கட்டை
ஒரு அங்குலம்தானும்
அசையமுடியவில்லை.
அனுசரணையாளர்கள் ஒவ்வொருவராக
வெளியேறுகின்றனர், அவர்களின்
இடத்துக்கு
அனுசரணையற்றவர்களைப் போடுவதற்கு
சதித்திட்டங்கள் தீட்டப்படுகின்றன.
ஜே.வி.பியும் சீஹல உரிமையும்
நன்றாக நெருப்பை ஊதிவிடுகிறார்கள்.
நாட்டின் தலைவி ஆட்சியின் அரசி
அம்மையாரோ கல்லுப்பிள்ளையாராக
உட்கார்ந்திருக்கிறார் வாய்திறக்கிறார்
இல்லை.
வாய் திறக்க முடியாதபடி இருபக்கமும்
ஜே.வி.பியும். சிஹல உருமையும்
இறுக்கிப்பிடி. நாட்கள் நகர்கின்றன, நாடு
சீரழிகிறது நாட்டைப்பற்றியோ,
மக்களைப்பற்றியோ யாரும் சிந்தித்ததாகத்
தெரியவில்லை.
நாட்டின் தலைவிக்கு இந்தப் பொறுப்பு
இல்லையா? சமாதானத்தைக் காத்து
நாட்டைக்காக்கும் பொறுப்பு நாட்டின்
தலைவிக்கு இல்லையா?
தமிழ்மக்களைக் காக்கும் பொறுப்பு
ஜனாதிபதிக்கு இல்லையா?
தமிழ்மக்கள் இந்த நாட்டின் மக்கள்
இல்லையா?
இதை ஒழுங்காகச் செய்ய
முடியாவிட்டால்
அம்மையார் என்ன செய்ய வேண்டும்?
ஆட்சியை அப்படிச் செய்யக்
கூடியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.
கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை
என்றால் எப்படி இது சாத்தியமாகும்.?

## நாடாளுமன்றமாம்! மக்கள் பிரதிநிதிகளாம்!!

பேட்டை ரவுடிகள்
கெட்டார்கள் போங்கள்!
இரண்டு தடவைபாராளுமன்றம் சென்று
ஆவலோடு கலரியில் அமர்ந்தபின் அங்கு
கண்ட கோரக்காட்சியை எப்படி
எடுத்துரைப்பேன்?
படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள்
மக்களால் தமது பிரதிநிதி எனத் தெரிவு
செய்யப்பட்டவர்கள் நாடாளுமன்றத்தில்
போட்ட கூச்சலையும் குழப்பத்தையும்
என்னவென்று சொல்வது? இவர்கள்
முழுங்கிய எச்சிலும், பேச்சிலும்
சபாநாயகர் அருகே சென்று அவர்
மூஞ்சியில் கைவைக்காத குறையாக
உனக்குத்தான் பைத்தியம் என்று பட்டம்
சூட்டிய குரூரத்திலும் இவற்றையெல்லாம்
கேட்டுக்கொண்டு சபாநாயகரும்
பாராளுமன்ற செயலாளரும்
பேயறைந்தாற்போல் உறைந்திருந்ததையும்
வெளிநாட்டவர்க்ள் பார்த்திருந்தால் என்ன
நினைத்திருப்பார்கள்?
ஒரு நாட்டின் சட்டவாக்க மன்றம்.
அங்கேயே இந்த அடாவடித்தனம்,
அங்கேயே இதைத் தடுக்க முடியவில்லை
அப்படியானால், நாட்டில் என்னதான்
நடக்காது. உண்மையிலேயே
சபாநாயகரால் இதைத் தடுக்க
முடியவில்லையா, அல்லது
உயிருக்குப்பயந்து அப்படிஇருந்தாரா?
அதுதான் உண்மை என்றால் இந்த
நாட்டின் முப்படைகளினாலும் நமக்கு
என்ன பயன்?

## மக்களால் தெரிவுசெய்யப்படாத மக்கள்பிரதிநிதிகள்

நம்நாட்டு ஜனநாயகம் இது! தேர்தலில் நிற்கவேண்டியதில்லை ஓட்டுக் கேட்கவேண்டியதில்லை ஓடியாடி அலைய வேண்டியதில்லை மக்களால் தெரிவு செய்யப்படாமலே மக்கள் பிரதிநிதி ஆகிவிடலாம் வேறு எந்த நாட்டிலாவது இத்தகைய விசித்திரம் உண்டா? ஆனால் அதைவிட விசித்திரம் என்ன தெரியுமா? போனஸ் சீற், நியமன அங்கத்தவர் என்ற பின்கதவு வழியாக பாராளுமன்றத்துக்குள் நுழைபவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஏனைய பிரதிநிதிகளைப் போலவே சொகுசு வாகனங்களில் பவனிவருவதும் குட்டிராஜாக்களைப் போல் ஒரு பரிவாரம் பின்தொடர உலாவருவதும் கொஞ்சமும் கூச்ச நாச்சமின்றி கொட்டமடிப்பதும், வெட்கக்கேடு. இரவல் உடையில் கொசுவம் பிடிப்பதுபோல், இரவல் பதவியில் கொசுவம் பிடிப்பதற்கு, இவர்களுக்கு எப்படி மனம் வருகிறது? அரசாங்கமோ, ஆட்சியாளரோ மக்களோ, இதுபற்றிச் சிந்திக்காதது இன்னும் விசித்திரமாக உள்ளது ஒரு காலத்தில் ஜே.ஆர்.கிழவர் தனது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவும் தன் கட்சியை ஆட்சியில் நிலைநிறுத்தவும் இப்படி எத்தனையோ சூழ்ச்சிகள் செய்தார். ஆனால் இப்படிப்பதவி பெறுவதும் அட்டகாசம் செய்வதும் ஜனநாயகத்துக்கு விரோதமானது தார்மீகத்துக்கு மாறானது என்பதையெல்லாம் இந்த இரவல் எம்.பி.க்கள் எப்போதுதான் உணரப்போகிறார்களோ?

# செய்திக்கதிர்

-அன்பன் மட்டக்களப்பு-

## சோனியா காந்தி போட்டபிச்சை

இரவல் புடவையில் கொசுவம் பிடிப்போர் இந்தியாவிலும் இருக்கிறார்கள். அதன் நிரூபனம்தான் மன்மோகன்சிங் இந்தியா நாட்டின் பிரதமரான மகாத்மியம் சோனியா காந்தி நாட்டின் பிரதமரானவுடன் ஏதோவெல்லாம் காக்குகள் சொல்லி அவரது பிரதமர் பதவியை விமர்சிக்க அவர் போட்ட பிச்சையாகப் பிரதமர் பதவி மன்மோகன் சிங்குக்குக் கிடைத்து அதன்மூலம் இலங்கை பரவாயில்லை என்று ஆகிவிட்டது. நிலைமை இலங்கையில் இவ்வாறு பிச்சை பெறுவோர்கள் போதாக்குறைக்கு, ஒருவர் பெற்ற எம்.பி.பதவியை மற்றொருவர் பறித்துக் கொள்வார், அவ்வளவு ஏன்? ஆணானப்பட்ட ஜனாதிபதியே மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சியாளரிடமிருந்து ஆட்சியைத் தட்டிப் பறித்துக் கொள்ளவில்லையா? இவர்கள் எல்லாம் எப்படித்தான் கூச்ச நாச்சம் இன்றி ஆள், அம்பு சேனைகளுடன் பவனிவருகின்றனரோ தெரியவில்லை மயிர் நீப்பின் உயிர் வாழாக்கவரிமான் பற்றியெல்லாம் பேசும் மனிதன் மயிர் முழுவதும் உதிர்ந்து மொட்டையானாலும் உயிர் வாழ்வான் போலும்!

## அம்மையார் ஆட்சியில் நடைபெறும் மர்மக் கொலைகள்

அம்மையார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் ஆரம்பமாகிவிட்டது மர்மக் கொலைகள். ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இக்கொலைகள் நடைபெறுவதால் இராணுவத்திற்கு இதில் சம்பந்தம் உண்டு என்கின்றனர் விடுதலைப்புலிகள். அப்படி இல்லை என்கின்றனர் இராணுவத்தினர். அது உண்மை என்றால் இந்த மர்மக்கொலைகளைத் தடுக்கமுடியாமலும் கொலையாளிகளில் ஒருவரைக் கூட பிடிக்கமுடியாமலும் இருக்கும் கையாலாகத்தனத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதையும் விடக் கேவலம் புலிகளே தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து இந்தக் கொலைகளை செய்துவிட்டுத் தப்பிச் செல்கின்றனர் என அவர்கள் கூறும் அப்பாவித்தனம்! அப்படியானால் இராணுவமும், பொலிசாரும் எதற்காக இந்தக் கட்டுப்பாட்டுப்பகுதியில் கடமைபுரிகின்றனர்? வெட்கம்! வெட்கம் மக்களின் வரிப்பணத்தில் பெரும்பகுதியை விழுங்கிக்கொண்டு சுளைசுளையாகச் சம்பளமும் வாங்கிக் கொண்டு மக்களையும் அரசாங்கத்தையும் பேக்காட்டுவதைத்தட்டிக் கேட்பது யார்? உங்களுக்கு இரண்டே வழிகள்தான் உண்டு ஒன்று குற்றத்தை ஒப்புக்கொள்ளுங்கள். இல்லையென்றால் தோல்வியை ஒப்புக்கொள்ளுங்கள், அது மு[illegible]தென்றால் பதவிகளை ராஜினாமாச் செ[illegible]ங்கள்.

## அன்று கந்தப்பொளை இன்று மில்லகந்த!

அன்று கந்தப்பொளையில் அப்பாவித் தமிழர்களைப் போலீஸார் சுட்டுக்கொன்றனர். இன்று மில்லகந்தவில் அட்டூழியம் நடக்கிறது. மில்லகந்த தோட்டத்தில் இடம்பெற்ற வன்செயலில் நூற்றுக்கணக்கான வீடுகள், கடைகள் சேதம் இருநூற்றுக்கு மேற்பட்டோர் படுகாயம் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இடம்பெயர்ந்தனர் பல பாடசாலைகள் மூடப்பட்டன. பாடசாலை செல்லமுடியாமல் மாணவர் அச்சம். இவையெல்லாம் இந்த நாட்டில்தான் நடக்கின்றன என்றால் நாட்டின் தலைவி இதற்குப் பொறுப்பில்லையா? ஏன் என்று ஒரு வார்த்தை கேட்கமாட்டாரா? வன் செயலைத் தடுக்க முடியாத போலீசையும் ராணுவத்தையும் தண்டிக்கமாட்டாரா? குற்றவாளிகளைக்கண்டுபிடிக்க முடியாத சோப்ளாங்கிபொலிசாரை வீட்டிற்கு அனுப்ப மாட்டாரா? பாடசாலைகளை மீளத்திறப்பது தொடர்பாகப் பல முறைகேட்டுக் கொண்டும் பாராமுகமாக இருக்கும் ஹொறணை கல்விப்பணிப்பாளரைத் தண்டிக்க மாட்டாரா? பாதிக்கப்பட்டவர்கள் தமிழர் என்பதால் இந்தப் புறக்கணிப்பு அப்படியானால் அந்த அம்மையார் எப்படி நாட்டின் தலைவியாக முடியும்?

## ஐயகோ! தமிழ் இங்கு ஊனமாகிறது

கொழும்பு 13 சிறுவீதியில் அமைத்திருக்கின்ற பெயர்ப் பலகையே இது.




திருத்தப்பட்ட வடிவம்:

**பௌத்தாலோக மாவத்தை**



வாக்காளர்: சார்! நீங்கள் என் மகனுக்கு போட்டுக் கொடுத்த உத்தியோகம் ஸ்தீரமானதில்லையாமே...
மந்திரி : உமக்கு விளங்கவில்லையே...! எங்களுடைய மந்திரிப்பதவிகூட ஸ்தீரமானதில்லையென்று.

"தமிழ்நாதம்" பத்திரிகையில் வெளியாகியதை முக்கியத்துவம்கருதி அப்படியே இங்கு மறுபிரசுரம் செய்கின்றோம்.

# "ஆய்த எழுத்து" அந்த மோசமான அரசியல்வாதி யார்?

-தாயகத்திலிருந்து உணர்வுள்ள தமிழன்-

தமிழ் சினிமாவின் மகாக்களில் ஒருவராக கூறப்படும் மணிரத்னம் "ஆய்த எழுத்து" என்ற தனது உற்பத்தியை இப்போது சந்தைக்கு விட்டிருக்கிறார். அதில்தான் இந்த செல்வநாயகம் என்கிற ஒரு அரசியல்வாதி வருகிறார். ஆய்த எழுத்தின் மோசமான அரசியல்வாதி செல்வநாயகம் யார்? என்ற கேள்வி பலரிடையேயும் எழுந்துள்ளது.

மணிரத்தினம் நல்ல சினிமா இயக்குனர் என்பதற்கும் மேலாக, ஒரு சிறந்த தமிழ்த் தேசிய எதிர்ப்புக் கருத்தாளர் என்பதை இங்கே குறிப்பிட்டேயாகவேண்டும். இதனை இவர் வெளியிட்ட "இருவர்" உள்ளிட்ட அனைத்துப் படங்களும் இதையே பறைசாற்றி நிற்கின்றன. குறிப்பாக தமிழக தமிழர்களின், தமிழுணர்வை சிதைப்பதற்கு, நையாண்டி செய்வதற்கே மணிரத்தினம் தனதுபடங்களைப் பயன் படுத்தி வந்தார்.

மறுபக்கம் ஈழத்தமிழரைக் காட்டி ஈழத்தமிழரிடம் வணிகம் செய்ய மணிரத்தினம் உற்பத்தி செய்த "கன்னத்தில் முத்தமிட்டால்" படத்தில் ஈழத்தமிழரின் போராட்டத்தைக் கூறுவதாக கூவிக்கிட்டு அவரின் ஈழத்தமிழர் எதிர்க்கருத்தே அதில் வெளிப்பட்டது. அதன் அடுத்த கட்டமாக "ஆய்த எழுத்து" மணிரத்தினத்தினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கதை இதுதான் ஒரு அடிதடிக்காரன். (ரவுடி) அது நடிகர் மாதவன். அவர் அரசியல்வாதி செல்வநாயகத்துக்காக (இயக்குனர் பாரதிராசா) அடிதடி செய்கிறார். செல்வநாயகத்திற்கு எதிராகக் கிளம்பும் பல்கலைக்கழக மாணவன் மைக்கல் (சூர்யா) மற்றும் அவரின் கூட்டணியை ஒழிக்க முயலுகிறார். இதில் விபத்தாக மூன்றாவது நபர் (சித்தார்த்) நுழைகிறார். கடைசியில் செல்வநாயகத்துக்கு எதிராக தேர்தலில்லை மைக்கல் தலைமையிலான இளைஞர்கள் புரட்சிகர சிந்தனையுடன் வெற்றிபெற்று சட்டசபை செல்கிறனர். புது தலைமுறை நேர்மையுடன் அரசியலில் நுழைவதுதான் படம்.

படத்தில் ஒரு முக்கிய காட்சி, மைக்கல் மாதவனால் சுடப்படும் காட்சி. அதில் சித்தார்த் மைக்கலைக் காப்பாற்றுவது படத்தின் முக்கால்பங்கு காட்சி இது. ஒரே காட்சி மாதவன் பார்வையில் (Point of View) Flash Back சூர்யா பார்வையில் Flash Back சித்தார்த் பார்வையில் ஒரு Flash Back என ஆய்த எழுத்தில் மூவரிடம் ஒரு காட்சியை மணிரத்னம் Flash Back க்குகளாகக் காட்டியுள்ளார்.

ஆனால் ஆய்த எழுத்தின் வில்லனாக வருகிற பாத்திரத்திற்குச் சூட்டப்பட்டுள்ள பெயர் செல்வநாயகம். தமிழக பாரம்பரியத்தில் செல்வநாயகம் என்ற பெயர் யாருக்கும் சூட்டப்படுவதாக நாம் அறிந்ததில்லை. எனவே தங்கள் மத்தியில் வழக்கிலில்லாத ஆனால், ஈழத்தமிழர்களின் புகழ்பூத்த அரசியற் தலைவரின் பெயரை மணிரத்னம் திட்டமிட்டே பயன்படுத்தியுள்ளாரா என்ற கேள்வி ஈழத்தமிழரிடையே எழுவதை தவிர்க்க முடியாதது.

ஈழத்தமிழர்களின் சாத்வீக போராட்டத்தின் தந்தையாக இருந்தவர் S.J.V.செல்வநாயகம். தமிழகத்தில் ஈ.வெ.ரா.பெரியார் தமிழக மக்களால் உரிமையுடன் "தந்தை பெரியார்" என அழைக்கப்பட்டது போன்றே, ஈழத்தில் S.J.V.செல்வநாயகம் ஈழத்தமிழர்களால் உரிமையுடன் "தந்தை செல்வா" என அழைக்கப்பட்டார்.

"இருவர்" என்ற திரைப்படத்தில் தந்தை பெரியாரை கொச்சைப்படுத்திய மணிரத்னம், ஆய்த எழுத்தில் ஈழத்தின் அறவழிப் போராட்ட நாயகனான தந்தை செல்வாவை கொச்சைப்படுத்துகிறாரா என்ற கேள்வியை ஈழத்தமிழன் கேட்கத் தோன்றுகின்றான். தமிழக சினிமா ஈழத்தமிழனை வைத்து பிழைத்து வருகின்ற இன்றைய நிலையில் ஈழத்தமிழனையே தொடர்ந்து கொச்சைப் படுத்தும் இவ்வாறான பாங்கு அனுமதிக்கப் படலாமா? என்பதே இப்போது ஈழத்தமிழன் ஒவ்வொருவனின் கேள்வியா கவுமுள்ளது.

ஒரு சில நல்ல திரைப்படங்களான நந்தா, காற்றுக்கென்ன வேலி போன்ற வற்றைத் தவிர மிகுதியானவற்றில் ஈழத்தமிழர்களை எள்ளி நகையாடும் பாத்திரங்களே படைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, புன்னகை மன்னன், தெனாலி, நளதமயந்தி, கன்னத்தில் முத்தமிட்டால் போன்றவற்றை ஈழத்தமிழர்களை எள்ளி நகையாடும் திரைப்படங்காளகச் சுட்டிக் காட்டலாம்.

இன்று தங்களது படத்தின் பொருளாதார ரீதியான வெற்றிக்கு புலம்பெயர்ந்து ஈழத்தமிழர்கள் வாழும் மேற்குலக நாடுகளின் திரையரங்குகளையே நம்பியிருக்கிற தமிழக சினிமாவின் முக்கியமானவர்கள் அதே ஈழத்தமிழர்களை எள்ளி நகையாடுவதையும் தமது வாடிக்கையாயக் கொண்டிருக்கிறார்கள். இதிலும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் ஈழத்தமிழர்கள் புலம்பெ யர்ந்து வாழுகின்ற நாடுகளிலேயே, ஈழத்தமிழர்களின் துணையோடு வெளிநாட்டுப் படப்பிடிப்புக்களைச் செலவுச் சிக்கனத்தோடுமேற்கொள்ளும் தமிழக சினிமா தமிழ்த்தேசிய எதிர்ப்பு முதலாளிகள், நடிகர்கள் மறுபுறத்தே ஈழத்ததமிழர்களையே பதம்பார்த்து வருகிறார்கள்.

"ஆய்த எழுத்து" செல்வநாயகம் மூலம் ஈழத்தமிழரால் அதிகம் உச்சரிக்கப்பட்ட அறவழிப் போராட்ட அரசியற்தலைவரான தந்தை செல்வா என்ற S.J.V.செல்வநாயகம் பற்றிய விம்பத்தை சிதைப்பதாக சூட்டப்பட் பெயர் இல்லையென்பதை மணிரத்னம் மறுத்துரைப்பாரா? ஈழத்தமிழர்களின் மன உணர்வுகளை போராடும் குணத்தை அறிந்த மணிரத்தினத்துக்கு, ஏன் ஒரு தமிழக அரசியல்வாதியின் பெயரை சூட்ட முடியாமல் அல்லது மனமில்லாமல் போனது?

இதற்கான பதிலை மணிரத்னம் தரப்போவதில்லை, இவ்வாறான வற்றிற்கான பழியை வசனகர்த்தா சுஜாதா (ரங்கராஜன்) மீது போட்டுத் தப்பிக்க முயற்சிக்கலாம். ஆனால் மணிரத்னத்திற்கான பதிலை, தமிழக சினிமாக்காரர்களிற்கான பதிலைத் தருவதற்கு ஈழத்தமிழர்கள் தயாராகவே உள்ளனர். இனிமேலும் இவ்வாறான நிகழ்வுகள் தமிழக சினிமாக்களிலே இடம்பெற்றால் அத் திரைப்படங்களை மேற்குலகில் பகிஷ்கரிப்பதற்கும். திரைப்பட நட்சத்திரங்கள் "காசு பார்க்கும்" நட்சத்திர இரவுகளைப் புறக்கணிப்பதற்கும் ஈழத்தமிழர்களை மணிரத்னம் தயாராக்கி விட்டுள்ளார்.

எனவே மணிரத்னம் ஈழத்தமிழனிற்கு தீமை செய்யப்போய், புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களிடையே தமிழக சினிமா குறித்த வெறுப்பை மேலும் தீவிரப்படுத்தி ஒட்டுமொத்த தமிழக சினிமாவையும் வெறுப்புடன் ஈழத்தமிழன் நோக்கும் ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளார்.

தமிழக சினிமா உலகம் இதுபற்றிச் சிந்திக்குமா?




## ஆச ஆரவிட்டது!

**சோமு :-** ராமண்ணே.... ராமண்ணே! குடிக்க கொஞ்சம் தண்ணி கொண்டு வாங்கண்ணே. முனிசனுக்கும் மயக்கம் வர்ர மாதிரி இருக்கு....

**ராமு :-** என்னப்பா சோமு. இப்ப அந்தி நேரம். வெயிலும் அதிகமா இல்ல இப்ப போய் அவசரமா தண்ணி கேக்கிற?..

**சோமு :-** அண்ணே!... இது வெயில வர்ர மயக்கமில்லன்ணே!... பசி மயக்கம் போற போக்கப் பாத்தா உயிரே போயிடும்போல இருக்கு...

**ராமு :-** என்ன? திரும்பவும் பொருளாதார சிக்கலா? சரி கவலைபடாத கடவுள் நிச்சயம் வழிகாட்டுவான்.

**சோமு :-** உண்மையை சொன்னா ராமண்ணே இப்போதைய நம்ம நிலமைக்கு கடவுள் வந்தா மட்டும்தான் தீர்த்து வைக்க முடியும்

**ராமு :-** சோமு நீ சொன்னது வாஸ்தவமான பேச்சி.. கிருஸ்ணபரமாத்மா கீதையில என்ன சொல்லி இருக்காரு தெரியுமா?

**சோமு :-** எங்கெல்லாம் தர்மம் அழிக்கப் படுதோ... அங்கெல்லாம் நான் அவதாரம் எடுப்பேன் என்று சொல்லி இருக்கிறார் அதுக்கு இப்ப என்ன ராமண்ணே

**ராமு :-** அட இன்னும் விளங்கவில்லையா? கிருஸ்ணபரமாத்மா கல்கி அவதாரம் எடுக்கபோர காலம் இது. நீ கவலை படாம இரு நிச்சயமா உனக்கு நல்ல வழி பொறக்கும்.

**சோமு :-** எது எப்படியோ ராமண்ணே எங்கள நல்லாவச்சா சந்தோசம்தான். அப்புறம். நீங்க கிருஸ்ணரை பத்தி சொல்லும் போது எனக்கு நம்ம பாராளுமன்றம் தான் ஞாபகத்துக்கு வந்திச்சி

**ராமு :-** என்னசொல்ர நீ விசயத்தை விளங்கிறமாதிரி சொல்லு...

**சோமு :-** ராமண்ணே மகாபாரதத்தில துரோபதைக்கு துயில் உரியும் போது கிருஸ்ணானு துரொபதை கூப்பிட்டதால கிருஸ்ணர் வந்து அந்த அவமானத்தில இருந்து துரோபதையை காப்பாற்றினர். தெரியுமில்ல.

**ராமு :-** அதான் புராணமாச்சே தெரியாம இருக்குமா? விசியத்தை சொல்லு

**சோமு :-** அதே மாதிரிநம்ம பாராளுமன்றதில பௌத்த பிக்கு ஒருத்தருக்கு துயில் உரிய முற்படும் பொழுது கூப்பிடாமலே நம்ம ஈஸ்வரன் வந்து காப்பாத்தி இருக்காரு.

**ராமு :-** சோமு கூப்பிடாமலே உதவி செய்ரது நம்ம பண்பாடு. அதே நேரம் சிலபேரு கூப்பிட்டு கேட்டாகூட உதவி செய்யாமல் இருப்பாங்க. அதுவும் நம்மாளுத்தான்.

**சோமு :-** நீங்க சொன்னது நூத்துக்கு நூறு உண்மை ராமண்ணே. ஏன்னா? நம்ம முரளிதரன் உலகசாதனை படைச்சி இலங்கைக்கு வந்தப்போ எத்தனை சிங்கள அமைச்சர்மமாரு பாராட்டினாங்க ஆனா யாராவது ஒரு தமிழ் அமைச்சர் அவரை பாராட்டினாங்களா?

**ராமு :-** அதான் பாரு சேமு. கேட்டா நான் தமிழ் பற்றுள்ளவன் தமிழுக்காக உயிரையும் கொடுப்பேன் என்று சொல்லுவாங்க.

**சோமு :-** அப்புறம் ராமண்ணே! அந்த பாராளுமன்ற விசயம் அதோட நிக்கல... அதுக்கப்புறம் இந்தியா மாதிரி வழமையா பாராளுமன்றத்தில சண்டைதானே? இத சர்வதேச சமூகம் எப்படி விமர்சனம் செய்யினம் தெரியுமா?

**ராமு :-** என்ன சொன்னாங்க?

**சோமு :-** அண்ணே!... நாட்டை வழிநடத்திர அமைச்சர்களே தங்களுக்கிடையில் ஒரு ஒற்றுமையை வளர்த்து கொள்ள முடியாட்டி. அவுங்களால எப்படி நாடடை நல்வழி படுத்த முடியும் என்று கேட்டாங்க.

**ராமு :-** சர்வதேசம் நம்மளப்பாத்து சிரிக்குதாம் .

**சோமு :-** எந்த சர்வதேசம் என்னண்டு சிரிக்குதாம்

**ராமு :-** தமிழ் நாட்டிலபேசிக் கொள்றாங்களாம் புத்த பூசாரிமாருக்கு சீல உரிஞ்சு போட்டாங்கள் எண்டு சிரிக்கிறாங்களாமே கி....கி...

**சோமு :-** எதுக்கு இந்தச் சிரிப்பு ராமண்ணே

**ராமு :-** இல்ல... எல்லாத்தயும் துறந்து துறவியாப் போனவங்களுக்கு ஆச வரக்கூடாது தம்பி.

**சோமு :-** அப்போ ஆசப்படுறாங்க என்றீங்களா?

**ராமு :-** பின்ன "ஆச ஆர விட்டுது" எண்டு சொல்லுவினமே கடைசில பிக்கு மாரயும் விடல்ல

**சோமு :-** விளக்கமாச் சொல்லண்ண

**ராமு :-** ஒண்டும் வேணாம், புத்தற்ற பாதத்தத் தொடர்ந்து, ஆசயளத்து துறந்து துறவியாப் போறம் எண்டவைக்கு ஏன் பிறகு ஆட்சியில உக்காரோணும் எண்ட நினைப்பு வந்தது.

**சோமு :-** ஆமா, அதுவும் சரி

**ராமு :-** இனி ஒரு ஆசதான் பாக்கி...

**சோமு :-** சருவதேசம் சொன்னமாதிரி சீலையக் கழட்டீட்டு களியாணத்தக் கட்டிக்கொண்டு குடியும் குடித்தனமுமாய் வாழ....

**ராமு :-** ஸ்ஸ் சத்தம்... சத்தம் போடாத ஆரெ வரியினம். மெள்ளக்கத

**சோமு :-** அப்ப நான் பேந்துவாறன் வரட்டே உத நல்லா ஜோசியுங்கோ அப்பதான் அடுத்த பாராளுமன்ற கூட்டத்தில அறிக்க விடலாம்.

## கருகாகிக் காவியமானவர்கள்

ஸ்ரீ லங்கா இராணுவத்திற்கு எப்போதுமே சிம்ம சொப்னமாகவும், உலகின் போரியல் நிபுணர்களின் இமைகளை உயர்த்திடவைத்த தற்கொடை(லை) வீரர்களான கரும்புலிகளின் 17 ஆண்டுகளின் நிறைவுநாள் யூலை 5ந்திகதி.

### நீங்கா நினைவுகளில்

ஓ... இனிய சோதரரே
இதயம் முழுதும் உமது நினைவை
சுமந்து தவிக்கிறதே.
கழுத்தில் சாவைக் கட்டியபடியே
களத்தில் குதித்தீரே

எழுத்து வடிவில் உமது பெயரை
மனதில் பதித்தோமே

பாரதி கண்ட வீரத் தமிழினம்
வதைபடும் நிலைகண்டு
வீறு கொண்டெழுந்தவேங்கையாய்
நீடும்
விண்ணிலே மிளிர்கின்றீர்.

அண்ணனிடம் நீர் விடை
பெறுகையிலே
அவன் உள்ளம் படும் பாடு
எண்ணி மொழிந்திட இதயம்
வலித்திடும்
ஏங்கிடும் உமை எண்ணி.

தமிழணங்கு
கொழும்பு



நெல்லியடியிலுள்ள
மில்லர் நினைவுத் தூபி

### கரும்புலிகள்

தாயக விடிவே தம்
கடமை எனக் கொண்டு
பாயும் கரும்புலிகளாய்பகைமுடித்து
பாதகர் நெஞ்சங்களில் தீமழை பொழிந்து
உலகமே வியக்க உயிராயுதமாய்
உருவெடுத்து
தமிழ் அன்னை வாழ நல்வழியமைத்து
தியாகத்தின் சிகரத்தையே மிஞ்சிவிட்டு
தமிழர் எம் நெஞ்சங்களில்
நிலைத்திதுவிட்ட
நித்திய மறவர்கள்

பா.பிரதீபன்
வவுனியா

# மலைத்தணல்

தருவது மலைத்தமிழன்

# மாகாணசபைத் தேர்தல் 2004 உம் மலையக அரசியல் பின்னணியும்.

இதுவரை காலமும் நடந்த மாகாணசபைத் தேர்தலிலும் பார்க்க இம்முறை மாகாணசபைத் தேர்தல், மலையகப் பகுதியில் விசித்திரமான சவால்களுக்கு முகம் கொடுக்கின்றது. ஏற்கனவே மலையகத் தமிழ்கட்சிகளின் கூட்டமைப்பையும், மலையகத் தமிழர்களின் ஒற்றுமையின் அவசியத்தையும் மலைத் தணல் கூறியே வந்தது. ஆனால் எல்லாம் நீர் மேல் எழுதப்பட்ட கொள்கையாகிவிட்டன. தமிழனின் தலைவிதி அதிலும் மலையகத் தமிழனின் தலைவிதியை இறைவன்தான் மாற்றவேண்டும்.

மலையக அரசியலின் கிங்மேக்கரான இ.தொ.கா, பலசிக்கலுக்கு முகம் கொடுத்தும் சிதைவுற்றும் இன்னும் அது தன்னைப் பலப்படுத்தி உள்ளது. இது மலையக தமிழர்களுக்குச் சாதகமாக அமையாவிடினும் மலையகத் தமிழர்களின் பலவீனத்தை அறியாமையை தன்வசப்படுத்தி இதுவரை காலமும் ஏமாற்றினது சொத்தை அரசியல் பலத்தால் உயர்த்தியே உள்ளது. ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால் இன்னும் மலையகத்தின் இ.தொ.கா.வை ஆதரிப்பது பற்றிதான். அதிலும் கல்விகற்ற ஆசிரியர்கூட்டம் இ.தொ.கா.வின் பின்னால் நிற்பதைப் பார்த்தால் அழுவதா? சிரிப்பதா?

புரட்சியான சிந்தனையோடு மலையக அரசியலில் புகுந்த ம.ம.மு, இன்று மலையக தமிழர்களின் ஒற்றுமையைச் சீரழிக்க களம்புகுந்துள்ளது ம.ம.மு தான் இன்று அரசியல் நாடகத்தின் மிகப்பெரிய வில்லனாக திரைமறைவில் செல்கின்றது.

இ.தொ.கா தனித்தும், ஐ.தே.மு இணைந்தும் போட்டியிடுகின்றது. அதே போல ம.ம.மு.வும் தனித்தும் ஐ.தே.மு இணைந்தும் போட்டியிடுகின்றது. அதேபோல பிவி சென்னன், சதாசிவம் தலைமையிலான மலையகக்கட்சியும் ஐ.ம.சு.கூ. உடனும் தனித்தும் போட்டியிடுகின்றது இன்னும் பல மலையகக்கட்சிகளும் தேர்தல்களத்தில், இறங்கியுள்ளன. ஆனால் இவற்றைவிட உறுதியான கொள்கையோடு தனித்தே களத்தில் இறங்கியுள்ள மேல் மாகாண மக்கள் முன்னணி இம்முறை கொழும்பு மாவட்டத்தில் மாபெரும் வெற்றியீட்டும். அதே போல இரத்தினபுரி மாவட்டத்துத்துக்கான தமிழ் பிரதிநிதித்துவத்தையும் உறுதிப் படுத்தும்.

மத்தியமாகாணத்தில் பதவிவெறியர்களான இ.தொ.கா முதலமைச்சர் பதவியை கைப்பற்ற பல சூழ்ச்சிகளைச் செய்கிறது. ஆனால் நீண்டகாலமாக கண்டிமாவட்டத்தின் தமிழ் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தத் தெரியாத க.தொ.கா முதலமைச்சர் பதவியை தம்வசப்படுத்தி இன்னும் எத்தனை தமிழ்கலவரங்களை ஏற்படுத்தி, தமிழர்களை அழிக்கப்போகின்றது ஊரான் குடிலைக் கெடுக்கும் வழியில் வந்த ம.ம.மு நுவரெலியா மாவட்டத்திலும், கண்டிமாவட்டத்திலும் தன் திறமையைச் சாதிக்கப்போகிறது. ஆனால் பதுளை இரத்தினபுரி மாவட்டத்திலும் தன் திறமையைக் காட்டும். தமிழர்களின் ஒற்றுமையை சிதறடித்துவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு சார்பாக குரல்கொடுப்பதாக நடிப்பவர்கள் நாளை தமிழ் தேசியத்துக்கு வேட்டுவைப்பர். மலையகத் தமிழர்களின் காவலன், மலையகத்தின் தனித்துவம் காப்போமென தமிழர்களின் ஒற்றுமையை குழிதோண்டிப் புதைத்து விட்டனர். மலையகத்தில் தமிழ் உணர்வலையுடன் பேசும் ம.ம.மு, ஜனாதிபதி அம்மையாரின் கூலிப்படையென்னும் விடயம் அம்பலத்துக்கு வரவேண்டும். இவர்கள் மலையகத் தமிழர்களை அழிக்க வந்தவர்களாகி விட்டனர். என்ன செய்வது? ம.ம.மு. இ.தொ.கா பட்டியலில் போட்டியிடுபவர்கள், தனது கடமையைவிட ஒழுங்காகச் செய்யாத அதிபர்கள் துரோகிகள். ஆனாலும் இப்பட்டியலில் சமூக நலன்விரும்பிகளும் இருக்கத்தான் செய்கின்றனர். இவர்களை மாகாணசபைக்கு அனுப்பி எதைச் சாதிக்கப்போகின்றோம்.

ஆனால் இதனைவிட மேலாக இளம் பெண்களை தேர்தல் பிரச்சாரத்தில் பயன்படுத்துகின்றனர். மற்றும் மலையக இளம் யுவதிகளை விளம்பரப் பாவைகளாகவும் விளையாட்டு பாவையாகவும். விபச்சாரப் பாவையாகவும் பயன்படுத்தி இன்று மாகாணசபை தேர்தல் வாக்குவேட்டையில் இறங்கியுள்ளனர். மலையகத்துக்கான மாகாணசபை தமிழ் பிரதிநிதித்துவத்தைப்பெற மகளிர்களின் மானத்தை விற்பது நியாயமா??

மற்றும் மாணவிகளை, மாணவர்களை தேர்தல் பிரச்சாரத்தில் பயன்படுத்துவது நியாயமா? ஏன் சில மாணவிகளை தேர்தலுக்காக பகடைக்காயாக ஆக்கிய அதிபர்களும் உள்ளனர்.

தேர்தல் பெறுபேறு வெளிவரட்டும் புதுமையான தகவல்களை சுவாரஸ்யமாக மலைத்தணல் துப்பும்.

**மலையக இளம் யுவதிகளை விளம்பரப்பாவைகளாகவும் விளையாட்டுப்பாவைகளாகவும், விபச்சாரப்பாவைகளாகவும் பயன்படுத்தி தேர்தல் வாக்கு வேட்டையில் இறங்கியுள்ளனர்**

# முற்போக்கு ஆசிரியர் சங்கத் திட்டங்கள்

செ.தி.பெருமாள்.

மலையக முற்போக்கு ஆசிரியர் சங்கம் பொகவந்தலாவா, தங்களது எதிர்கால திட்டங்களை இவ்வாறு வெளிபடுத்தியுள்ளது. ஆசிரியர் இடமாற்றச் சபைகளில் சகல ஆசிரிய தொழிற்சங்கங்களுக்கும் சமமான பிரதிநிதித்தவம் வழங்கப்படவேண்டும். ஆசிரியர் சேவையில் இடமாற்றங்களை ஒழுங்குபடுத்தும் முகமாக ஆசிரியர் இடமாற்றச் சபைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை நாடு முழுவதும் மாகாண மட்டத்திலும் வலயமட்டத்திலும். செயற்பட்டு வருகின்றன.

இதேவேளை இச்சபைகளின் தேசிய மட்டத்தில் 15% சங்கத்தினர்களைக் கொண்டுள்ள ஆசிரியர் அங்கங்கள் மட்டுமே உறுப்பினராக முடியும். என விதிக்கப்பட்டுள்ளது. இதனால் பிரதான அரசியற் கட்சிகளை சார்ந்து நிற்கும். ஆசிரிய தொழில்சங்கங்களும் பெருமளவு உறுப்பினர்களைக் கொண்டுள்ள பழைமை வாய்ந்த ஆசிரிய சங்கங்களுமே இடமாற்ற சபைகளில் இடம்பெற முடிகிறது.

ஆசிரியர் சமூகம் எதிர்நோக்கும் பன்முகப்பட்ட தொழில்சார் பிரச்சனைகள் சார்ந்ததுமான பல பிரச்சனைகளைத் தீர்ப்பதில் அக்கறை காட்டிவரும் குறைந்தளவான அங்கத்தவர்களை உடைய தொழிற்சங்கங்கள் இட மாற்ற சபைகளில் இடம்பெற முடியாதுள்ளது.

இந்நிலையானது அரசியலைப்பின் உறுப்புரையின் " சட்டத்தின் முன் அனைவரும் சமன்" எனற விதியை மீறுவதாக அமைந்துள்ளது. எனவே பதிவு செய்யப்பட்ட சகல ஆசிரிய தொழிற்சங்கங்களும், ஆசிரிய இடமாற்றச்சபைகளில் உறுப்புரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை மலையக முற்போக்கு ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகின்றது.

ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி நெருக்கடிக்கு நிரந்தர முடிவு காணப்பட வேண்டும், மலையகத்தில் 'ஆசிரியர் கல்வியளிக்கும் தனித்துவமான ஒரே நிறுவனமாக பத்தனை தேசிய கல்வியற் கல்லூரியே திகழ்கின்றது.

இக் கல்லூரியில் இடம்பெறும் அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள், நிர்வாக ஒழுங்கீனங்கள், காரணமாகவும் இப்பிரச்சனைகளைக் கையாள்வதில் மலையக அரசியற் கட்சிகள் அதிக போட்டிக்குரியகளமாக இதனை மாற்றியிருப்பதனாலும் கல்வியியற் கல்லூரி தனது திசைகளிலிருந்து தவறிப்போய்க் கொண்டிருக்கிறது. பரந்துபட்ட வெகுசன நடவடிக்கைகளினூடாக கல்லூரியை முழுமையாக மீட்பதன் மூலமே இப்பிரச்சனைகளுக்கு நிரந்தரமாக தீர்வினைக் காணமுடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எமது குறிக்கோள் மலையகக் கல்வியற் சமூகத்தை வாஞ்சையுடன் அரவணைத்து சுயாதீனமும் தன்மானமும் உள்ளதொரு சமூக சக்தியாக மாற்றியமைத்தலே எமது தலையாய குறிக்கோளாகும்.

மலையகக் கல்வி பின்னடைவுக்கு சில அதிகாரிகளின் நடவடிக்கைகளே காரணம். மலையகக் கல்வித்துறைக்கு கடந்த பத்தாண்டு காலப் பகுதியில் வரலாற்றில் என்றும் இல்லாதவாறு தொகை ரீதியான உள்ளீடுகள் செயற்பட்டுள்ளன. மலையகக் கல்வியின் நூற்றாண்டு கால பின்னடைவுக்கு இவை பரிகாரமாக மாட்டாது. எனினும் குறிப்பிடதக்களவு பௌதீக வளங்களும். ஆளணி வளங்களும் நிரப்பப்பட்டுள்ள போதும். மலையகக் கல்வித் துறையின் வெளியீடு குறிப்பிடக்கூடியதாக இல்லை என்ற முடிவுக்கு புள்ளி விபரங்கள் மூலம் வரமுடிகின்றது. ஏதேனும் சிற்சில குறிகாட்டிகளைக்காட்டி திருப்தி செய்து கொண்டாலும் எமது கல்வி நிலையில் எத்தகைய தர ரீதியான வெளியீட்டையும் எட்டமுடியவில்லை. மலையக ஆசிரியர்கள், தமக்குக் கிடைக்கும் அற்ப சொற்ப வசதிகளையும், சமூகவியல் பிரச்சனைகளையும் எதிர் கொண்ட நிலையிலும், தமது உயர்தரபட்ச அர்ப்பணிப்பை வெளிகாட்டி வருகின்ற போதிலும். இந்நிலை தொடர்வதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

மலையகக் கல்வித்துறையில் அரசியல்வாதிகள் முதல் அடியாட்கள் வரை ஊடுருவி பாடசாலையின் வளங்களையும் வாய்ப்புக்களையும் சூறையாடி தன் இஷ்டப்படி ஆட்டிப் படைத்து ஆசிரியர் சமூகத்தை பந்தாடி வருகின்றனர். மலையகக்கல்வி அதிகாரிகள் ஒருபடி மேலே போய் குறுகிய மனப்பாங்கோடு தமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு சுயாதீனமாக இயங்கவேண்டிய பாடசாலை நிர்வாகத்திலும் கூட தலையிட்டு, பாடசாலையின் செயற்பாட்டிற்கு தடையாக செயற்படத் தொடங்கியுள்ளனர்.

பாடசாலை அதிபர் நியமனங்கள், பதிலாள் நியமனங்கள், ஆசிரிய இடமாற்றங்கள் வளர் பகிர்வு, ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளை ஒழுங்கமைத்தல், அரச பரீட்சை மேற்பார்வை கடமைகள் என்பனவற்றை செயற்படுத்துவதில் நாகரீகமற்ற. திறமையற்ற, தகுதியற்ற கைங்காரியங்களை மேற்கொண்டு வருகின்றனர். மலையகக் கல்வியின். தரத்தை உயர்த்திட தம்மை அர்ப்பணிப்பவர்கள் என எதிர்பார்க்கப்பட்ட இவர்கள் மலையக சமூகத்தின் புல்லுருவிகளாக மாறிவரும் அவலத்திற்கு முடிவு கட்டவேண்டிய அவசர அவசியத் தேவை, மலையகக் கல்வித்துறைக்கு ஏற்பட்டிருப்பது துர்ப்பாக்கியமானதாகும்.

இச்சக்திகளை இனங்கண்டு அம்பலப் படுத்தவும் களையெடுக்கவும் இருக்கின்ற ஒரு சில நேர்மையான அதிகாரிகள் துணிச்சலோடு முன்வரவேண்டும்.

சுதந்திர முன்னணி அரசின் கல்விசார் சமூகத்தின் நிலை என்ன?

இலங்கையின் கல்விசார் சமூகமானது காலணித்துவ காலம் முதல் சுதந்திர இலங்கையின் ஏறத்தாழ 60 ஆண்டுகளில் அதிகார வர்க்கத்தின் விருப்பப்பார்வையை சமூகத்தின் மீது திணிப்பதற்கான ஒரு ஊழியப்படையாகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. கல்வித்துறைக்கு முகங்கொடுக்க கூடிய சுயாதீனமானதும், வாழ்வியல் சார்ந்ததுமான கல்விக் கொள்கை ஒன்றை முன்னெடுப்பதற்கு, இலங்கையின் கல்விசார் சமூகத்திற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

மலையகத் தமிழர்கள் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாகவே நேரடியாகவோ, மறைமுகமாகவோ காலணித்துவ கல்வி முறைகளை விழுங்கிவிட்டுதம் சொந்த வாழ்வியலில் இருந்தே தம்மை அன்னியப்படுத்திக் கொண்டுள்ளனர். இந்நிலையில் கல்வியல் சமூகத்தின் சுயாதீனம், வேதன உயர்வு. பதவி உயர்வு, சம்பள நிலுவைகள் வழங்குதல். இடமாற்றம், தொழில்பயிற்சி வீட்டுவசதி, உயர்கல்வி. புலமைப்பரிசில்கள் வழங்குதல் போன்ற விடயங்களில் அதிக வாஞ்சையுடன் புதிய அரசு ஈடுபடுமாயின் மலையகக் கல்வியல் சமூகம் அதற்கு தலைவணங்கும் என்று எதிர்பார்க்கலாம்.என மலையக முற்போக்கு ஆசிரியர் சங்கம் தங்களது கருத்தை வெளி யிட்டுள்ளது.

# மலையக மக்களுக்கு புதிய அரசியலமைப்பு

செ.தி.பெருமாள்.

மஸ்கெலியா இந்திய வம்சாவழித் தமிழர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண புதிய அரசியலமைப்பைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவரபடவுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். இந்நிலையில் இந்தியவம்சாவழி மக்களின் பிரச்சனைகள், உரிமைகள் சம்பந்தமான சகல பிரச்சனைகளையும் கலந்துரையாடிதீர்மானமெடுத்து எமது நிலைப்பாட்டை ஜனாதிபதிக்குச் சமர்பிக்க வேண்டுமென மூத்த தொழிற்சங்கவாதியான திரு O.A இராமையா J.P. தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் புதிய அரசியலமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஊடகங்கள் மூலம் அறிவித்துள்ள நமது நாட்டு ஜனாதிபதி அரசியல் அமைப்பு ஆய்வுக்கான உப குழு ஒன்றையும் நியமித்துள்ளார். புதிய அரசியலமைப்புத் திட்டமானது முழு நாட்டு மக்களையும் தொடர்புபடுத்துவதாக அமைந்துள்ளது ஒவ்வொருவரும் அவதானத்துடன் செயற்பட வேண்டிய சந்தர்ப்பம் இதுவாகும்.

1972ல் அன்றைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா, கொல்வின் ஆர்டி சில்வா மூலம் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வந்தார். அதில் பல முற்போக்கு அம்சங்கள் இருந்த போதிலும் தமிழ் மக்களின் கருத்துக்கள் புறக்கணிக்கபட்டிருந்ததால் தமிழ் மக்கள் அதனை பகிஷ்கரித்தனர்.

எனவே இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியாமல் போனதும், முன்னர் இருந்ததை விட மோசமான நிலை உருவாகியது.

1978ல் ஜே.ஆர்.ஜயவர்தனா ஜனாதிபதி மீண்டும் அரசியல் அமைப்பில் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தார். எனினும் இனப்பிரச்சனையை தீர்க்க முடியவில்லை. அதேவேளை ஜே.ஆர்.ஜயவர்தனாவின் அரசியிலமைப்பு சீர்த்திருத்தத்தில் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் பல குறைபாடுகள் இருந்தாலும், சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்துக்கு ஏற்புடையதாக இருந்தது, எனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் இன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க கொண்டு வரவுள்ள புதிய அரசியலமைப்புக்குறித்து மிகவும் அவதானமாகச் செயற்படுவதோடு தமிழ் முஸ்லீம்களின் சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகளையும் ஏற்றுக் கொண்டு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணியின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும். ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்திய வம்சாவளி மக்களின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் வட கிழக்குத்தமிழ் பாராளுமன்ற பிரதிநிதிகளுடனும் இணைந்து தீர்க்கதரிசனத்துடனும் நிசானத்துடனும் செயற்படவேண்டியது [illegible]யமாகும்.

[illegible]திய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கு முன்னர் இந்தியவம்சாவழி மக்களுக்குத் தலைமை தாங்கும் சகல அமைப்புகளும் கருத்து முரண்பாடுகளையும் கௌரவத்தையும் ஒதுக்கிவைத்து விட்டு சகலரும் ஒன்றிணைந்து தீர்க்கமான தீர்மானமெடுத்து ஆலோசனைகளை சமர்பிப்பதே எதிர்காலத்துக்குப் பாதுகாப்பை ஏற்படுத்துவதாக இருக்கும்.

எனவே இந்த விடயத்தில் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களோடு வெகுஜன அபிப்பிராயத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இறுதி நேரத்தில் அவசரப்பட்டு முடிவுகளை எடுப்பதை தவிர்த்துக் கொண்டு இப்போதிலிருந்தே அனைத்து அமைப்புகளும் இதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென திரு.O.A இராமையா தெரிவித்தார்.

## குறளும் பொருளும்



குறள் : "கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை
அடும்காலை உள்ளினும் உள்ளம் சுடும்"
(அதி 80-குறள் 799)

பொருள் : கேடுவரும் காலத்தில் கைவிட்டு ஒதுங்கிப் போகின்றவரின் நட்பை, மரணத்தறுவாயிலும் நினைக்கும் போது உள்ளத்தை வாட்டுவதாகவே இருக்கும்.




## விடுகதை

1. உயிரில்லாத நீதிபதி ஒழுங்காகத் தீர்ப்பு வழங்குவான் அவன் யார்?
   தராசு
2. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ அது என்ன?
   சிரிப்பூ
3. சேர மாட்டார்கள் பகைவருமல்ல, பிரிய மாட்டார்கள் நண்பருமல்ல அவன் யார்?
   தண்டவாளம்
4. இருந்த இடத்தில் இருந்தபடி காலம் காட்டுபவன் யார்?
   கடிகாரம்
5. ஏட்டில் எழுதாத எழுத்து என்ன எழுத்து?
   தலை எழுத்து
6. கூட்டினாலும் பெருக்கினாலும் ஒரே விடை அது என்ன?
   குப்பை
7. தலையைச் சீவினால் கறுப்பு நாக்கை நீட்டுவான் அவன் யார்?
   பென்சில்

அ. அஸாம், தரம் -4.
ஆண்டியா புளியங்குளம் ம. வி.

## அறிந்து கொள்ளுங்கள்

1) முத்தமிழ்களானவை:- இயல், இசை, நாடகம்
2) பசிவந்திடப்பறந்துபோகின்ற பத்தும்:-
மானம், கல்வி, குலம், ஈகை, அறிவு, தானம், தவம், உயர்வு, தொழில், முயற்சி, (தேன்போல் இனிக்கும் மொழி பேசும் மங்கை மேல் விருப்பங் கொள்ளல்) மாது மயக்கம்.
3) "பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க" என்பதில் பதினாறு செல்வங்களும்:-
புகழ், கல்வி, ஆற்றல், வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்வாழ்வு, நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, ஆயுட்காலம்.

விஜயரட்ணம் கஸ்தூரி, வட்டுக்கோட்டை

## பேசும் குகை

அது ஒரு அடர்ந்த காடு. அங்கே சிங்கம் ஒன்று வசித்து வந்தது. ஒரு நாள் சிங்கம் உணவு தேடிக் காட்டில் அலைந்து திரிந்து ஒரு மிருகமும் கிடைக்கவில்லை. நீண்ட நேரம் கழித்து ஒரு குகையைக் கண்டது. உற்றுப் பார்த்தது. அதற்குள் ஒன்றும்





இருக்க வில்லை "சரி.. சரி" இந்த குகையில் தங்கும் மிருகம் நிச்சயமாக இங்கு வரும் அப்போது நான் அதைக் கொன்று தின்னலாம். அது வரையும் பொறுத்திருப்போம் என்று கூறிக் குகைக்குள் ஒளிந்து கொண்டது.

சிலமணி நேரத்தின் பின் அந்தக் குகையில் வசித்து வந்த நரி வழமைபோல் இரை தேடிவிட்டுக் குகைக்கு வந்தது. குகையின் வாசலில் புதிய ஒரு மிருகத்தின் அடிச்சுவடு பதிந்திருப்பதைக் கண்டது.

நரி குகைக்குள் இருப்பது யாரென அறிய விரும்பியது. குகையை நோக்கி "குகையே" குகையே" தினமும் நான் வரும்போது என்னை வரவேற்பாயே! இன்று ஏன் பேசாமல் இருக்கிறாய்" என்றது.

உள்ளே இருந்த சிங்கம் யோசித்தது. இக்குகை நரியோடு பேசும்போல இருக்கிறது. நான் பேசாமல் இருந்தால் ஒருவேளை இந்த நரி இங்கிருந்து போய்விடுமோ? என்று அஞ்சியது. இதையும் விட்டால் வேறு என்ன செய்வது! என்று மனதுக்குள் எண்ணிக கொண்டது.

"வாருங்கள் நரியே" இன்று ஏன் இவ்வளவு தாமதம்!" என்றது. சிங்கத்தின் குரலைக் கேட்ட நரி தப்பினோம் பிழைத்தோம் என்று கூறிக்கொண்டு ஓட்டம் பிடித்தது. சிங்கம் நெடுநேரம் குகைக்குள் இருந்தது. நரி வரவேயில்லை. ஈற்றில் ஏமாற்றத்துடன் அது குகையைவிட்டு வெளியேறியது.

*"புத்தியுள்ளவர்கள் ஆபத்திலிருந்து தப்பிக் கொள்வர்"*

## கல்விக் கட்டுரை

கல்வி என்பது மனிதனுக்கு அறிவூட்டும் ஒளிவிளக்குப் போன்றது. மனிதரிடத்திலுள்ள அறியாமையைப் போக்கி நல்வழி காட்டவல்லது. கற்றறிந்தவனே கண்ணுடையவனாகக் கருதப்படுவான். கல்வியறிவில்லாதவன் கண்களிருந்தும் கண்களற்றவன் எனக் கருதப்படுவான். ஆகவே மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் கற்க வேண்டியவற்றைக் கற்று, கற்ற நெறிப்படி ஒழுகுதல் வேண்டும் இதனையே திருவள்ளுவரும்.

**'கற்க கசடறக் கற்றவை கற்றபின் நிற்க அதற்குத்தக' என்கிறார்.'**

உலகில் இருவகைச் செல்வங்கள் உள்ளன. ஒன்று கல்விச் செல்வம், மற்றயது பொருட் செல்வம். பொருட் செல்வம் பிறருக்கு கொடுக்கும் போது குறைவடை யும், ஆனால் கல்விச் செல்வம் வெள்ளத்தால், நெருப்பால் அழியாதது. பிறருக்குக் கொடுக்கும் போதும் அவை பெருகிக் கொண்டே செல்கிறது.

கற்றோருக்குச் செல்லும் இடமெல்லாம் சிறப்புண்டு. ஒருவனுக்குக் கல்வியழகே உண்மையான அழகாகும். கல்வி அறிவைப் பெறுவதற்கு நாம் முயற்சிக்கவேண்டும். கல்வியறிவால் நாமும், எங்கள் நாடும் முன்னேற முடியும். இதனை உணர்ந்து அனைவரும் கல்விச்செல்வத்தைப் பெருக்கிக்கொள்ள நாம் ஒவ்வொரும் முயற்சிக்க வேண்டும்.

த.கோகிலா.
கி.ச.பாடசாலை, கல்கிசை.





சென்ற வார இதழில் "உங்கள் சித்திரம்" பகுதியில் ஆக்கத்தை அனுப்பிய மாணவனின் பெயர் தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டதற்கு வருந்துகின்றோம்.
சரியான பெயர் கீழ்வருமாறு:
**த. கிருஷாந், தரம்-10, பிறமண்டு வித்தியாலயம், வவுனியா.**

## வர்ணம் தீட்டி அனுப்புங்கள் சிறந்ததிற்குப் பரிசு உண்டு - 20



நீங்கள் அனுப்ப வேண்டிய வர்ணம் தீட்டற்போட்டி
இறுதித் திகதி: 29/07/2004 (முகவரி: த.பெ.இல. 1601, கொழும்பு)

## உங்கள் சித்திரம்



டில்லினி- பவித்திரா.
தரம் -1,
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை,
கல்கிசை.

### கண்டு பிடியுங்கள்-18

பெயர் : ..............................
வயது : ..............................
பாடசாலை : ..............................
முகவரி : ..............................

### வர்ணம் தீட்டும் போட்டி-18

பெயர் : ..............................
வயது : ..............................
பாடசாலை : ..............................

## கண்டுபிடியுங்கள் - 20



இக்கட்டத்தில் மூன்று பறவைகள் குழப்பப்பட்ட நிலையில் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து பொருத்தி ஒட்டி அனுப்பவும்.

அனுப்ப வேண்டிய இறுதித்திகதி : 29/07/2004

# வணிகச் சுழற்சி

குறைந்த முதலீட்டில் கூடிய இலாபம் "குட்வில்"

தரவுத் தொடர்பாடல் பற்றிய அறிமுகம்

**Buss. Cycle**



## குறைந்த முதலீட்டில் கூடிய இலாபம் "குட்வில்"

இலங்கையில் விவசாய உபகரணங்களை குறைந்த விலையில் விவசாயிகள் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அவற்றை சீனாவிலிருந்து இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது "குட்வில்" நிறுவனம்.

குட்வில் நான்கு சக்கர உழவு இயந்திரங்களின் விசேட தன்மையானது வேலை செய்வதற்கான கூடுதல் வாய்ப்பேயாகும்.

இந்நிறுவனம் அறிமுகப்படுத்தும் உழவு இயந்திரங்களில் சிறிய இயந்திரமே TS12B (குதிரைவலு 12) ஆகும். 21 கிலோமீற்றர் வேகத்திலும் டீசல் லீற்றருக்கு 20 கிலோ மீற்றர் வேலை செய்யக்கூடிய தன்மை கொண்டது.

நீரால் குளிரூட்டலும் தன்னியக்கத்துடன் அல்லது கைச்சூழல் மூலமும் உயிரூட்டலாம். 920 கிலோ எடை கொண்ட இந்த உழவு இயந்திரத்தின் முன் சில்லின் அளவு 4.00X 12k பின் சில்லின் அளவு 7.50X16ஆகும்.

இந்த இயந்திரத்துக்கான உதிரிப்பாகங்களை நாடெங்கும் தாராளமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம். அதற்கு காரணம்





இதில் 3195N ரக என்ஜின் பொருத்தப்பட்டுள்ளமையாகும்.

1500 கிலோ எடையை டிப்பர் செய்யவும். 3500 கிலோவுக்கு சமமான எடையை இடித்துச் செல்லவும் முடியும். அதற்கான ரிப்பிங் டேலரின் அளவு 07 அடி நீளமும் 5அடி அகலமும் 15 அங்குலம் உயரமும் ஆகும். வட்டியில்லா தவணை முறைக்கு முதலில் 55% செலுத்தி மிகுதியை 36 மாத தவணையில் செலுத்தலாம்.

இழுவைப் பெட்டியுடன் கூடிய உழவு இயந்திரம் ரூ.262,000/= செலுத்தி கொள்வனவு செய்யலாம்.

பல விருதுகளையும் ISO 9001:94 தரச் சான்றிதழையும் பெற்றுள்ள இந்த குட்வில் நான்கு சக்கர உழவு இயந்திரம் பற்றிய மேலதிக விபரங்களுக்கு 2818415 என்ற தொலைபேசியுடாக தொடர்பு கொள்ளலாம்.

## இலங்கை வங்கியின் "மகளிர் பொற் கணக்கு"

இலங்கையில் முதல் முறையாக பெண்களிற்கான ஒரு சேமிப்புக் கணக்கை ஆரம்பித்த பெருமை இலங்கை வங்கியையே சேரும். இந்தக் "காந்தா ரன்கினும்" என்ற பொற் கணக்கு ஏனைய சேமிப்புக் கணக்குகளை விட அதிக நன்மைகளைத் தரக்கூடியதாக உள்ளது.

இந்தச் சேமிப்பு கணக்கை, 18 வயதிற்கு மேற்பட்ட எந்தப் பெண்ணும் ஆரம்பிக்கலாம். இதன் ஆரம்ப வைப்புத் தொகையாக 500/= மட்டுமே தேவைப்படும். இலங்கை வங்கியின் கணனி மயப்படுத்தப்பட்ட எந்தக் கிளையிலும் இக் கணக்கை ஆரம்பிக்கலாம். இக் கணக்கின் விசேட அம்சமாக இலவச ஆயுள் மற்றும் விபத்துக் காப்புறுதி பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும். இக்கணக்கில் தொடர்ந்து 5000/= குறைந்த பட்சம் பேணப்பட வேண்டும் என்ற ஒரே ஒரு நிபந்தனையைத் தவிர ஏனைய அநேக அனுகூலங்களை இக்கணக்கின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

இதைவிட இலங்கை வங்கி அடகுச் சேவையில் மகளிர் பொற் கணக்கு வைத்திருப்பவர்களிற்கு விசேட கழிவாக 2% வழங்கப்படுகின்றது. இக் கணக்கின் மூலம் 500,000/= வரை காப்புறுதிப் பணத்தைப் பெறமுடியும். தீ விபத்து, மின்சாரம் மூலம் ஏற்படுகின்ற அழிவுகளிற்கு வைப்பில் உள்ள பணத்தில் 5 மடங்கு தொகை வழங்கப்படும்.

## வெளிநாட்டு உயர்கல்வி, தொழில் முயற்சி சம்பந்தமான இலவச ஆலோசனைகளும் வழிகாட்டல்களும்

இப்போது தலைநகரில் எமது தமிழ் பேசும் மாணவர்களும், இளைஞர்களும் வெளிநாட்டு உயர்கல்வி மற்றும், வெளிநாட்டு தொழில் முயற்சிகளிலும் பல வகையான சிரமங்கள்ள எதிர்கொள்கின்றனர். இது போன்ற பல பிரச்சனைகள் தலைநகரில் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகின்றன.

பொதுவாக லண்டன், கனடா, மலேசியா போன்ற நாடுகளில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் எமது மாணவர்கள் பலவகையான சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பல்கலைக் கழக அல்லது கல்லூரிகளின் அனுமதியை எவ்வாறு பெறுவது? வெளிநாட்டு உயர் கல்விக்கான ஆவணங்களை எவ்வாறு சரியான முறையில் தயார்படுத்துவது? என்பது பற்றிய வழிகாட்டல் இல்லாமையின் காரணமாக வெளிநாட்டு தூதரகங்களினால் எமது மாணவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன.

இவைகள் மட்டுமன்றி Appointments, Appeals, Re-Applications, Interview, English சரியானஆவணங்கள் என பல வகையான பிரச்சனைகள் மாணவர் மத்தியில் தற்போது நிலவிவருகின்றன. இது போன்ற பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் எமது தமிழ் பேசும் மாணவர்கள் எம்மை தொடர்பு கொள்வதன் மூலம் முடியும் வரை எங்களது விண்ணப்பங்களை வெளிநாட்டு தூதரகங்களினால் நிராகரிக்கப்படாமல் நீங்களே சுயமாக இலகுவான முறையில் Visaக்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதுபோன்ற எமது நாட்டு இளைஞர்களும் தொழில்வாய்ப்பை நாடி வெளிநாடு செல்ல முயற்சிக்கும் போது பல பிரச்சனைகளையும் சிரமங்களையும் எதிர்நோக்குகின்றனர். போலி வெளிநாட்டு முகவர்களாலும் ஏமாற்றப்படுகின்றனர். இவ்வாறான பிரச்சனைகள் அனைத்துக்கும் காரணம் சரியான வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் இல்லாமையே.

இவ்வாறான பிரச்சனைகளையும், சிரமங்களையும் எதிர்நோக்கும் மாணவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் 0322269104 என்ற இலக்கத்தின் ஊடாகவும் திங்கள் முதல் புதன் வரை 0114203646 என்ற இலக்கத்தின் ஊடாகவும் tmsafree@yahoo.com என்ற இணைய முகவரியூடாகவும் நில்வானை தொடர்பு கொண்டு இலவச ஆலோசனைகளைப் பெற முடியும்.

சகல தொடர்புகளுக்கும்:-

EBS-INTERNATIONAL (PVT) LTD
162 B1/1 1st Floor
Galle Road
Dehiwala
0114-203646

# தரமான ஊது பத்திகள் இறக்குமதி செய்யப்படுகின்றது

மும்தாஜ் அகர் பத்திகள் மைசூரிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றது. வெளிநாடுகளில் பிரசித்திபெற்ற மும்தாஜ் அகர் பத்திகள்யாவும் நாள் முழுவதும் மணம் கமழும் அற்புத ஆயுர்வேதங்களுடன் புகழ்பெற்ற ஊது பத்திகளாக வாசனைத்திரவியம், தேன் கலந்து வழங்கப்படுகிறது.




இது இலங்கை மக்களுக்கு கிடைக்க வேண்டுமென்ற, ஆவலுடன் இறக்குமதி செய்யப்படுகின்றது. எமது நாட்டின் இறை வழிபாடுகளுக்கு மட்டுமல்லாது, வீடுகள், கடைகள் யாவற்றிலும் கமகமவென சுகந்த மணத்தை தரக்கூடிய அற்புதமான தயாரிப்பு தேன், (அகில்), சந்தனக்கட்டை கலந்த உயர்தர அகர் பத்தியாகும்.

இந்தியாவில் மைசூரில் மிக சிறந்த உற்பத்தியாளர்களால் செய்யப்பட்டு பலரின் பாராட்டுதலையும் பெற்றது. இவற்றை நமது நாட்டிற்கு நாம் அறிமுகம் செய்துவைப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். மிகவும் சிறப்பான நவீன முறையிலான பக்கட்டில் அடைக்கப்பட்டுள்ளது.

பரபரப்பான நேரத்திலும் நறு மணத்துடன் அன்றாடம் வேலைகளைக் கவனிக்க உற்சாகத்தை தரக்கூடிய மணம் கமளும் பத்திகள்.

மனத்திற்கு புத்துணர்ச்சி தரக்கூடியவை, இல்லங்களுக்கு விருந்தினர்கள் வந்தால் சந்தோசத்தையும் அன்பையும் பகிர்ந்துகொள்ளக்கூடியவை.

**கஸ்தூரி பத்திகள் 5 நறுமணங்கள் கொண்டவை,**

1) Tulasi Masala
2) Ever Green
3) Jasmine
4) Fruity
5) Chandan

**சங்கவி 7 நறுமணங்களைக் கொண்டவை,**

1) Fruity Flora
2) Sandal
3) Ajooba
4) Rose
5) Jawadh
6) Malli
7) Bvnyaat

இதில் இலவச, சாம்பிராணி பக்கட் வழங்கப்படும்.




மேற்கூறிய தரமான பத்திகளை பத்தவைக்க முடியும். போலி தயாரிப்புகள் உலாவி வரும் இந்த நேரத்தில் தரமான ஊது பத்திகளை இலங்கை நாட்டிற்கு, கொழும்பு 15இல் அமைந்துள்ள AMMAR TRADING நிறுவனத்தினர் இறக்குமதி செய்துள்ளனர்.

# CIMA கல்வி நிறுவனத்தின் சேவை விஸ்தரிப்பு

CIMA கற்கை நெறிகளைப் பயிலும், மாணவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இந்நிறுவனம் தனது சேவையை நாடெங்கிலும் முன்னெடுக்க உள்ளது. முன்னர் கொழும்பில் மட்டுமே இருந்த இதன் சேவைகள் தற்பொழுது யாழ்ப்பாணத்திலும், கண்டி, குருநாகல், மாத்தறை, கம்பஹா, நீர்கொழும்பு போன்ற இடங்களிற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதன் சேவைகள் மேலும் பல இடங்களிற்கு தொடரவுள்ளன. இக் கற்கை நெறியை மாணவர் மேற்கொள்ள வசதியாக வங்கிக் கடன்களை CIMA கல்வி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இந்தச் செயற்பாட்டிற்கு வங்கிகள் பல இணங்கியுள்ளன. இந்த வங்கிக் கடன்களை பெறும் மாணவர்கள் தமது பயிற்சிகளை முடித்து தொழில் ஒன்றைப் பெற்றுக் கொண்ட பின்னர் தமது கடன்களைத் திருப்பிச் செலுத்தலாம். இது போல தொழில் வாய்ப்பொன்றை பெற்றுக் கொடுக்கும் முகமாக



தொழில் வங்கியொன்றும் செயற்படுத்தப்படவுள்ளது.

CIMA கற்கை நெறிகளை மேற்கொண்டவர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சிறந்த பதவிகளை வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைப் பங்குச் சந்தையின் துரித வளர்ச்சி

இலங்கை பங்குச்சந்தையானது 1977ம் ஆண்டுக்கு முன்னர் வீழ்ச்சியடைந்தே காணப்பட்டது. அதற்கான காரணமாக அக்காலத்தில் அரசின் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களின் கொள்கைகளாக இருந்தது.

1977ம்ஆண்டுக்கு பின்னர் இலங்கையின் வெளிநாட்டு கொள்கை மாற்றமடைந்தது, ஏற்றுமதியை நோக்கிய கொள்கை நடைமுறையில் வளர்ச்சியடைந்தது. இதன் காரணமாக பல கம்பனிகள் உருவாக்கப்பட்டு செயற்பட்டு பங்குச்சந்தை வளர்ச்சியடைந்தது,

தற்பொழுது பங்குச்சந்தை நடவடிக்கைகள் முற்றுமுழுதாக கணனிமயப்பட்டு கொள்வனவு விற்பனை இடம்பெற்று வருகின்றது. இதனால் இலங்கையின் பங்குச்சந்தை துரித வளர்ச்சியை அடைந்துள்ளது. *ச.மயூரன்*

# பங்குகள் விற்பனை கொள்வனவு தொடர்பான விழிப்புணர்வு

இலங்கை வவுனியா வர்த்தகக் கைத்தொழில்கள் சம்மேளனத்தால் மிகவிரைவில் வவுனியா நகரில் பங்குகளின் விற்பனை, கொள்வனவு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கை செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

கொழும்பிலுள்ள இரண்டு பங்கு விற்பனை முகவர் நிறுவனங்களை நேரடியாக வவுனியாவிற்கு தருவித்து நிறுவனங்களால் விற்பனை செய்கின்ற பங்குகளை எப்படி கொள் வனவு செய்தல், கொள்வனவு செய்த பங்கு களை எப்படி விற்பனை செய்வது போன்றவைகளுடன் நிறுவனங்களின் பங்குகள் பற்றிய விழிப்புணர்வுகளை வவுனியா வர்த்தகர் மத்தியில் ஏற்படுத்துவதற்காகவே இவ் விழிப்புணர்வு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

ச.மயூரன்.

# தரவுத் தொடர்பாடல் பற்றிய அறிமுகம்

இதுவரை நிலவிய விவசாயப் பொருளாதாரம் கைத்தொழில் பொருளாதாரங்களுடன் தகவல் பொருளாதாரமும் இணைந்து கொண்டுள்ளது. விவசாயக் கைத்தொழில் துறைகளிலும் இன்று தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றன. விவசாயம், கைத்தொழில் தகவல் ஆகிய அம்சங்களை ஒன்றுடன் ஒன்று இணைந்த வாணிபத்தில், தகவல் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு ஏற்பட்டு புதிய வணிகச் சரித்திரம் படைக்கப்பட்டுள்ளதோடு அது இலத்திரனியல் வணிகம் (E-Commerce) என அழைக்கப்படுகிறத்

தகவல் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படும் துறைகளில் கட்டுப்பாடுகளை காணமுடியாது. சிறுபிள்ளைகளும் தொழிற்படுதல் பாடசாலைக் கல்விக்கு பயன்படுத்தல், வைத்தியசாலைகளில் பயன்படுத்த முடிதல், விமானங்களை ஒட்டுதல், விண்வெளிக் கருமங்களில் பயன்படுத்துதல் போன்று சமூகத்தில் எல்லா துறைகளிலும் தகவல் தொழில் நுட்பம் செல்வாக்கு பெற்றுள்ளது.

எமது வியாபாரப் பரப்பில் தகவல் தொழில் நுட்பத்தின் பயன்பாட்டைத் கருத்திற் கொள்ளுவோம். இங்கு மிகப் பெருமளவில் தகவல் தொழில் நுட்பத்தைப் பிரதானமாகப் பயன் படுத்தும் சந்தர்ப்பங்களில் சிலவற்றில் எமது கவனத்தைச் செலுத்துவோம்.

**வங்கியும் நிதியும்**

கணனித் தகவல் தொழில்நுட்பத்தை மிகவும் பயனுடையதாகப் பயன்படுத்தும் வணிகத் துறைகளில் ஒன்றாக வங்கித் துறையைக் குறிப்பிடமுடியும். இங்கு பின்வரும் அம்சங்களைக் குறிப்பிட்டுக் காட்டலாம்.

**ஏக வங்கிமுறை**

(Uni Banking Systems)

இம்முறையின்படி குறித்த ஒரு வங்கியின் எல்லாக் கிளைகளும், கணனிமயப்படுத்தப்பட்டு ஒவ்வொரு வங்கியும் கணனிவலையமைப்பு மூலமாக தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இதனால் குறித்த ஒரு வாடிக்கையாளர் குறித்த ஒரு கிளையுடன் மட்டுப்படுத்தப்படாது, 24 மணித்தியாலங்களும் வங்கிச் சேவையைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

இதனால் கிளைகள் ஒரே வங்கியில் செயற்படுவதைக் காணமுடிகின்றது. இதன் காரணமாக குறித்த வங்கியில் அல்லது பகிரங்கமாக ஓரிடத்தில் உள்ள ATM (Automated Teller machiness) இயந்திரம் மூலமாக தன்னிடம் உள்ள பிளாஸ்டிக் அட்டையை (Plastic ATM card) பயன்படுத்தி தேவையான கொடுக்கல் வாங்கலை நிகழ்த்திக் கொள்ள முடியும்.

**இலத்திரனியல் பணம்** (E-Money)

இலத்திரனியல் EFT

(Electronic Funds Transter)

இன்று வரை பாரம்பரிய பணமாகப் பயன்பட்டுவந்த தாள் நாணயங்கள் உலோக நாணயங்கள் காசோலைகள் போன்றவற்றின் பயன்பாடு நீங்கி அதற்குப் பதிலாக பிளாஸ்டிக் காட் பயன்பாட்டுக்கு வந்து கொண்டிருக்கின்றன. இப்போது பாரம்பரியமான பணப்பயன்பாடு நீங்கி வருகின்றது.

பிளாஸ்டிக் காட் மூலமாக கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு வங்கி வலையமைப்புடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பிளாஸ்டிக் காட்மூலமான கொடுக்கல் வாங்கல் நிகழ்த்தப்படுவதால் இந்த அட்டைகள் (E- Mony) இலத்திரனியல் பணம் எனப்படுகின்றன. இதனால் நிறுவனத்துள்ளே இலத்திரனியல் மூலமாகப் பணப் பாய்ச்சல் நிகழ்கின்றன. இம்முறை இலத்திரனியல் பணப் பரிமாற்று (EFT) என்று அழைக்கப்படும்.

**நடு நிலை வங்கிமுறை**

(Inter Banking)

இது ஏக வங்கிமுறையின் முன்னேற்றமாகும். கணனி மயப்படுத்தப்பட்ட கிளை வலையமைப்புடைய வங்கிகள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கும் இதன்மூலமாக ஒரு வங்கிக் கிளை கணக்குள்ளவர் மற்றொரு வங்கியின் ATM இயந்திரம் மூலமாகவும் கொடுக்கல் வாங்கல்களை நிகழ்த்த முடியும்.

**R.ரஞ்சித்குமார்.**



## லேட்டஸ்ட் வோக்மன்

ஜப்பான் என்றாலே எல்லோருக்கும் தெரியும் அது புதிய புதிய கண்டுபிடிப்புக்களிற்கு பெயர்போன நாடு என்பது. இந்த ஜப்பான் நாட்டின் அடுத்த லேட்டஸ்ட் கண்டுபிடிப்பாக சோனி நிறுவனம் புதிய வோக்மன் ரேடியோவை கண்டுப்பிடித்துள்ளது. சோனி நிறுவனத்தின் 25வது வருட பூர்த்திவிழாவை கொண்டாடும் முகமாகவே இவ் வோக்மன் தயாரிக்கப்பட்டள்ளது. இந்த நவீன வோக்மனில் 20 ஜி.பி அளவில் ஹார்ட் இருக்கின்றது. அதில் ஏற்கனவே பாடல்களைப் பதிவு செய்து கொள்ளலாம். இந்த லேட்டர்ஸ் வோக்மன் வரும் ஒகஸ்ட் மாதம் அமெரிக்க சந்தையிலும் அறிமுகப் படுத்தப்படவிருகின்றது.

# புதிய நட்சத்திரக்கூட்டம்

பிரபஞ்சத்தில் மிகப்பெரிய பிரகாசமான, அதி வெப்பமான நட்சத்திரக் கூட்டமொன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஹவாய் தீவில் மானாகி (Mavna Kea) என்ற எரிமலையில் அமைக்கப்பட்ட அதி சக்தி வாய்ந்த தொலைநோக்கியின் மூலம் இந்த பழமையான நட்சத்திரக்கூட்டம் கண்டிறியப் பட்டுள்ளது.

பாப்ஃபோர்ட் ஹோல்டன் (Bradford Holden) மற்றும் பல வானியல் ஆராய்ச்சியாளர்கள் குழு, லட்சக்கணக்கான அளவில் உள்ள இந்த நட்சத்திரக் கூட்டத்தை கண்டறிந்து அறிவித்துள்ளன. நட்சத்திர மண்டலத்தின் பால் வீதியில் உள்ள ஓரியன் நெபூலா என்ற நட்சத்திரக் கூட்டத்தை விட பல மடங்கு பிரகாசமான ஒளியை இந்த புதிய நட்சத்திரக் கூட்டம் கொண்டிருக்கின்றதாம். பூமியில் இருந்து 1.2 கோடி ஒளி ஆண்டுகள் தூரத்தில் இருக்கும் இந்த நட்சத்திரக் கும்பல் பிரபஞ்சம் தோன்றி இருநூறு கோடி ஆண்டுகள் கழித்து உருவாகியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

## கடல் பரப்பு

பூமியின் மொத்த நிலப்பரப்பில் 70.98 சதவீதம் கடல்களே இந்தக் கடல்களில் மொத்தப் பரப்பு 3,62,033,000 $km^2$. கடல் நீரின் மொத்தக் கன அளவு (Volume) 1,349,900,000$km^3$

உலகின் மிகப் பெரிய பெருங்கடல் "பசுபிக் பெருங்கடல்" (உலகப் பெருங்கடல்களில் 45.9% பசுபிக் கடலே). உலகின் ஆழமான கடலும் பசுபிக் பெருங்கடல் தான்.

மிகப் பெரிய விரிகுடா (Bay) வட கனடாவில் "ஹட்சன் விரிகுடா இதன் கடற் பரப்பு 12,268 km

1,500,000 $km^2$ பரப்பு கொண்ட "மெக்சிகோ" வளைகுடாவே உலகின் மிகப் பெரும் வளைகுடா ஆகும்.

## ஆண்டும் அறிமுகமும்

1907 - ஹெலிகொப்டர்
1917 - லிப்ஸ்டிக், புலிட்ஸர் விருது (இலக்கியம், பத்திரிகை)
1918 - எயாமெயில், பெண்களின் வாக்குரிமை, சிவப்பு, மஞ்சள், பச்சை வீதி விளக்குகள்
1922 - பி.பி.சி வானொலி
1923 - Time - வார இதழ்
1927 - பேசும் சினிமா
1928 - பபுள்கம்
1930 - நைலோன் நூல்
1933 - ஜீன்ஸ், ஷோர்ட் பெண்கள் அணிதல்.
1938 - நெஸ்கபே என்ற கோப்பி

## புனை பெயர்கள்

*முடிவில்லா நகரம் - ரோமாபுரி*
*புயலடிக்கும் நகரம் - சிகாகோ*
*உலகின் தனிமைத்தீவு - (மத்திய அட்லாண்டிக் தீவு)*
*ஐரோப்பாவின் நோயாளி - துருக்கி*
*மரகதத் தீவு - அயர்லாந்து*

## தேசிய அடையாளங்கள்

அவுஸ்திரேலியா - கங்காரு
கனடா - வெள்ளை லில்லிமலர்
பிரான்ஸ் - லில்லி மலர்
இந்தியா - அசோகச் சின்னம்
பாகிஸ்தான் - பிறைச்சந்திரன்
ஸ்பெயின் - பருந்து
இங்கிலாந்து - ரோஜாப்பூ
அமெரிக்கா - தங்கக்கம்பி
ஐ.நா.சபை - ஒலிவ் மரக்கிளை

# ஸ்ரீலங்கா (இலங்கை)

ஜனநாயக சமதர்மக் குடியரசு நாடு. தலை நகர் கொழும்பு, பரப்பு 65,610 சகி.மீ, மக்கள் தொகை 18.5 மில்லியன், மொழி சிங்களம், தமிழ், ஆங்கிலம், மதம்:- புத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம், எழுத்தறிவு:- 90% நாணயம் ரூபாய்.

இந்தியாவின் தெற்கு முனையில் கிழக்கே 85 கி.மீ தொலைவில் இந்துமா கடலில் உள்ள தீவு, பிப்ரவரி 4, 1948 இல் சுதந்திரமடைந்தது மே 22 இல் குடியரசானது.

விளை பொருட்கள்:- ரப்பர், தேயிலை, தேங்காய், தொழில்கள: உணவுப் பதனம், மென்பானங்கள், புகையிலை, துணி, தோல் பொருட்கள், பெட்ரோலிய சுத்திகரிப்பு, ரப்பர் பிளாஸ்டீக், முக்கிய ஏற்றுமதிகள: தேயிலை உலர் தேங்காய், ஆடைகள், தேங்காய்யெண்ணெய் விலையுயர்ந்த கற்கள் இறக்குமதி பெட்ரோலியம், எந்திரங்கள், உதிர்ப்பாகங்கள் வாகனங்கள்

## முக்கிய கடல்களும், பரப்பளவும்

| கடல் | பரப்பு (சதுரமைல்) | ஆழம் (அடிகளில்) |
|---|---|---|
| தென் சீனாகடல் | 1,148,500 | 4,802 |
| கரீபியன் கடல் | 971,400 | 8,448 |
| மெடிட்டரேனியல் கடல் | 969,100 | 4,926 |
| பெருங்கடல் | 873,000 | 4,893 |
| மெக்ஸிக்கோ கடல் | 582,000 | 5,297 |
| ஜப்பான் கடல் | 391,100 | 5,468 |
| ஒத்கோத்ஸ்க்கடல் | 537,500 | 3,192 |
| ஹட்சன் சீனக் கடல் | 281,900 | 305 |
| அந்தமான் கடல் | 256,600 | 62 |
| கருங் கடல் | 218,100 | 3,667 |
| செங்கடல் | 196,100 | 3,906 |
| வடக்குக் கடல் | 176,900 | 1,764 |
| பால்டிக் கடல் | 147,500 | 180 |
| மஞ்சள் கடல் | 113,500 | 121 |
| பர்சியன் கடல் | 88,800 | 328 |
| கலிபோர்னியா கடல் | 59,100 | 2,375 |

## சிறுநீரகத்தில் கல் எப்படி ஏற்படுகின்றது

நம் உணவில் இருக்கும் பல்வேறு உப்புக்கள், மினரல் சத்துக்களைச் சிறுநீரகம் கரைத்து ஆக்ஸலேட் பாஸ்ஃபோட், கல்சியம் என்று சிறு நீருடன் அனுப்புகின்றது.

பல்வேறு காரணங்களால் கரைந்த இவ் உப்புக்கள் சில சமயம் கட்டியாகி விடுகின்றன. இவற்றைத்தான் கற்கள் என்கின்றோம்.

இக்கற்கள் சின்னதாக இருக்கும் வரை சிறுநீரோடு போய் விடலாம். கொஞ்சம் ஷேப் ஏறுமாறாக இருந்தால் சிறுநீரிட் லேசாக ரத்தம் போகும். வலியிருக்காது. கற்கள் பெரிதானால், வலி அதி கமாகும்.

இவற்றை சத்திரச் சிகிச்சை மூலம் தான் எடுக்க நேரிடும்.

# ஆறுமுக நாவலர்

### யாழ்ப்பாணத்திலும் செந்தமிழ் உண்டு

பைபிள்திருத்தி அச்சிடும் பணியினை மேற்கொள்ளும் உத்தரவின் பேரில் பார்சிவல் பாதிரியார் தெரிவு செய்யப்பட்டார்.

அவர் தனது தமிழ்ப பண்டிதராகிய ஆறுமுக நாவலரையும் கூட்டிக் கொண்டு சென்னைக்குப் பயணித்தார்.

சென்னையில் பைபிளை அச்சிட வந்துள்ளனர் எனக் கேள்வியுற்று அங்குள்ள மிசநெறிமார் அங்கு வந்து யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர்கள் கல்வியிற் குறைந்தவர்கள், செந்தமிழ் பேசுபவர்கள் ஆரியர்களே, யாழ்ப்பாணத்தவரால் திருத்தப்பட்ட பைபிள் இங்கு பண்டிதர் முன்னிலையில் வாசிக்கப் பட்டு, வசனநடை நன்றாயிருக்கிறது. பிழையில்லலாமல் உள்ளது எனக் கூறினாலேயே அதனை அச்சிற் பதிக்கலாமெனவும், அவ்வாறு செய்யாமல் அச்சிலிட்டால் நாங்களதனை அங்கீகரிக்கமாட்டோம் எனவும் கூறினார்.

அச்சிற் பதிப்பித்துக்கொண்டு சீக்கிரம் போய்விடலாமென்றால் இங்கே தடை ஏற்படுகிறதே என பார்சிவல் பாதிரியார் கவலையுற்றார். பைபிளை வாசித்துக்காட்டினால் அவர்கள் சரியென்று சொல்வார்களோ, பிழை என்று சொல்வார்களோ என்றும், அப்படிப் பிழை என்று கூறிவிட்டால் நமக்கெல்லாம் அவமானம் நேருமே எனக் கூறி வருத்தமடைந்தார். இதன்படி அக்காலத்தில் சென்னைப் பட்டணத்தைதிலே சிறந்த வித்துவான்களாயிருந்த மகாவலிகங்கயரை தெரிவு செய்திருந்தார். அவர் பைபிளை முற்றுமுழுதாக வாசித்து அதிலே பிழை ஒன்றுமில்லை, வசன நடை நன்றாயிருக்கிறது. ஆதலால் அச்சிடத் தகுதியுடையது எனக் கூறினார். யாழ்ப்பாணத்தமிழை நன்கு பாராட்டினார்.

இதன் முலம் பாதிரியாரும் ஆறுமுகநாவலரும் யாழ்ப்பாணத்திலும் செந்தமிழ் உண்டெனச் சாதித்து வந்தனர்.

பாதிரியார் தமது ஆங்கில வித்தியாசாலையில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்த சைவ சமய வாத்தியார் இருவரை கிறிஸ்து சமயத்திற்கு மாறி ஞானஸ்ஞானம் செய்ய கூறியிருந்தார். அவர்களும் இதற்கு உடன்பட இதனை அறிந்த நாவலர் அவர்களுக்குச் சைவத்தின் தொன்மையும் சிறப்பையும் எடுத்து க்கூறி அவர்களைத் தடுத்தார்.




இதனை அறிந்து கோபப்பட்ட பாதிரியாரிடம் நானறிந்த சைவத்தின் உண்மைகளை அவர்களுக்கு கூறினேன். அவ்வளவுதான் "உம்மிடத்தில் நான் பண்டிதராயிருத்தல் உமக்குப் பிரியமில்லையெனில் நான் விலகி விடுகிறேன் என்றார்.

பாதிரியார் தான் அவரைப் போன்ற ஒரு நல்ல திறமையான பண்டிதரை இழக்க விரும்பாமல் அவருடன் சமாதானம் செய்துகொண்டனர்.ஆனால் மதம் மாறாத இருவரையும் பாதிரியார் உத்தியோகத்திலிருந்து நீக்கி விட்டார்.

*தொகுப்பு K. வர்ஷன் கொழும்பு.*

-தொடரும்-

# பொது அறிவு

## நூல்களும் ஆசிரியர்களும்

ஆசாரக் கோவை - ஔவையார்
அடைக்கல மாலை - வீரமாமுனிவர்
அம்பிகாவதி.அமராவதி - மறைமலையடிகள்
அர்த்த சாஸ்திரம் - கௌடில்யர் (சாணக்கியர்)
அரிச்சந்திர புராணம் - வீரகவிராயர்
அருணாசல புராணம் - எல்லப்ப நாவலர்
ஆசாரக் கோவை - பெருவாயின் முள்ளியார்
சீவக சிந்தாமணி - திருத்தக்கத் தேவர்

# குறுக்கெழுத்துப் போட்டி -18

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 ளி |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 ஜெ | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 ரை |

*மேலிருந்து கீழ்*

1. காண்டீபனுக்குக் கண்ணன் உபதேசித்த உயர் போதனை
3. இரும்பைப் பிடிப்பது இது.
4. மாவின் இளம் பிஞ்சு இது. காயம் ஆறினாலும் ஆறாததும் இது.
5. சங்கீதத்தின் உயிர் இது. இதற்கு மயங்காதவர் யார்?
6. நாதஸ்வரத்தின் நறுக்குத் தலைகீழாக நிற்கிறது.
21. பூமிக்கு இப்படியும் ஒரு பெயர்
26. நீர் கடைசி எழுத்தை இழந்துவிட்டது.

*இடமிருந்து வலம்*

1. கர்நாடக சங்கீத இராகத்தில் ஒன்று
9. வற்றிய மீன் குழம்பிவிட்டது.
13. மலையைக் குறிக்கும் ஒரு சொல்.
17. சீனாவின் அருகு நாடு. நடு எழுத்து இழந்து விட்டது. பூரணமான் இந்தச் சொல் சிங்கத்தையும் குறிக்கும்.
25. வீமனால் கொலையுண்ட காமுகன் இவன்.
30. அரசனைக் குறிக்கும் தனியெழுத்துச் சொல். பசுவையும் குறிக்கும்.
31. எண்ணெயை இப்படியும் அழைப்பர்
35. பசுமையான சத்தான உணவுப்பொருள்.

விடைகளை அனுப்பவேண்டிய இறுதித்திகதி 29.07.2004.
அனுப்பவேண்டிய முகவரி:

**தணலின் குறுக்கெழுத்துப் போட்டி –18**
**த.பெ.இல. 1601, கொழும்பு.**

### கண்டுபிடியுங்கள் போட்டி 18ல்

**பரிசுக்குரியவர்**

A.நுஸ்ரத் பாணு
முகமட் மகளிர் கல்லூரி
127, கல்முனை

**பாராட்டுப் பெறும் சிறுவர்கள்**

B.பாத்திமா சப்ரினா
மானிங்கலை மு.வித்தியாலயம்
சிலாபம்

யோ.கலாரஞ்சனி
சரஸ்வதி வித்தியாலயம்
சரசாலை

### வர்ணம் தீட்டும் போட்டி 18ல்

**பரிசுக்குரியவர்**

சு.கௌரீஷன்
சின்னப்புதுக்குளம்
வவுனியா.

**பாராட்டுப் பெறும் சிறுவர்கள்**

ச.கிரிசாந்
62, விகாரலேன், கொழும்பு-06

ஆ.இம்றான்
நெடுங்குளம் வீதி, புத்தளம்.

### குறுக்கெழுத்து போட்டி 16 இல் வெற்றி பெற்றவர்கள்

யோ.ஜெகதீஸ்வரி
சரசாலை தெற்கு
சாவகச்சேரி

# நீங்கள் உங்கள் உரிமைகளைப் பெற்றேயாக வேண்டும்!

## மு. பொன்னம்பலம் அவர்களுடனான ஒரு பேட்டி



- விஜெஏ

> பல்வேறு திருப்புமுனைகளோடு வளர்ச்சியுறும் ஈழத்து இலக்கியக் கூறுகளை, உதாரணங்களை மு. பொன்னம்பலம் அவர்களின் ஆக்க இலக்கியங்களிலும் கட்டுரைகளிலும் காணலாம். காலத்தினூடு கடந்து செல்லும் அவரது ஆற்றலுக்கு சாட்சியமாக அமைகின்றது. கவிதை சார்ந்து அவர் எழுதிய கட்டுரைகள் ஈழத்து இலக்கிய விமர்சனத்திலும் கவிதையின் உருவ உள்ளடக்கங்களைச் செம்மைப்படுத்துவதிலும் பெரிய செல்வாக்குச் செலுத்துவனவாக அமைகின்றன. இவர் முற்போக்கு எழுத்தாளர் என்பது மட்டுமல்ல மூத்த எழுத்தாளரும் கூட....

**கேள்வி:- ஆண்நிலைவாதத்தைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

*(இவரிடம் நேர்காணலுக்காக நான் சென்றிருந்த வேளை அவர் ஏன் நீங்கள் வந்திருக்கிறீர்கள் ஆண்கள் இல்லையா எனக்கேட்டார்)*

**பதில்:-** நான் இப்போது மொழி பெயர்த்துக் கொண்டிருப்பது ஆண்நிலைவாதத்தைப் பற்றிய ஒரு நூலைத்தான். அதில் ஆண்கள் இதுவரை காலமும் நடந்த விசயங்களை மீட்டுப்பார்ப்பது. பெண்களோடு எவ்வாறு பழகுவது சம்பந்த மாகவும், அவர்கள் மீது வைத்திருந்த அபிப்பிராயங்களை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பதும்தான் அந்த நூல்.

பெண்கள் தங்கள் உரிமையை வென்றெடுக்க வேண்டும். நிச்சயமாக ஆணாதிக்கத்திற்கெதிராகப் புரட்சி செய்யவேண்டும் என்று கூடச் சொல்வேன். அது அவரவரைப் பொறுத்ததும் கூட. ஏனென்றால் நீங்கள் விவாகம் செய்தவராக இருந்தால் நீங்கள் எப்படி உங்கள் உரிமையைப் பெற்றெடுக்க வேண்டும். கணவரை எப்படி உங்கள் வசப்படுத்துவது. உங்களை விளங்கிக் கொள்வது என்பது உங்களைப் பொறுத்தது. ஆனால் நீங்கள் உங்களுடைய உரிமையை என்றைக்கும் பெற்றேயாக வேண்டும். அதற்காக எந்தவித தியாகங்களையும் மேற்கொள்ளத் தயாராக வேண்டும்.

**கேள்வி:- எங்களின் உரிமைகள் என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்?**

**பதில்:-** மனித உரிமைகள்தான் எல்லோருக்கும் உரியதுதான். எனக்குள்ள உரிமை என்னவோ அதுதான் உங்களுக்கும். இவ்வளவு காலமும் என்ன நடந்ததென்றால் ஆண்கள் உங்களுக்கு அந்த உரிமையைப் புதிதாக வழங்குவது போன்றும், தங்களின் உரிமையை விட்டுக் கொடுப்பது போன்றும் நடந்துள்ளனர்.

**கேள்வி:- உங்களுக்கு பெண்பிள்ளைகள் இல்லையா?**

**பதில்:-** இருக்கிறார்கள்.

**கேள்வி:- எத்தனைபேர்?**

**பதில்:-** இரண்டுபேர் இருக்கிறார்கள். ஒருவர் உங்களை மாதிரியே பத்திரிகையில் வேலை செய்கிறார்.

**கேள்வி:- ஈழத்துக் கவிதைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**பதில்:-** முன்பெழுந்த மரபுக் கவிதைகள் அப்பொழுதே வேகமான நிலையில்தான் இருந்தது. அதன் பிறகு இப்போது புதுக்கவிதையின் உத்வேகம் கூட, இலங்கைக் கவிஞர்களை இந்தியாவிலும் பேசவைத்துள்ளது. அதாவது ஒரு வேகம் கொண்டவையாக கருதப்பட்டது. அதற்குரியகாரணம் போராட்டம், போராட்டச்சூழல் என்று தான் நினைக்கிறேன்.

சேரனுடைய கவிதைகள் 'இரண்டாவது சூரியோதயம்', அது வித்தியாசமாகப் பார்க்கப்பட்டது. ஏனென்றால் அதன் பின்னணி. கவிதைக்கோ கவிஞனுக்கோ கருத்தியல் ஒன்று இருக்கும். ஏதாவது ஒரு கொள்கையை வைத்து எழுதுவார்கள். மாக்ஸிஸம் என்றால் அதுதான் கருத்தியல். வேறு சிலர் வேறு கருத்தியலை வைத்திருப்பார்கள்.

இலங்கையில் கவிஞர்களுக்கு ஒரு கருத்தியல் இல்லை. ஆனால் போர்தான் அவர்கள் கருத்தியலாக இருந்தது, எழுதப்பட்ட சொற்கள், அதன் சூழல் வித்தியாசமாகப் பார்க்கப்பட்டு இந்தியாவில் வரவேற்கப்பட்டது.

ஜெயபாலன் போன்றோரால் பேசப்பட்டது. ஆனால் அதற்காக கருத்தியலைப் புறந்தள்ளக்கூடாது. இனிவரும் காலத்தில் போர் இருக்குமோ தெரியாது. போர் இல்லாத காலங்களும் வரும். இந்தக் கவிதைகள் மங்கிப் போகலாம். எனவே போர்க்காலங்களிலும் சரி, போர் இல்லாத காலங்களிலும் சரி, எங்கள் உரிமைக்காகவும் சரி, உரிமை இல்லத காலத்திலும் சரி ஒரு கருத்தியல் வேண்டும். அப்போதுதான் கவிஞன் தன்னை விசாலிக்கவும் முடியும். அல்லாவிட்டால் கொஞ்சக் காலத்திற்குப் பேசப்பட்டும் பிறகு இல்லாமற் போய் விடும். இப்படியான கவிதைகள் இன்று எழுதப்படுகிறது. எல்லாரும் எழுதும் கவிதைகள் எல்லாம் கவிதைகள் அல்ல. புதுக்கவிதைகள் எல்லோருக்கும் எழுதக்கூடியதாயுமிருக்கும். இதைப் பற்றி விவாதமும் தினக்குரலில் எழுதினேன்.

யாப்புக் கவிதைக்கும், புதுக்கவிதைக்கும் வித்தியாசமுண்டு. வசனநடை இல்லாத காலத்தில் யாப்புக் கவிதைகள் தேவைப்பட்டன. ஏனென்றால் மருத்துவம், சாஸ்திரம் போன்ற இன்னோரன்ன நூல்கள் எல்லாம் கவிதையிலேயே எழுதப்பட்டன. இலகுவாகப் பாடமாக்குவதற்காகச் செய்யுள்களுள் போடப்பட்டவை. ஒவ்வொருவரும் அதை கவிதைக்கு உயர்த்தினர். கம்பனின் கவிதைகள், புகழேந்தியின் "நளவெண்பா போன்றவை. ஆனாலும் இனியும் அந்த மரபுவழி யாப்பிலக்கணக்கவிதைகள் தேவையா?

நானும் ஒரு யாப்பிலக்கணக்கவிஞனாக இருந்தேன். பிறகு அதைத் தூர எறிந்துவிட்டேன். ஏனென்றால் கவிதையாக இருப்பதற்குத் தடையாக இருந்தது. இன்றைய சூழ்நிலைப்படி கவிதை எப்படி இருக்கவேண்டும் என்றால், உதாரணமாக நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் பழரசத்தை பழரசம் என்று சொன்னால் அதன் சுபாவத்தை கெடச் செய்கின்றோம். அதன் தன்மை கெட்டுப் போகிறது. நீங்கள் அழகானவர் என்று சொன்னால் உங்கள் அழகு கெட்டுப் போகும் என்று சொல்வார்கள்.

**கேள்வி:- நீங்கள் சொல்வது விளங்கவில்லை?**

**பதில்:-** அதாவது ஒரு பூவைப் பார்த்து அழகானது என்று சொன்னால் அதனுடைய அழகு கெட்டுப் போகிறது என்பதுதான் இதன் கருத்து.

**கேள்வி:- அதெப்படிக் கெட்டுப் போகும்?**

**பதில்:-** அதுதான், அதுதானாக இருக்க வேண்டும். அதைத் தானாக இருக்கவிடு. நீ சொல்லாதே. நான் இப்படியே அதைப் பார்க்கிறேன். நான் எவ்வளவுதான் சொன்னாலும் அது தனக்குரிய தன்மையோடு தான் இருக்கின்றது. நீர் எவ்வளவுதான் சொன்னாலும் எம்முடைய கற்பனையை அதனுள் போட்டுக் கொள்ள முடியாது. இது பழைய இந்தியத் தத்துவம். பௌத்த தத்துவமும் ஒன்று. அதில் சுபாவலச்ஸண, சாமான்ய லச்ஸண என்று உண்டு.

சுபாவலக்ஸண என்பது அழகு என்றும் சாமானியலக்ஸண என்பது நாங்கள் ஏற்றுகின்ற அழகு என்றும் கூறுவார்.

**கேள்வி:- இன்றைய இளைய தலைமுறையினர் எழதும் கவிதைகளை ஏற்றுக் கொள்கிறீர்களா?**

**பதில்:-** நிச்சயமாக ஏற்றுக்கொள்கிறேன். நிலாந்தன் எல்லாம் மிக இளையவர் 30 வயதிருக்கும் வித்தியாசமாக எழுதுகிறான். மற்றது உவைஸ் கனி எழுதுகிறார். இன்னும் கொஞ்சப்பேர் எழுதுகிறார்கள். உண்மையில் நன்றாக எழுதுகிறார்கள். இன்னும் மிகப்பிரமாண்டமாய் எழுத வேண்டும் என்று சொல்லமாட்டேன் அவர்களுக்கு விட்டுக்கொடுத்து, அவர்களின் ஆற்றல்களை விரிவுபடுத்திக் கொண்டு போக வேண்டும். இந்தப் பாதையில் தான் அவர்கள் செல்லவேண்டும் என்றில்லை.

**கேள்வி:- நீங்கள் நாவல்கள் எழதியிருக்கிறீர்களா?**

**பதில்:-** ஆம். நோயில் இருத்தல் என்ற நாவல்.

**கேள்வி:- உங்களின் நாவலில் ஒரு வித்தியாசமான போக்கை நாங்கள் பார்க்கலாம் என்கிறீர்கள்?**

**பதில்:-** நிச்சயமாக ஏனென்றால் அது என்னுடைய வாழ்க்கையில் நடந்ததை அப்படியே எழுதியிருக்கிறேன். எந்த விதமான பொய்யும் இல்லாமல், நீங்கள் படித்தாற் பார்க்கலாம். மயிலிட்டி ஆஸ்பத்திரியில் நான் நோய் வாய்ப்பட்டு இருந்த காலத்தில் எழுதியது. அப்படி வைத்தியசாலையில் இருக்கும் போது இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்திற்கு வந்து வைத்தியசாலைக்குள் வரும் போது நான் கை, கால் இயலாமல் இருந்தேன். அந்தவேளை ஏதோ ஒரு உள்ளுணர்வால ஓடித் தப்பித்துவிட்டேன்.

**கேள்வி:- கவிதை மரபை வழிநடத்தப் போவது ஈழத்துக் கவிதைகள் என்று எஸ். பொன்னுத்துரை கூறியிருக்கிறார். இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

**பதில்:-** அவர் ஒரு சிறுகதை ஆசிரியர் அத்தோடு தன்னுடைய வரலாறுகள் பற்றி இரண்டு நூல்கள் வெளியிட்டுள்ளார்.

அவருடைய இலக்கியக் கோட்பாடுகள் பற்றி ஒன்றும் சொல்லமாட்டேன். அவர் ஒரு திறமையான சிறுகதையாசிரியர். ஆனால் சில விசயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. கருத்தியல் சார்பாகச் சொல்லமாட்டார். அவர் தன்னுடைய நோக்கத்தையே சிலவேளைகளில் சொல்லுவார்.

**கேள்வி :- நீங்கள் கடைசியாக வெளியிட்ட புத்தகத்தில் கூறியிருக்கிறீர்கள் “சங்கத் தமிழ் என்றால் சோறு கிடையாது. பொங்குதமிழ் என்றால் மட்டும் உரிமை கிடைக்காது“ எதை வைத்து அப்படிச் சொன்னீர்கள்?**

**பதில்:-** அது அப்படியல்ல. "சங்கத்தமிழ் என்றால் சோறு கிடையாது, செயலைக் காட்டும் சிந்தனை வேண்டும்" அப்படித்தான் இருக்கிறது.

**கேள்வி:- எங்களுக்கு கிடைத்த புத்தகத்தில் அப்படியில்லை?**

**பதில்:-** அப்படியா, இது 1970ம் ஆண்டு எழுதிய கவிதை, அது தமிழரசுக்கட்சியை நோக்கி எழுதிய கவிதை, அவர்களின் பொய்மையை வெளிப்படுத்துவதற்காக எழுதியது. இதைக் கவனமாக கேட்க வேண்டும். இது 1970ம் ஆண்டு எழுதிய கவிதை. அது இன்றைக்கும் பொருந்துமா என்றால் இல்லவே இல்லை. ஏனென்றால் இன்றைக்குப் போராடுகிறவர்கள் இருக்கிறார்கள். பொங்கு தமிழை வைத்துப் போராடிச் செயற்படுகிறவர்கள் இருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் தவறாகப் புரிந்து கொள்வர்கள். இதை வைத்து அவர்களுடைய போராட்டத்தைக் கொச்சைப்படுத்துபவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இது தமிழரசுக்கட்சிக்கு எதிராக எழுதியது. அவர்கள் கத்துவார்கள். சிறைச்சாலை, பூஞ்சோலை, தூக்குமேடை , பஞ்சுமெத்தை என்று ஆனால் ஒன்றும் செய்வதில்லை, எனவே அவர்களுக்கு எதிராக எழுதியது தான்.

**கேள்வி:- புலம் பெயர்ந்தோர் இலக்கியங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**பதில்:-** புலம் பெயர்ந்தோர் இலக்கியங்களென்பது மக்கள் தங்கள் இருப்பிடத்தை விட்டு வெளியேறிவந்த இடத்தில் இருந்து கொண்டு, தாங்கள் பட்ட துன்பத்தை நினைத்து எழுதினார்கள். ஆனால் இப்போது அதிலிருந்து விடுபட்டு வித்தியாசமாக எழுதுகிறார்கள். அந்தத் தன்மையைவிட்டு அங்குள்ள சூழல் அடக்குமுறைகள் என்னென்ன பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும் என்பதை வைத்து எழுதினால் நல்லது. புலம் பெயர்ந்து போய் இங்கேயுள்ள விசயங்களையும் எழுதிக் கொண்டிருக்கிறவர்களும் இருக்கிறார்கள்.

**கேள்வி:- எங்கள் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து போய் அங்கிருந்து கொண்டு இங்குள்ள சம்பவங்களைப் பற்றி எழதினால் இது இலக்கிய மரபிற்குள் அடங்காதா?**

**பதில்:-** அதை எப்படி வெள்ிக்கொணருகிறார்களோ அதைப் பொறுத்தது. அங்கிருந்து கொண்டு எதிராகவோ சார்பாகவோ எழுதலாம் அது அவர்களைப் பொறுத்தது.

**கேள்வி:- முதன் முதலாய் காப்பியம் எழதிய இளங்கோ அடிகளை விடக் கம்பரை, இலக் கியங்கள் புகழ்கிறது. இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**பதில்:-** இளங்கோவினுடைய கவிதைகள் வித்தியாசமானது. அனேகமாக ஆசிரியப்பா என்ற முறையில் எழுதியிருக்கிறார். கம்பனுடைய கவிதைகளில் அதில் வரும் பாத்திரங்களின் குணாதிசயங்களை அவரவர்க்கு ஏற்றவித்தில் கூறியுள்ளார் . அதனால் கவித்துவம் குன்றவில்லை.

**கேள்வி:- குணச்சித்திர வெளிப்பாடுகள் இளங்கோவின் கவிதைகளில் இல்லை என்று சொல்கிறீர்களா?**

**பதில்:-** இல்லை என்று இல்லை. குணச்சித்திரங்களை ஓரே வகையான முறையில் காட்டப்படும் போது அது வரவேற்கப்படுவதில்லை. ஒரே ரீதியான கவிதையோட்டத்தை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். அதை வேறொரு ரீதியில் கொண்டு வந்திருக்கலாம். ஆனால் அதை இளங்கோ அடிகள் அப்படிச் செய்யவில்லை. அவருடையது ஒரு வகைப்பா, ஆனால் கம்பன் அப்படியில்லை.

**கேள்வி:- நீங்கள் இதுவரைக்கும் எத்தனை நூல்கள் வெளியிட்டு இருக்கிறீர்கள்?**

**பதில்:-** பத்து நூல்கள் இருக்கும்

**கேள்வி:- காளிலீலை என்பதற்கு என்ன அர்த்தம்? (இவரின் நூல்களில் ஒன்று)**

**பதில்:-** காளி என்றால் காலம், அவள் காலத்தின் ரூபமானவள். காலத்தைக் கடந்தவள் என்று சொல்வார்கள் அதை வைத்துத்தான் நான் காளிலீலை என்று வெளியிட்டேன்.

**கேள்வி.:- இன்று எழகின்ற இலக்கியங்கள் அதாவது சிறுகதை, கவிதை, நாவல் போன்றவை இன்றைய காலத்தை, எதிர்காலத்தில் பேசுமா?**

**பதில்:-** உதாரணமாகச் சொன்னால், மு. தளையசிங்கம் எழுதிய "கொள்கையின் வீடு" என்ற நாவல், 1960 ஆண்டு அது கலைச்செல்வி நாவல் போட்டியில் பரிசுபெற்றது. இரண்டு அத்தியாயங்கள். ஒன்று மாமி வீடு மற்றது நம்வீடு. அதில் எழுதியிருக்கிறார் நாங்கள் தமிழீழத்துக்காகப் போராடுவோம் என்று. ஒரு விதவைப் பெண்ணை மையமாகக் கொண்டதுதான் அந்த நாவல். மாமிவீடு என்பது சிங்கள இனத்தவரோடு நாம் சேர்ந்து வாழ்வதையும், நம்வீடு என்பதும் தனியாக நாங்கள் வாழும் இடம் என்பது. போராட்டம் மூலம் தான் எமது நாட்டைப் பெறலாம் என்று எழுதப்பட்டது அந்நூலில்.

**கேள்வி:- உங்கள் வாழ்க்கையைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்**

**பதில்:-** இளமைக்காலத்தில் நாங்கள் சிங்கள ஊரில் வாழ்ந்தோம். பிறந்து வளர்ந்தது எல்லாம் யாழ்ப்பாணம். கல்வி கற்றது சிங்கள ஊரில். சிங்கள் நண்பர்களும் உண்டு. இன்று கூட தொடர்ந்து அவர்களின் நட்பு எனக்குண்டு. நல்லவர்களும் இருக்கிறார்கள். அந்த ஊரில் இருந்து தான் பல்கலைக்கழகம் சென்றேன்.

**கேள்வி:- உங்கள் குடும்ப வாழ்க்கை?**

பதில்:- நான் காதலித்துதான் கல்யாணம் செய்தேன். எங்களுக்கு நான்கு பிள்ளைகள்.

**கேள்வி:- உங்களுக்கு வாழ்க்கையில் திருப்தி ஏற்பட்டிருக்கிறதா?**

**பதில்:-** நிச்சயமாக நான் ஒரு ஆத்மீகவாதி. சின்னக்காலத்தில் பாடசாலையை விட்டுப் போட்டு கடவுள் இருக்கிறாரா என்று அறிவதற்காக காடுகளெல்லாம் திரிந்து இருக்கிறேன்.

**கேள்வி:- ஏன் அப்படித் திரிந்தீர்கள்?**

**பதில்:-** எங்களுக்குத் தீட்சை தந்த குரு ஒரு காட்டுக்குள் தான் இருந்தார். அவர் இருக்கிறாரா, கடவுள் இருக்கிறாரா என்று அவரை நாங்கள் சோதனை செய்தோம். அப்போது உண்மையில் கடவுள் இருக்கிறார் என்ற உண்மையைக் கண்டேன்.

**கேள்வி:- செந்தணல் பத்திரிகையூடாக நீங்கள் ஏதேனும் சொல்லப் போகிறீர்கள்?**

**பதில்:-** உண்மையாக செந்தணல் பத்திரிகை எல்லா மக்களையும் மேம்படுத்துவதற்காக செயற்படவேண்டும் என்றே கூற விரும்புகிறேன்.

# நடீன் கார்டிமருடன் ஓர் உரையாடல்

**டயானா-** கறுப்பினப் போராளிகள் புறக் கணிக்கப்படும் போது வெள்ளை இனத் தென் ஆபிரிக்கப் போராளிகள் உலகோரின் கவனத்தை ஈர்க்கும் விதத்தை அந்நாவல் விளக்குகிறது. கறுப்பினத்தவரின் துயரங்களை வெள்ளையர் எடுத்துரைக்கின்றனர். அவர் தம் குரலாகின்றனர். வயன்ஸ்பர்கர் செய்தித் தாள்களிலும் தொலைக்காட்சியிலும் இடம் பெற, பாஸியின் தந்தை கூட இன ஒதுக்கலுக்காக சிறையில் போராடி இறந்து போனவர் என்பதை யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை. இது இப்போது மாறுகின்றதா?

**கார்டிமர்-** ஆம், ஸ்டீல் பைக்கோ போன்ற மாபெரும் கறுப்பின அரசியல் உயிர்த்தியாகிகள் ஒருபுறம் இருக்க, கறுப்பர்களுக்காக குரல் கொடுக்க கறுப்பு எழுத்தாளரின் ஒரு புதுத்தலைமுறையே இருக்கின்றது. இது முற்றிலும் சரியானது. தேவையானது என்று வரவேற்கின்றேன். ஆனால் ஒரு நாட்டில் பயங்கரங்கள் நிகழும்போது திறமையும் அறிவும் கொண்டவர்கள் யாராக இருப் பினும் முன்னிற்க வேண்டும். கறுப்பரோ/ வெள்ளையரோ, ஓவியரோ, எழுத்தாளரோ இசைக்கலைஞரோ வெள்ளையரும் கறுப்பரும் தனித்து வாழ்கின்றனர்.

ஒரு வெள்ளை இன எழுத்தாளரால் எழுத இயலாத அளவில் கறுப்பரின் வாழ்வம்சங்கள் இருக்கவே செய்கின்றன. இதுவே வெள்ளையரைப் பற்றி எழுதும் கறுப்பின எழுத்தாளருக்கும் பொருந்தும் - அது பெரும்பாலும் கல்வி வளாகச் சார்புடையதாயினும் கூட- எந்த கறுப்பினத்தவரும் அதனை முயன்று பார்ப்பதில்லை. ஒரு வேளை தம்மிடையே எழுதுவதற்கு போதுமானவை இருப்பதாக அவர்கள் உணரலாம். ஆனால் அதேவேளையில் 350 வருடங்களுக்கு மேலாக, சட்டங்கள் இருப்பினும் பிரித்து வைக்க இதர கட்டுப்பாடுகள் இருப்பினும், நாங்கள் தோள்களை மட்டும் உராய்ந்து கொண்டிருக்காமல் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டிருக்கிறோம்.

நாங்கள் ஒருவரையொருவர் அறிந்துள்ள ஒரு வாழ்க்கைப் பகுதி இருக்கிறது. "அறிந்துள்ள" என்பதை உண்மையிலேயே கூறுகிறேன். வெளிப்படுத்தப்படாத வழிமுறைகளில் நாங்கள் ஒருவரையொருவர் அறிந்துள்ளோம். சில சமயங்களில் கறுப்பின நண்பன் தெரிந்தவன் ஒருவனுடன் நானிருந்தால்

**தொகுப்பு: தயாளன் சி.செபனாயகம் சட்டத்தரணி, கொழும்பு.**

இருவகையான உரையாடல்கள் நிகழும். சொல்லப்பட்டதும் சொல்லப்படாததுமாக மற்றவர் சொல்லாததை ஒவ்வொருவரும் புரிந்து கொள்வர். அதுதான் உண்மையில் "அறிந்து கொள்ளுதல்" அது தன்னளவில் ஒரு பொருளாகும் அளவுக்கு இப்போது அறிந்து கொள்ளுதல் இருக்கிறது.

மாய்ஸி மபோன்யி என்னும் இடம் கறுப்பின எழுத்தாளருடன் சமீபத்தில் பேசிய போது அவர் மிகவும் கசந்து போயிருந்தார். எழுத்தாளர் கூட்டமொன்றில் அவரது பேச்சு பொதுவானவகையில் வெள்ளை எழுத்தாளருக்கு எதிரானதாயிருந்திருக்கிறது. வெள்ளையர் எமது வாழ்க்கையை எடுத்துக் கொண்டு புத்தகமாக்குகின்றனர். அவை வெளியிடப்பட்டு ஒவ்வொருவரும் வாசிக்கின்றனர். ஆனால் என் நாடகங்களை யாரும் வெளியிட விரும்புவதில்லை என்றார். 'குழப்பம், இலக்கிய மற்றும் சித்தாந்த தரங்கள், எல்லா வகையான வேதனைகள் மற்றும் உள்ளோடும் நீரோட்டங்களிலிருந்து உண்டான வகை மாதிரி வாசகம் இது. கூட்டத்திற்குப் பிறகு அவரிடம் சென்றேன். இவ்வாறு எடுத்துரைத்தேன் என்னைப் போன்றுள்ள ஒருவர் போல உங்களால் எழுத முடியாது என்று உண்மையிலேயே நினைக்கின்றீர்களா? எங்களிடையே நீண்ட காலம் வாழ்ந்திருக்கிறீர்கள். ஒன்றாக உரையாடியிருக்கிறோம். சண்டை போட்டிருக்கிறோம். சமாதானமாயிருக்கிறோம். வெள்ளையருடன் கலந்து விட்ட இதர வாழ்க்கை அம்சங்கள் உண்டு. உறவுகள் உண்டு உங்களிடம் எங்களைப் பற்றி எழுத நீங்கள் தகுதியானவரல்ல என்று என்னிடம் கூற இயலாது நிச்சயமாய் உங்களால்.

(தொடரும்)

# இலக்கிய சங்கமம்

# ஒரு வேலி பற்றி சுருக்கமான பிரதிபலிப்புக்கள்

ஒரு வேலி
எங்கும் தொடங்குவதில்லை
எங்கும் முடிவதில்லை.
கூட தான் இருக்கும் இடத்திலிருந்து
தான் இல்லாத இடத்தைப் பிரிக்கிறது.
இருப்பினும் துரதிஷ்டவசமாக
ஒவ்வொரு வேலியும் ஓரளவுக்கு
வழிவிடக் கூடியதாயிருக்கிறது,
சில சிறிய பொருட்களுக்கும்
சில பெரியவைக்கும்
ஆக வேலி
உண்மையில் பிரிப்பதில்லை. ஆனால்
ஏதோ பிரிக்கப்பட வேண்டியது
என்பதைக் குறிக்கிறது.
அத்துமீறுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள்
என்பதையும்
இந்தப் பொருளில்
ஒரு வேலியின் இடத்தை
ஒரு கோபமான சொல்லாலோ
சில வேளைகளில் கனிவான சொல்லாலோ
நிரப்ப முடியும். ஆனாலும், பொதுவாக
இது யாருக்கும் தோன்றுவதில்லை
அதனால் இந்தப் பொருளில்
ஒரு உண்மையான சரியான "வேலி"என்பது
ஒன்றுமில்லாததை ஒன்றுமில்லாததிலிருந்து
பிரிக்கிறது.
ஒன்றுமில்லாத இடத்திலிருந்து
ஒன்றுமில்லாத இடத்தைப் பிரிக்கிறது.
அதுதான் முழுமையான வேலி
கவிஞனின் சொல்லைப் போல.

## எரிதல்...

மரக்கட்டைகளினூடே ஊர்ந்து செல்கிறது நெருப்பு.
சாபங்களையும் மந்திரங்களையும் முணு முணுத்தவாறு, பின் ஒரு மூலையில் நிலைத்து வளர்ந்து கொண்டு பாடிய வண்ணம் தன் மொழியை அது கண்டுபிடித்தது.
அம்மாவின் ஒரு பழைய கடிதத்தில் ஆரெஸ்டஸின் நெருப்பு, ஆன்டிகோனின் நெருப்பு.
பயங்கரமான நெருப்பு "கள்" போன்று வெப்பமாக இருக்கிறது.
அதன் புகை சொர்க்கத்தை நோக்கி எழும்புகிறது.



நீ.பி. அருளானந்தனின் "ஆமைக்குணம்" நூல் வெளியீட்டு விழா அண்மையில் வெள்ளவத்தை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம். நூலின் முதல் பிரதியை இந்நிகழ்வின் பிரதம அதிதியான தகவல் மற்றும் ஊடகத்துறை பிரதி அமைச்சர் ஷேகு இஸ்ஸதீனிடமிருந்து புரவலர் ஹாஷிம் உமர் பெறுவதையும் அருகில் நூலாசிரியர் அருளானந்தத்தையும் படத்திற் காணலாம்.

# நூல் விமர்சனம்

## மழைக்கோலம்

– அன்புமணி

வன்னி மண்ணின் உயிர்த்துடிப்பை வெளிப்படுத்தும் நாவல் முல்லைமணியின் மழைக்கோலம். இந்த மக்கள், இவர்களது வாழ்க்கை,




அபிலாஷைகள், எல்லாமே விவசாயம் என்ற ஒரு சிறிய வட்டத்துக்குள் அடங்கி விடுகின்றது.

விவசாயம், அறுவடை, திருவிழா, காதல், கலியாணம் என்று சுழலும் உலகத்தில் வயல் சொந்தக்காரர், அவர்களுக்குக் கீழ் வேலை செய்யும் குடியானவர்கள் எனப் பாத்திரங்களும் ஒரு சிலவே உள்ளன.

வெளிப்பார்வைக்கு இவ்வாறு அந்த உலகம் அமைந்திருந்தபோதும் உட்புகுந்து பார்க்கும் போது இவர்களுக்குள்ள வாழ்க்கைப் பிரச்சினையும், முன்னேறத் துடிக்கும் இளைய தலைமுறையின் இதயத் துடிப்புக்களையும் தரிசிக்க முடிகிறது.

இந்த வாழ்க்கையை மிகவும் யதார்த்தமாகப் படம் பிடித்து நம் இதயங்களில் ஆழப் பதித்துவிடுகிறது. 'மழைக்கோலம்' கதாசிரியரின் நுட்பமான பார்வையும் செய் நேர்த்தியும் மிகவும் சுவாரஸ்யமாக இக்கதையை நகர்த்திச் செல்கின்றன சம்பவங்கள் நிகழும் ஒவ்வொரு இடத்திலும் நம்மை அப்படியே கொண்டு சென்று நிறுத்திவிடுகிறார் ஆசிரியர். பாத்திரங்களும் அவற்றின் உரையாடல்களும் அப்படியே நம் நெஞ்சில் ஒட்டிக் கொள்கின்றன. இதுவே இந்த நூலின் வெற்றி எனலாம்.

மல்லிகைக்குளம் என்ற விவசாயக் கிராமத்தில் கைலாய உடையார் குடும்பம் முதன்மை வகிக்கிறது. மக்கள் அவர்களுக்கு அடங்கி நடக்கின்றனர். அந்த அடக்கு முறையிலிருந்து விடுபட்டுச் சொந்தக் காலில் நிற்க முயற்சிக்கிறது இளைய தலைமுறை. காணிக் கச்சேரி மூலம் விவசாயக் காணிகளைப் பெற்றுச்



சொந்தமாக விவசாயம் செய்யும் வாய்ப்பை இவர்கள் ஏற்படுத்துகின்றனர். அதன் பயனாக கூட்டுறவுச் சங்கம், விவசாயக் கழகம், நவீன விவசாயம் மேட்டுநிலப் பயிர்ச் செய்கை எனப் புதிய சிந்தனைகள் தோன்றுகின்றன. சமுதாய எழுச்சிக்கான அறிகுறிகளைத் தோற்றுவித்து நாவல் நிறைவு பெறுகிறது.

பாத்திரங்களின் வார்ப்பு மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. ஆணவம் மிக்க கைலாய உடையார், அவரது மகளான புதுமைப்பெண் பதஞ்சலி, மற்றொரு சுயசிந்தனை கொண்ட கந்தப்பர், புரட்சியுள்ளம் கொண்ட அவரது மகன் ஏரம்பன், கடைக்காரத் தில்லையர் மகன் சுயந்தன், மகள் சரோசா, வெருளிச் சின்னைய சித்தை மணியன், கிராமத்துப் பள்ளிக் ...த்தைக் குட்டிச் சுவராக்கும் தலைமை ...சிரியர் தாமோதரம், தையல் அக்கா, ஊதாரிக் காரரான சிங்கம் எனும் பாத்திரங்கள் எனக் கதையில் வளைய வருகின்றன.

பாத்திரங்களின் உரையாடல்கள் மூலமே பிரதேச வழக்காறுகள் நடைமுறைகளை மிகவும் நுட்பமாக வெளிக்கொணரும் உத்தியும் நாவலில் சிறப்பாக இடம் பெறுகிறது. உரையாடல் மூலம் கதைத் திருப்பங்களும் வெளிப்படுகின்றன.

ஏரம்பன் ஆசிரியர் வேலை கேட்டுச் சென்ற போது மனேஜர் கூறியவை அக்காலத்து அதிகார வர்க்கத்தினரின் மனப்பாங்கினைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் பிரதேச இலக்கியப் படைப்புக்கள் குறிப்பான பங்களிப்பினைச் செய்து வந்துள்ளதை நாம் மறக்க முடியாது.

ஏற்கனவே பல நாவல்களை முல்லைமணி எழுதியுள்ளார். இவை எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தாற்போல இந்நாவல் அமைந்துள்ளதை வாசகர்கள் கண்டு கொள்வார்கள். நாவல் கதை சொல்வதில் மட்டும் நின்று விடுவதில்லை அதேவேளை கதை சொல்லப்படாமலும் விடுவதில்லை. கதைக்கு அப்பாலும் சில விஷயங்களைச் சொல்ல வேண்டும். கதை மாந்தர் கால் பதித்து நிற்கும் மண்ணின் வாழ்க்கை முறைகள், தொழில் முறைகள், பண்பாட்டம்சங்கம், எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள் முதலானவற்றையும் சொல்லவேண்டும் இதனை நன்கு நிறைவேற்றியுள்ளது இந்த நாவல்.

**தணலின் நூல்விமர்சனப் பகுதியில்**

**உங்கள் நூல்களும் இடம்பெற வேண்டுமாயின் உங்கள் நூல்களின் இரண்டு பிரதிகளைச் செந்தணலிற்கு அனுப்பி வையுங்கள்**

# கவிதைக் களம்

## சாதலில்லை காதல்

கவியே உனை கவிதையில் வரைந்தேன்.
நீ என் கண்களில் இருந்ததால்...
உன்னைத் தொடமுயன்றேன்
நீ தூரத்தில் இருந்தாய்..
என் கவிதைக் கைகளால் தொட்டேன்
நீ சுட்டாய்என்
இதயம் கருகிவிட.

உன் பார்வைதான் என் பஞ்சாங்கமே!
உன்னால் இரவே எனக்கு இல்லாததால்.
விடிவு கூட இல்லை.

எஸ்.கவியரசன்
வாழவைத்தகுளம்
செட்டிகுளம்.

## காதல் பறவை

நானும் ஒரு பறவை
எனக்குரிய பறவையாக
உன்னில் காதல் கொண்டேன்.
எனது காதல்
ஒரு தலையானது - ஆனால் நீ
என்னை நண்பன் என்கிறாய்.

காதல் பறவையே - உனக்காகவே
இதயம்
காத்துக்கிடக்கின்றது நீ
துயரக் கோர்வையோடு எனை
மரிக்கவிட்டுவிடுவாயா?

சு.ஞானம்
உடுப்புஸ்சலாவ

## நீ

பாவத்தின் முள்ளாய்
தீண்டி - என்
சொர்க்கத்தின் வாசலுக்கு
திரியாகத் தெரிகிறாய்

தமிழ் அழகு

## மழை...!

பகுத்தறிவு
பெற்ற மனிதன்...!
அதனை மறந்து நடப்பதால்
வானத்தாய் அழுகிறாள்
தன் கண்ணீருக்கே
களங்கம் ஏற்பட்டதாய்.

க.நிஷாந்தன்.
நானு ஓயா.

## மொட்டை மாடிச் சிநேகம்



நான் காற்றுவாங்கப்
போகும் அதே நேரம்
அவனும்... எதிரில்
காத்திருப்பான்!

இது மொட்டை
மாடியின்...
நீண்டநாள்சந்திப்பு.

எம்மிருவருக்கும்
இடையில்
சிறிய இடை
வெளிதான்
பெரிய உறவு!

அவனுக்கு இறுமாப்பு
நான் அவனைப்
பார்ப்பதாக...

எனக்கோ...
சிலகணம்
"நான் அவனைப்
பார்க்கவா
மொட்டைமாடிக்கு"...?

சீ...ச்சி...
அவன் தான்
கண்களால்
சைட் அடிக்கிறான்
என்னைப்பார்க்கிறான்
ஏதோ... சொல்லவும்
முனைகிறான்.
ம்.... கூம்....
நான் அவனைப்
பார்க்கவேமாட்டேன்!

அன்று நான் அவன்
வீட்டிற்குச் சென்றபோது..
குலைத்து என்னைப்
பயமுறுத்தி
கடிக்கவும் வந்து விட்டான்!

யாழ்தர்சி
கொழும்பு

## உனக்காகாவே

என் இதயக் கோயிலே
ஒளி வீசப் பிறந்த
இளம் நிலாப் பூவே - நீ
சுவாசித்து விட்டு
மிஞ்சியிருக்கும்
காற்றைத்தான் - நான்
சுவாசிக்கின்றேன்.
அது கூட - உன்
சம்மதம் கிடைத்தால் மட்டும்!
என் இதய அரங்கினில்
உல்லாசமாய் திரிந்து
என்னுள் வாசம் வீசும் நீ - எனக்கு
இளஞ்சிட்டுத்தான்
என்உயிர்
இருக்கும் வரை.

செந்தில் செல்வன்
முள்ளிக்குளம்
பாலம்பிட்டி
மன்னார்

## சக்திமிக்க தரப்புகள் சமாதானத்தை ஏற்படுத்தட்டும்!

தட்டுத்தடுமாறிச் செல்லும்
சமாதானப் பேச்சு
விட்டுப் போனால் வீதிக்கு வீதி
சோதனைச் சாவடிகள் தோன்றி
சாதனை நிகழ்த்தி
அசுர சன்னதம் ஆடும்.
உயிர்ச் சேதமும் பொருட் சேதமும்
நாள் தோறும் இடம் பெற்று நாடெங்கும்
பரவலாகும்.
ஏதோ இடைக்கால நிம்மதியும்
எமக்கு இல்லாது போய்விடும்
சதா சஞ்சலத்தோடு கூடிய
சங்கடவாழ்க்கையை
தமிழ் மக்கள் தொடர
சந்தர்ப்பத்தை
சந்தர்ப்ப வாதிச்சக்திகள்
ஏற்படுத்தி
ஏப்பம் விடுவார்கள்
இவற்றை யெல்லாம் தவிர்க்க
இங்கெல்லோரும் சேர்ந்து
சமாதான சகவாழ்வை
சகலரும் அனுபவிக்க
சக்திமிக்க தரப்புக்கள்
சங்கற்ப்பம் செய்தால்
நாடு சரிப்படும்!

கவிக்குயிலன்
சேனையூர் -06

## ஏன்? ஏன்?

என் தேசம்
இங்கு
மரண பூமியாக
மாறிக் கொண்டிருக்கையில்
இதழ்களுடன் சங்கமிக்கும்
பனித்துளியின் சல்லாபமும்,
கரைதழுவும்
அலைகளின் ஏக்கமும்,
மண்ணை முத்தமிடும்
மழைத்துளியின் ஆதங்கமும்,
பூ நுனியில் அமரும்
வண்ணத்துப் பூச்சியின்
வருங்காலக் கனவும்,
எனக்கு
சம்பந்தமற்ற - ஒரு
சம்பவிப்பு மட்டுமே.

தமிழின் தோழி
யாழ் பல்கலைக்கழகம்

## ஏமாற்றம்

(கண்களை இரண்டாக
படைத்த இறைவன்
இதயத்தை மட்டும்
ஒன்றாக்கி விட்டான்.)

(சிலருக்கு
இதயமே இல்லாமல்
படைத்திருக்கலாம்
இருந்தும் உணராமல்
இருப்பதைவிட.)

இரா.கோணேஸ்வரன்
கண்டி வீதி
நுவரெலியா

## உணராத உள்ளம்

உணர்வுகளில்
உருகாத இரும்பானவனிடம்
வயிற்றுப்பசி வாழ
வழிதேட உதவிய,
பெண்மையின் மென்மை
அவனுள் காதலாக,
நட்பின் ஆழம்
நன்றி மறவா நட்பை
காக்கின்றான் தன் காதலை ஒளித்து

எஸ்.பி.செந்தில்
பதுளை.

## தாஜ்மகால்

காதலில் வென்றவர்க்கு - இது
புனித சின்னம் - காதலியை
தொலைத்தவனுக்கு - இது
புதைக்கப்பட்ட கல்லறை
மட்டுமே.

டிலோனா
உடையார்கட்டு.

## கனவு

இதயத்தில் குடியிருக்கும்
என்னவனை காண்பதற்கு
கனவுகளே வருக!
நினைவுகளால் நிரம்பும்
அவன்உருவை காண்பதற்கு
கனவுகளே வருக!
கனவுகளே உங்கள்
வரவை எதிர்பார்த்து - என்
விழிகள் மூடிக்கிடக்கின்றன.
தினம் கனவுகளே வருக.

இ.நிசாந்தினி
கரவெட்டி

# ஒரு மல்லிகை சிவப்பாகிறது

உதிர்வு 09

ஈழவாணி

தலையில் முண்டாசு, கையில் நீண்ட அரிவாள்கத்தி! மடித்துக் கட்டிய சாரக்கட்டில் இடையில் செருகிய ரோச்லைற். மழையில் நனைந்த கோலம் - அவன் மீசை வேறு அரக்கத்தனத்தை எடுத்துக் காட்டியது.

மீண்டும் கண்களை மயக்க நிலை அழைக்க அப்படியே தலை சரிய...

அந்தப் புதியவனின் கை அவளின் கைகளை இறுகப்பற்றி நிமிர்த்த... முடியாமற் போகவே, சூழ்நிலை ஆபத்தைப்புரிந்து கொண்ட புதியவன் அவளை அப்படியே தன் தோழில் சாய்த்து நடத்தி அழைத்துச் சென்றான்.

இன்னும் மழை கொட்டிக் கொண்டே இருந்தது. கல்லறைக் கதவுகள் மூடியிருக்க, கல்லறை வளாகக் கதவு மட்டும் அவர்களுக்காய்த் திறந்திருந்தது,

****

ஜெயக்கொடி தன் அணைப்பில் இருந்த பூங்கொடியை இறுகத் தழுவியிருந்தாலும், அவன் கண்களும் மனதும் கத்தி வந்த திசையையும், கதவின் பின்னால் ஆடிய நிழலுருவையுமே சுற்றியிருந்தது,

ஜெயக்கொடியின் அணைப்பிலிருந்த ஞானா தன்னை மறந்த ஒரு மந்தகாச நிலையினுள் சஞ்சரிக்கமுன்பே.. தன் கொடியிடையில் வித்தியாசமான ஒரு வலி தோன்றுவதை உணர்ந்தாள். அது சாதாரண வலியல்ல மரணவலி என்பதை அவள் உணருவதற்கு கணநேரம் ஆகவில்லை.

ஜெயக்கொடியின் மனதினுள் ஒரு கருணை ஊற்றுச் சுரந்தாலும் அதை அடியோடு கட்டினான். தனக்கு வர இருந்த கத்தியை காதலி மேல் குத்த விட்டுவிட்டோம், என்றோ அல்லது ஒரு மெல்லியாளிடம் இரக்கமில்லாமல் இப்படி நடந்து கொண்டோமே என்ற வருத்தமோ சிறிது கூட இல்லை.

தன்னுடைய உயிரிற்கு ஆபத்து, தன் உயிரை எப்பாடுபட்டாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற உக்கிரமான துடிப்பே, காதலி என்று கூட எண்ண முடியாமல் இப்படி நடக்க வைத்தது,

"ஆ... ஐயோ அம்மா..." அலறினாள் ஞானா. அலறலையும் பொருட்படுத்தாமல் கத்தியைப் பிடுங்கினான் ஜெயக்கொடி.

கத்தி சொருகியிருந்த வழியே இரத்தம் குபுகுபு எனச் சூடாக வெளியேறியது. ஆடையை செந்நிறமாய் மாற்றியது.

"ஞானா என்ன செய்யிறது"

"ஐயோ எனக்கு வலிக்குது, கெதியா என்ன வீட்ட விடுங்கோ, என்னால தாங்க முடியேல்ல வலிய, கெதியா..." என் அவள் அலற

உள்ளே சென்றவன் ஒரு சாரத்தை இரண்டாகக் கிழித்து எடுத்துக் கொண்டு வந்து அவளது ஆடையை விலக்கி இடையில் காயம் பட்ட இடத்தில் கட்டினான்.

"ஆ... கெதியா என்ன வீட்ட விடுங்கோ JK. சரியா வலிக்குது... தலையெல்லாம் சுத்துறமாதிரியும் இருக்கு"

"பொறு ஞானா இப்ப என்ன சொல்லுறது வீட்ட, இப்படி நடந்தது எண்டு வெளீயில சொன்னால் எனக்கு அவமானம், இப்பிடித் தனிய இருக்கேக்க எனக்கு வந்த கத்திதான் உம்மளக் குத்தினது என்றால் உமக்கு கேவலம், அதோட என்ர மரியாத போகும். இப்ப என்னத்தச் சொல்லிச் சமாளிக்கிறது" என்று கூறிக்கொண்டு கதிரையில் அமர்ந்தான். அந்த ராட்ச மனம் படைத்தவன்.

தன் அன்பிற்குரியவள் வலியால் வேதனையால் கதறிக் கொண்டிருக்க இங்கே அவன் மரியாதையை எண்ணி கொண்டி ருக்கிறான்.

"JK பிளீஸ் என்னால் முடியேல்ல" என்றவள் அதே செற்றியில் இரத்தம் அதிகமாய் வெளியேறியதால் திரணியற்று வெயிலில் விழுந்த பூவாய் சரிந்து துடித்துக் கொண்டிருந்தாள்.

****



"சுர்ர்"என வெயில் கண்களை தாக்க சக்தியின் பூவிழி மெல்ல மலர்ந்தது. சூரியன் எழுந்து இரண்டு நாழிகளுக்கு மேல் ஆகியிருக்கும்.

அழகிய குட்டித்தோட்டம்.

பூஞ்செடிகளும் காய்கறிச், செடிகளும் கலந்து பூத்தும் காய்த்தும் இருக்க அவற்றின்மேல்தன் கதிரொளியைப் பாய்ச்சி கதிரவன் விளையாடிக் கொண்டிருந்தான்.

அழகிய காலைப்பொழுது அந்தச் சூழலில் இன்னும் அழகியதாய் காட்சி தந்தது. சக்தி மறுபக்கம் திரும்பிப் படுக்க புரண்டாள், உடம்பு மரணரணமாய் இருந்தது. ஓலைப் பாயின் கிழிசல்கள் வேறு அவளின் உடலை பதம் பார்த்தன.

அப்போது தான் புரிந்தது. தனது உடை அகற்றப்பட்டு, வேறு உடை போர்க்கப்பட்டிருந்தது.

தலை அவிழ்ந்து விரிந்து கிடந்தது. ஒருமுறை அவளது உடல் கூசிச் சிலிர்த்தது,

பனை ஓலையால் வேயப்பட்ட குடிசை இது. சுற்றிவர மேல்பகுதி எல்லாமே பனை ஓலைதான். ஆங்காங்கே இருந்த சிறிய சிறிய துவாரத்தின் வழியே அவள் கண்களுக்கு காட்சிகள் தென்பட்டன.

உடம்பு "கிண்" எனக் கொதித்துக் கொண்டிருந்தது, உடம்பை அசைக்க முடியாமல் ஒரே வலியாய் இருந்தது.

"நான் எங்க இருக்கிறேன் கடவுளே" உடுப்ப வேற காணேல்ல. எப்பிடி இங்க வந்தனான் என்னக் கைவிட்டிடாத கடவுளே..." என மனதினுள் புலம்பியவள்...

அக்குடிசை வாசல் தட்டி திறக்கும் சத்தம் கேட்டுத் திரும்பியவள் அதிர்ந்தாள்.

இரவு சுடலையில் பார்த்த அதே மனிதன். அந்த ஆள் அவளை நெருங்க... உடல் விறைத்தவளாய் போர்வையால் இறுக போர்த்திய வண்ணம் கண்ணை மறைத்தாள்.

அவன் தன் கையை அவள் மேல் வைக்க ....

அவள் வீரிட்டுக்கத்த, அவள் வாயைப் பொத்தினான் அவன்...

****

உதிரும்...



# பொன்பரப்பித் தீவு

தொடராசிரி 20

பொன்கணேசமூர்த்தி

## "ஓடைக் கரையிலே....."

"நலமா அரை மீசை வீரரே" என்று அவனைப் பார்த்து நகைக்கவும் செய்தது...

அந்தக் குரலுக்குரியவரை அடையாளங் கண்ட வியப்பிலும் சிலிர்ப்பிலும்... துட்ட காமினி... தேனுரனை, வாட்போர் அவமா னத்தை எல்லாம் மறந்தே போய்விட்டான்...

"ஓடைக் கரையிலே சந்தித்துக் குறும்பு செய்த சாத்தன் தேசத்துச் சந்தன நிலவு... இங்கே... இந்தக் காட்டுக்குள் எப்படி... இவள் பெண்தானா இல்லையா...?"

துட்டகாமினியின் சந்தேகத்தைத் தீர்ப்ப துபோல அந்த உருவம் பெண்ணுக்குரிய போதைக்குரலிற்கிளுகிளுத்தது...

"சந்தேகம் வேண்டாம் அரைமீசை வீரரே... நான் பெண்ணேதான்.. அதுவும்..."

"அதுவும்..?"

"சாத்தன் தேசத்து ஓடைக்கரையில்.. வைகறைப்பொழுதில்... நீர் கண்ட அதே பெண்தான்..."

துட்டகாமினிக்கு முன்னால் முழுதாக இப்போதுதோன்றிய அவள் சிரித்தாள்...

சடாரென்று வெட்டிய மின்னலில் அவளது சந்தனப்பொன்முகம் மின்னியது பற்கள் வெண்முத்துக்களாகப் பளீரிட்டன...

துட்டகாமினிக்குள் இனம்புரியாத ஒரு இன்ப அலை பாய்ந்து இதயத்தை நனைத்து ஈரலிக்கவைத்தது...

"இந்தப்பெண் யார்...? அச்சம் என்றால் என்னவென்று தெரியாதவளாக இருக்கி றாளே... இந்தக் காட்டுப் பகுதிக்குள் இந்த நேரத்தில் மகாவீரர்கள்கூடத் தனித்து நிற்க அச்சப்படுவார்கள்... ஆனால் இவள்... ஆணாடையில் எப்படி அச்சமின்றி நகைக்கிறாள்...?"

தனக்குள் ஓடிய எண்ணங்களை ஒதுக்கி வைத்துக்கொண்டு அவளை வியப்புடன் பார்த்த துட்டகாமினி...

"பெண்ணே.. திடீரென்று நீ எங்கிருந்து முளைத்திருக்கிறாய்...?"

திடீரென்று முளைக்கவில்லை வீரரே.. ஆகாஸ சைத்தியத்திலிருந்து உம் பின்னால் தான் வருகின்றேன்... நீர்தான் பித்தம்பிடி த்தவனாகப் புரவியை விரட்டிக்கொண்டு இங்கே வந்திருக்கிறீர்..."

"என்ன ஆகாஸ ஸைத்தியத்திலிருந்தா?"

"ஆமாம்.." என்று குறும்பாகச் சிரித்தவள்..." என்ன இருந்தாலும் உமக்கு இவ்வளவு அவசரம்... ஆத்திரம் கூடாது வீரரே..." என்று நகைப்பிற்கிடையே சொன்னாள்...

"பெண்ணே... நீ எதை அவசரம் என்கிறாய்? எதை ஆத்திரம் என்கிறாய்?"

மின்னல் பளீரென்று வெட்டியது... அந்தக் கண நேர வெளிச்சத்தில் வனதேவதையாக மின்னிய அவள் பக்கத்து மரத்தில் ஓயிலாகச் சாய்ந்து அரைக் கண்ணால் அவனைப் பார்த்துச் சிரித்தாள்...

"வீரரே... நீர் என்னைவிட ஓரிரு வயது அதிகமானவராகத் தெரிகிறீர்...?"

ஸைத்தியத்திற் சிறை வைத்திருக்கிறார். அவள் பெயர் என்ன...?' நினைவுகளைக் கசக்கிக் கொண்ட துட்டகாமினி அலட்சியத் தோடு அவளைக் கேட்டான்...

பெண்ணே... ஈழப்புகழ்பெற்ற ஒருவர் சுவடுதெரியாமற் போய்விட்டதாகச் சொல்கிறாய்.."

"ஆமாம்.. சுவடுதெரியாமற்தான்...." என்று பெருமூச்சுவிட்டாள் அவள்..."

"சரி... மற்றது யார்"

"அது உமக்கே தெரிந்திருக்கும் வீரரே"

துட்டகாமினி விழிகளை வியப்புடன் விரித்துக்கொண்டான்...

"யார் ஆது...?"

ஆகாஸ ஸைத்தியத்திற்குப்பின் காட்டில் யாருக்கெதிராக நீர் வாளைத் தூக்கினீரோ அந்தத் தேனுரான்தான்...

அவள் மெல்ல நகைத்தாள்... அதிலே மெல்லிய கேலி இழையோடுவது துட்டகா மினிக்குத் தெளிவாகத் தெரிந்தது.. மந்திர வித்தையாகச் சுழன்ற தேனுரனின் வாளும்.. பலவீனமானதுபோலத்தோன்றித் திடீரென்று வச்சிராயுதமாக்கித்தன் வாளைத்தூக்கி எறிந்த தேனுரனின் தந்திரமும் காமினிக்கு ஞாபகம் வந்தபோது அவனுக்கும் வெட்கமாகத்தான் இருந்தது... ஒரு மகாவீரனிடம்தான் தனது வாள் தோற்றிருக்கிறதென்பதில் ஆறுதலா கவும் இருந்தது...

"வீரரே.. இருவருடைய போரையும் நான் நேரில் பார்த்தேன்.. நீர் காட்டிய ஆத்திரமும் அவசரமும்தான் உமக்குத் தோல்வியைத் தந்தன... எதிரியை மட்டமாக நினைக்கும் அலட்சியம்... உடனே அவனை வெட்டி வீழ்த்த நினைக்கும் அவசரம்... வாளைச் சுழற்றும்போது காட்டும் ஆத்திரம்.. இவையெல்லாம் தோல்வியின் தோழர்கள்..."

துட்டகாமினிக்கு வியப்பாக இருந்தது...

"இவள் யார்.. 14 வயதுப் பாவை... துல்லிய மாகக் கணக்குப்போட்டதுமட்டுமன்றி.. அதைத். துணிச்சலாகச் சொல்லவும் செய்கிறாள்..."

"பெண்ணே... நீ அந்த வாட்போரைப் பார்த்தேன் என்றா சொல்கிறாய்...?"

"அதை மட்டுமல்ல வீரரே... சொனுத்தார தேரருடன் நூலேணியில் இறங்கியதைப் பார்த்தேன்... திடீரென்று சொனுத்தாரர் மீண்டும் நூலேணியில் ஏறி... ஸைத்தி யத்துக்குட் போனதைப் பார்தேன்... பிறகு தேனுரரோடு மோதிய உமது வாள் வலுவைப் பார்தேன்..."

அவள் கலீரென்று நகைத்தாள்...

"வேறென்ன பார்த்தாய்...?"

"ஸைத்தியத்தின் பின்பக்கம் நின்ற இரண்டு புரவிகளில் ஒன்றை அவிழ்த்துக்கொண்டு கண்மண் தெரியாமல் நீர் விரட்டிக்கொண்டு போனதைப் பார்தேன்..."

"பிறகு...?"

"பிறகென்ன... உமது வீரத்தைப் பாராட்ட நினைத்து எனது புரவியிற் பின்தொடர்ந்து வந்தேன்... நீர்காற்றாகப் பறந்து வந்து இங்கே நிற்கிறீர். தேனுரர் குருதியைச் சுவைக்கப்



"அதனாலென்ன..."

"அதனால் ஒன்றுமில்லை... என்னைவிட் அதிகமாகவே அறிந்திருப்பீர்..."

"எதை?"

"முழு ஈழத்திலுமே வாள் வித்தையில் எல்லாள மகாராஜாவுக்கு நிகராக இரண்டு பேர் பேசப்படுகிறார்கள்..."

துட்டகாமினி அலட்சியமாகத் தோள்களைக் குலுக்கிக்கொண்டான்...

"அப்படியா? யார் அவர்கள்?"

"ஒருவர் மஞ்சூறிக்கா நாட்டின் மாவீரர் வாசுலதத்தர்... ஆனால் 15 வருடங்களுக்கு முன்னால் சுவடு தெரியாமல் மறைந் துவிட்டார்... அவரது புகழ் மட்டும் இன்றைக்கும் நிற்கிறது.."

வாசுலதத்தனை மொட்டை மலையிலிருந்து தள்ளிக்கொன்றதாக சொனுத்ததாரதேரர் சொன்ன கதை துட்டகாமினியின் நினைவுக்கு வந்தது...

'அவனது மனைவியைத்தானே ஆகாஸ

போவதாக மணிக்கங்கை முன்னால் உரத்துச் சபதம் செய்கிறீர்..."

துட்டகாமினி அவளை நோக்கி ஒரு அடி வைத்தான்... என்ன செய்கிறேன் என்பது தெரியாமலே அவளது வலது கை மணிக்கட் டையும் பிடித்துக்கொண்டான்...

"பெண்ணே... நீ யார் என்று சொல்லிவிடு... நீ ஏன் ஆகாஸ ஸைத்தியப் பக்கம் வந்தாய்... எதற்காக என்னைத்தொடர்ந்து இங்கே வந்திருக்கிறாய்...?

அவள் அசையவில்லை.. அவனது கைகளை விலக்க முயற்சிக்கவுமில்லை...

பதிலுக்கு இன்பமாக நகைத்தாள்...

"வீரரே... வேளை வரும்போது நான் யார் என்பதைப் புரிந்துகொள்வீர் ஆனால் நான் உம்மைத்தேடி ஆகாஸ ஸைத்தியத்துக்கு வரவில்லை..."

"வேறு யாரைத் தேடி?"

அவள் ஏதோ சொல்ல வாயைத் திறந்தாள்.. ஆனால் எதுவுஞ் சொல்லாமலே உதடுகளை இறுக முடிக்கொண்டாள்.

துட்டகாமினி ஆவலோடு அவள் விழிகளைப் பார்த்தான்.. வெட்டிய மின்னலில் அந்த விழிகள் வைரத்துண்டங்களாகப் பளபளத்தன.

"வீரரே.. ரோகண தேசத்தின் இளவரசர் நீர்தான் என்று இன்றுதான் நான்தெரிந்து கொண்டேன்.. அதனால்..."

துட்டகாமினியின் பிடி இறுகியது... அவளது மணிக்கட்டு வலித்தாலும் அவள் முகம் அதைக் காட்டவில்லை...

"அதனால்..நீரும் நானும் இன்றைக்கும் கூட எதிரிகளாகவே இருக்கிறோம்... அதனால் எனது ரகசியத்தை உமக்கு எப்படிச்சொல்ல முடியும்...?"

"எதிரியாக?"

"ஆமாம்.. எதிரிதான்... மகியங்கணைத் தமிழ்ச் சாத்தன் தேசத்துப் பெண்ணும், ரோகணத்து இளவரசனும் எப்படி நண்பர்களாக இருக்க முடியும்..?" என்று மெல்லச் சிரித்தபடியே கேட்டாள் அவள்...

துட்டகாமினிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை...

தன்னைமீறித் தனது மனம் இந்தத் தமிழ்ப் பெண்ணை நோக்கி நேசத்தோடு ஓடத் தொடங்கிவிட்டது என்பது மட்டும் அவனுக் குப் புரிந்தது... அவளும் தன்பேரில் எதற்கோ அக்கறை காட்டுகிறாள் என்பதும் அவனுக்குப் புரிந்தது...

அவன் இதமான புன்னகையோடு கேட்டான்..

"அன்பான எதிரியே.. நீ என்ன செய்கிறாய்.. எதற்காக என்னைத் தொடர்கிறாய் யாரைத் தேடித் திரிகிறாய்?" என்றெல்லாம் இனி நான் கேட்கப்போவதில்லை... ஆனால் உன் பெயரையாவது எனக்குச் சொல்லக் கூடாதா?

அந்த நேரத்தில் தூரத்தில் புரவிகளின் சத்தம் கேட்கத்தொடங்கியது... அவள் துட்டகாமினியின் கைகளை மென்மையாக விலக்கிக்கொண்டாள்..

"அரைமீசை வீரரே.. உமது மீசையை ஒட்டிக்கொள்ளும்.."

"ஏன்"

"புரவிச்சத்தம் கேட்கிறதல்லவா..உமது எதிரிகள்.. அதாவது எனது படைவீரர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள்.."

"அதனால்..."

"இதோபாரும்.. இந்த மணிக்கங்கை நீர் இப்போது முழங்காலுக்குக் கீழேதான் ஓடுகிறது.. உமது புரவியோடு கங்கையைக் கடந்து போய்விடும்.. மீண்டும்.. முடிந்தால் எங்காவது கானகத்தில் அல்லது முடிவாகக் களத்திற் சந்திப்போம்..."

சொன்னவள் மரக்கூடலுக்குள் மறைந்து விட்டாள்.. ஒரு கணம் சிலைத்து நின்ற துட்டகாமினி, தன்னிலை மீண்டு. அவளது பெயரைக்கூட அறிந்துகொள்ளாத ஏக்கத்தோடு. புரவியை அவிழ்த்துக்கொண்டு கங்கைக்குள் இறங்கி அக்கரை நோக்கி அந்த இருளுக்குள் நடந்து கரையேறினான்.. அவன் கரையேறுவதை நான்கு விழிகள் மணலிற் குப்புறப்ப டுத்தவாறே தலை நிமிர்த்திப் பார்த்துக் கொண்டிருந்தன...

*தொடரும்...*

# சிறுதொடர் காணிநிலம் வேண்டும்

எஸ். செல்வகுமார் திருகோணமலை

அமைதியாக... மிக அமைதியாக திருகோணமலை நகரத்தின் அன்றைய காலைப் பொழுது புலரவாரம்பித்தது. ஆரவாரமில்லாமல், நிதானமாக சோம்பல் முறித்து, கொட்டாவிவிட்டு... விடியல் தன் தூக்கத்தைக் கலைத்து நின்றது. மெல்லிய காற்று வெற்றிடங்களில் ஓடிச்சென்று உட்கார்ந்து கொண்டது. பறவை இனங்கள் கூட அதிகமாக ஆர்ப்பரிக்கவில்லை. அவைகளுக்கும் கூடத் தெரிந்திருக்கும் இது சமாதானத்தின் நேரம். அமைதிக்கே இடம். ஆர்ப்பாட்டத்திற்கல்ல. பரபரப்புத் தேவை இல்லை. அடையாள அட்டை தேவை யில்லை, செக்பொயின்ற் இல்லை. ரவுண்டப் தொல்லைஇல்லை... காளிகோ யிலின் பெரிய காண்டா மணியின் ஓசை மட்டும் அந்த அமைதியினைக் கலைத்து பின்பு ஓய்ந்து கொண்டது. அன்று ஞாயிற்றுக்கிழமை...

அரிநாயகம் சற்று சோம்பலுடன் எழுந்துகைகால்களை உதறி தூக்கத்தை விரட்டிவிட்டு, கொடியில் கிடந்த துண்டை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டே கதவைத் திறந்து வெளிமுற்றத்திற்கு வந்தபோது குளிர்ந்த காற்று வேகமாய் ஓடிவந்து ஒட்டிக்கொண்டு சில்லிட்டது.

வாசலில் மடித்து வைத்திருந்த சாய்வு நாற்காலியை எடுத்து மாமரத்தின் கீழ் போட்டு நீட்டி நிமிர்ந்து வசதியாக அமர்ந்து கொண்டார். அப்படியே மெதுவாக கண்களை மூடியபோது எங்கோ தொலை விலிருந்து காற்றோடு கலந்து... மென்மை யாக... இனிமையாக வந்து காதில் நுழைந்தது அந்தப்பாடல்...

"காணிநிலம் வேண்டும்... பராசக்தி காணிநிலம் வேண்டும்..."

நல்ல முத்துச்சுடர்போல நிலாவெளி முன்பு வரவேணும்..."

அரியநாயகம் மீண்டும் கண்களை இறுக மூடினார் கடந்த மாதம் நடந்து முடிந்த மனதை அழுத்தும் அந்தச் சம்பவம் மனதில் ஓடியது.

"இஞ்ச அடியாதையுங்கோப்பா... தயவு செய்து நான் சொல்றத்த கேளுங்கோ... அடியாதையுங்கோ... இப்ப... சொல்லச் சொல்லக் கேட்காம அடிச்சிப்போட்டு பிறகு வருத்தப்படுவியள்..."

அரிய நாயகம் சினத்துடன் மனைவியை ஏறிட்டார்...

"என்ன சொல்ல வந்தனியெண்டு கெதியா சொல்லிப்போட்டு போ.... எனக்கு வேலை கிடக்கு..."

"அதான் அப்பா அடியாதையுங்கோ..."

அரியநாயகம் பொறுமையிழந்தவராக மனைவியை முறைத்தார்...

இந்தா.. என் பொறுமையைச் சோதிக்காம என்னன்டு சொல்லு... ஏன் அடிக்கக் கூடாது..?

"வேண்டாமப்பா... இப்பத்தான் இங்க வந்திருக்காம்.. திரும்பவும் ஓட ஏலாது.. நடுத்தெருவிலதான் நிக்கவேணும்.."

"என்ர விசரக்கிளப்பாம... என்ன ஏதுன்னு சொல்லித்தான் தொலையன். அடிக்காம எப்படி மாட்டறது....?"

"இஞ்ச... நேற்றுப் பின்னேரம் வீட்டுச் சொந்தக்காரம்மா வந்தவ. மரத்தில கிடந்து விழுந்த தேங்காயை எடுத்திட்டுப்போக வந்த மனுசி... சுவத்தில ஆணி அடிச்சி படம் மாட்டினதப்பார்த்துப் போட்டு... சத்தம் போட்டவ"

"என்னவாம்?"

"வீட்டை வாடகைக்குத் தந்தது இருந்திட்டுப் போறதுக்கு மட்டும்தானாம்.

இப்படி ஆணி அடிச்சி பழுதாக்கி றதுக்கு இல்லை எண்டு கத்தினது மனுசி"

"போகேக்க எல்லாம் அடைச்சிக் கொடுத்திட்டுப் போவமெண்டு சொல்லியி ருக்கலாம் தானே..? ஆணி அடிக்காம இத்தனை படங்களையும் எப்படி மாட்டுறது? சாமிப்படங்களெல்லே... சும்மா தூக்கி ஒரு மூலையில போடமுடியுமா? அவையள் அப்படித்தான் சொல்லுவினம். வீட்டுக்காரர் எண்டா கொஞ்சம் அதிகார மாத்தான் கதைப்பினம். இருந்தாலும் நாம நம்மட வசதிக்குச்சிலசில மாற்றங்களைச் செய்யத்தான் வேணும். ஒரு லட்சம் அட்வான்சும், இரண்டாயிரம் வாடகையும் குடுத்துத்தானே எடுத்திருக்கிறம். நாங்கள் ஏன் பயப்படவேணும்."

"இஞ்ச சத்தம் போட்டுக் கதைக் காதிங்கோ... அயலுக்குள்ள கேட்டுப் போய்ச்சொல்லி விடப் போயினம்... பிரச்சினப்பட்டுப்போட்டு இருக்க ஏலுமே...? எல்லாம் இன்னும் கொஞ்ச நாளைக் குத்தானே? சாமாளிச்சிக்கொண்டு போவம்..."

*தொடரும்...*

# பூவையர் உலகம்

## கனவுகளுக்கான பரிகாரங்கள்

### தணலின் பூவையர் கருத்தாடல் - 16

# காதலில் அதிகம் ஏமாற்றுவது ஆண்களா? பெண்களா?

**குரல் :-1**

இன்றைய இளம் சமுதாயத்தில் அனேக இளைஞர் யுவதிகளிற்கு பிடித்துள்ள நோய் காதல் என்றே சொல்லலாம். அனேகமானோர் காதலிக்கிறார்கள் அதில் பலர் ஏமாற்றப்படுகின்றனர்.

பொதுவாக காதலில் அனேகமாக ஏமாற்றுவது ஆண்களேதான். ஒரு ஆடவன் ஒரு பெண்ணை காதலிக்கின்றான் காதலிக்கும் போது கண்ணே மணியே என்பவன் திருமணம் எனும் பந்தத்துக்கு நுழைய பல காரணங்கள் சொல்லி மறுக்கிறான் இல்லை ஏமாற்றுகிறான் என்றே சொல்லலாம்.

பெற்றோர் ஏற்கிறார்கள் இல்லை, சீதனம் தந்தால் உன்னையே திருமணம் முடிக்கிறேன் என்றும் எனக்கு பொறுப்பு அதிகம் என பல காரணம் காட்டி அவளைக் கைவிடுகிறான்.

ஆசை வார்த்தைகளால் ஏமாந்து தமது வாழ்வையே துறக்கிறார்கள் அவமானம் தாங்காது தற்கொலையும் செய்கிறார்கள். ஒரு காதலர் இடையே ஏமாற்றம் அடைபவள் பெண்ணாய் இருக்கும் போது ஏமாற்றுபவன் ஆண்மகன் தானே.

காதலிப்போரே நீங்கள் காதலிக்கும் பெண்ணையே மணம் முடியுங்கள் அவளை ஏமாற்றாதீர்கள். நீங்கள் காதலித்து விட்டு வேறு திருமணம் செய்வீர்கள் ஏமாற்றப்பட்டவளை இச் சமூகத்தில் யார் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

இவ் உலகில் காதலில் சிக்கும் பெண்கள் எம் சமுதாயத்தில் பல சிக்கல்களை எதிர் நோக்குகின்றனர் அவர்களது வாழ்விற்கு அர்த்தம் இல்லாது செய்து விடாதீர்கள் ஆடவரே.

யோ. ஹேமலதா. கரவெட்டி.

## காதலில் அதிகம் ஏமாற்றுவது ஆண்களே!

**குரல் :-2**

உலகம் எப்போது உண்டானதோ அப்போதே பிறந்துவிட்டது காதல். அந்த உணர்வும் அதன் ஆழமும் தான் பரிசுத்தமானது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உருவாவதுதான் காதல் என்றில்லை. காதலைப் பற்றி எழுதியவர்கள் எழுதிக்கொண்டிருப்பவர்கள் பலர். இருவரிடையே தோன்றும் அன்பு தூய்மையாக இருந்தால் அது என்றும் நிலைத்திருக்கும்.

இன்றைய நிலையில் காதல் என்ற பெயரால் எத்தனை பெண்கள் சீரழிந்து சிதைந்து போயிருக்கிறார்கள். வாலிப வயதில் எதிர் பாற் கவர்ச்சிக்கு ஆளாகி கற்க வேண்டிய வயதில் தன்னையும் பாழாக்கி அந்தப் பெண்ணையும் பாழாக்குவதோடு சில காலங்களுக்குள் வேறு பெண்ணைத்தேடிப் போய்விடுவார்கள். அது மட்டுமல்ல அழகைப் பார்த்து முதலில் நீ தான் என் உயிர் என்று காதல் வசனம் பேசுபவர்களெல்லாம் சீதனம் என்று வரும் போது, அவர்கள் காதல் எல்லாம் காற்றிலே பறந்து விடும். ஆண்களும் ஏமாற்றப்படுகிறார்கள் தான். ஆனால் பெண்கள்தான் அதிகமாக ஏமாற்றப்படுகிறார்கள். ஆண்களின் ஆசை வார்த்தைகளில் மயங்கி தன்னையும் இழந்து இழி நிலைக்குள்ளாகி வாழ்க்கையே தொலைத்தவர்கள் எத்தனைபேர். பல வருடங்களாகக் காதலித்து கைப்பிடிப்பேன் என்று காலங்காலமாய் காத்திருக்க வைத்து விட்டு, வெளிநாடுகளுக்குச் சென்று அங்கிருக்கும் ஒருத்தியை மணந்தும், காதலித்தவளைக் கைப்பிடித்தால் சீதனம் கொள்ளையாக வருமென்று உண்மை சொல்லாது காதலித்தவளையும் மணமுடித்து இடையில் ஏமாற்றியவர்களும் இருக்கிறார்கள். இவ்வாறு அதிகம் ஏமாற்றப்படுவது பெண்களே.

எஸ். யூடியற், பள்ளிமுனை.

## தணலின் பூவையர் கருத்தாடல்-17

**சிறுவர் வல்லுறவிற்கு காரணமாக அமைவது பெற்றோரின் கவனமின்மையா? சமூக அமைப்பா?**



தணலின் பூவையர்களே இது பற்றிய உங்களுடைய புரட்சிக் கருத்துக்களை தணலின் கருத்தாடலுக்கு அனுப்பி வையுங்கள்.

**தணலின் பூவையர் கருத்தாடல்**
**த.பெ.இல.1601, கொழும்பு.**
தொ.பெ.இல. 011-4715168
தொலைநகல் : 011-4715168

# அழகுக்குறிப்பு

## முகம் பளிச்சிட.....



- பாலில் உள்ள ஆடையை எடுத்து அதில் நான்கு குங்குமப் பூக்களை ஊற வைத்து முகத்தில் தேய்த்து ஐந்து நிமிடங்கள் ஊறிய பின் குளித்தால் வதனமோ, இது சந்திரப் பிம்பமோ எனப் பார்ப்பவர்கள் பாடுவார்கள்.
- அரைக் கப் தயிரில் கொஞ்சம் கடலை மா அல்லது பயத்தம்மாவில் சிறிதளவு எலுமிச்சைச்சாறு, அரைத்தேக்கரண்டி தேனும் கலந்து முகம் முழுக்க பூசி, சற்று நேரம் ஊறியபின் குளித்தாலும் வசீகரமான முகம் கிடைக்கும்.
- நல்ல சுத்தமான பன்னீரில் நன்றாகப் பழுத்த தக்காளியை போட்டு அரைத்து சிறிதளவு கஸ்தூரி மஞ்சளும், பயத்தமாவும் கலந்து முகத்தில் பூசிக்குளித்தாலும் முகம் பளிச்சென இருக்கும்.
- கன்னச் சதை தொங்காமல் இருக்க நேரம் கிடைக்கும் போதெல்லாம் வாய் நிறைய தண்ணீர் எடுத்து பத்து நிமிடம் வைத்திருந்து பின் கொப்பளியுங்கள் கன்னம் அம்சமாய் அமையும்.

# சோளச்சோறு

கோடைகாலங்களில் குளிர்ச்சியான பொருட்களைத்தான் எல்லோரும் நாடுவார்கள். உடம்புக்குச் சத்தாகவும் குளிர்ச்சியாகவும் இருக்கும் ஒரு உணவு வகை சோளச்சோறு அதோடு சேர்த்து சுக்கு மோர்க்குழம்பு செய்து சுவைத்துப்பாருங்கள்.

ஒரு கப் சோளத்தை எடுத்து ஒரு கை அளவு தண்ணீர் தெளித்துக் கிளறி இறுக்கமாக பத்து நிமிடங்கள் வைத்துவிட்டு உரலில் போட்டுத் தூளாகிப் போய்விடாமற் பக்குவமாக இடித்து எடுத்து சுளகில் போட்டு உமி போக புடைத்து எடுக்கவேண்டும். பின் மீண்டும் தண்ணீர் தெளித்துக் கிளறி பத்து நிமிடங்கள் கழித்து உரலில் குற்றி உமி போகப் புடைத்து எடுக்கவும். பின் அதனுடன் ஐந்து கப் நீரைக் கொதிக்க வைத்து அதில் சுத்தமாக்கிய சோளத்தைப்



போட்டு பத்து நிமிடங்கள் கொதிக்க வைத்து நீர் வற்றியதும் சோளத்தைப் பூப்போல வேகும் வரை கிளறி, வெந்ததும் தேவையான அளவு உப்பு போட்டு கிளறி பத்து நிமிடங்கள் கழித்து இறக்கவும். விரும்பினால் பால், நெய், சீனியும் சேர்த்துச் சாப்பிடலாம்.

### சுக்கு மோர்க்குழம்பு

ஒரு தேக்கரண்டி பச்சரிசியையும், ஒரு தேக்கரண்டி துவரம் பருப்பையும் 30 நிமிடங்கள் தண்ணீரில் ஊறவைத்து வடித்தெடுத்து அரைத்தேக்கரண்டி சீரகம், பச்சைமிளகாய் ஆறு, சின்ன வெங்காயம் நான்கு, இரண்டு பல் வெள்ளைப் பூண்டு ஒரு மேசைக் கரண்டி தேங்காய்த் துருவல், சின்னத்துண்டு சுக்கு, கால் தேக்கரண்டி மஞ்சள் தூள் இதையெல்லாம் சேர்த்து, சிறிதளவு நீர் விட்டு அரைத்தெடுக்கவும். லேசாகப் புளித்த கெட்டியான தயிரை ஒரு கப் எடுத்து அதில் ஒரு கப் தண்ணீர் விட்டு சிறிதளவு உப்புடன் அரைத்த விழுதையும் சேர்த்து கரைத்து வைக்கவும்.

ஒரு சட்டியில் ஒரு மேசைக்கரண்டி எண்ணெய் விட்டு, கடுகு, உளுந்து, கறிவேப்பிலை, காய்ந்த மிளகாய் இதையெல்லாம் போட்டுத் தாழித்து விட்டு, கரைத்து வைத்த மோர்க்கரைசலை ஊற்றி பத்து நிமிடங்கள் விடாமற் கிளறி பச்சை மணம் போய் நல்ல மணம் வந்ததும் இறக்கவும். இதைச் சூடான சோளச் சோற்றோடு ஊற்றிச் சாப்பிட்டால் அடடா அந்த ருசியே தனிதான்.

## கனவுளில் ஐம்பூதங்கள்:-

ஐம்பூதங்கள் என்பது நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் ஆகிய ஐந்தையும் குறிக்கும். இந்த ஐம்பூதங்கள் தொடர்பாக ஏற்படும் கனவுகளுக்கு என்ன பலன்கள் என்பது பற்றிப் பார்ப்போம்.

**நிலம்:-**

வீடு அல்லது நிலம் வாங்குவது போலக் கனவு கணடால் திருமணம் நடக்கும், புதிய



வே. தமையந்திரன்

சொத்துக்கள் வந்து சேரும், நிலத்தை உழுவது போல கண்டால் பெரிய மனிதர்களின் சந்திப்பு ஏற்படும்.

பூகம்பத்தைக் கனவில் கண்டால் பொருளாதாரம் பாதிக்கப்படும். நிலம் இரண்டாகப் பிளவுபடுவதுபோல கண்டால் குடும்பத்தில் பிரிவு ஏற்படும். பாலை வனத்தைக் கனவில் கண்டால் சோதனைகள் உண்டாகும். மலையைக் கண்டால் காரியத்தடங்கலும், சகதியில் கால்படுவது போல கண்டால் அவப்பெயர் ஏற்படவும், காட்டில் பாதை தெரியாமல் தடுமாறுவது போல கண்டால் பலவித கஸ்ரங்களுக்கும் ஆளகா நேரிடும்.

**நீர்:-**

தாகம் தணியத் தண்ணீா குடிப்பது போல கனவு கண்டால் உள்ளத்தில் உள்ள ஆசை ஒன்று நிறைவேறும். குளிப்பது போல கண்டால் துன்பங்கள் விலகும், நீந்துவது போலக் கண்டால் இடையூறுகள் ஏற்படவும், நீந்திக் கரையேறுவது போல கண்டால் வெற்றியும் ஏற்படும்.

நீர்க்குழிகளைக் கண்டால் வீண்பழி வந்து சேரும், கடல் அலையில் சிக்கியது போலக் கண்டால் இன்னல்களால் அவதிப்பட நேரிடும். நீர் தடாகம் பணவரவையும், கிணறு கோண்டுவது போலக் கண்டால் உயர்ந்த நிலையையும், கிணற்றில் விழுவது போலக் கண்டால் இதுவரை அனுபவித்த கஸ்டமும் நீங்கும். மழை பெய்வதைக் கனவில் கண்டால் நோய்களும், ஆடையை தண்ணீரில் போடுவது போலக் கண்டால் களங்கமும் ஏற்படும்.

- தொடரும்

# மாதவிலக்கு

- மாங்கொட்டையின் உட்பருப்பை வெயிலில் உலர்த்தி தூளாக்கி தேனில் கழைந்து ஒரு தேக்கரண்டி அளவில் ஒருவாரம் சாப்பிட்டுவந்தால் அதிக உதிரம், வலி போன்றன குணப்படும்.
- நிறைய பேருக்கு திருவிழாக்காலங்களில் கல்யாண நாட்களில் வந்து விடும். அதை தவிர்க்க மிழகு எளிமையான வழி, ஒரு கிளாஸ் பாலைச் சூடாக்கி அதில் ஒரு பாதி எலுமிச்சைச் சாறை விட பால் திரிந்து விடும். விடியற்காலையில் வெறும் வயிற்றில் அதைக் குடித்தால் அந்த திகதிகள் தள்ளிப் போய் விடும்.
- அந்த நாட்களில் வரும் வயிற்று வலிக்கு பொரிகடலையை அடிக்கடி சாப்பிட்டு வெந்நீரைக் குடித்து வந்தால் வலி நின்று விடும்.
- சிலருக்கு குறித்த நாளில் மாதாமாதம் வருவதில்லை அதற்கு, மாவிலங்கப்பட்டையும், உள்ளிப்பூண்டும் மிளகும் சம அளவில் எடுத்து அரைத்து விழுதாக்கி தினமும் காலையில் சாப்பிட்டுவர அந்தந்த நாளில் சரியாக வந்துவிடும்.

தமிழர்கள் வாழ்வு

தொடர் 23

-சத்தியா-



# ஏமாற்றப்பட்ட தமிழினம்

அதன் விளைவாக 17 பேரும் சயனைட் அருந்த 12பேர் சாவைத் தழுவிக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து தமிழ் நிலத்திலே ஏற்பட்ட கொதிப்பும், ஆற்ற முடியாத உணர்வலைகளும் தான், இந்திய அமைதிப்படைக்கெதிராகப் போராக வெடித்தது. விடுதலைப்புலிகள் முதலில் இந்தியப்படைகளை தாக்கவில்லை. உடன்படிக்கையை மீறிய இலங்கை அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற முயற்சிகளை எதிர்த்தே கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகள், தாக்குதலைத் தொடுத்தனர். 09/10/1987 இல் சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகளை தடைசெய்யும் அறிவிப்பை வெளியிட, அதே நாள் நள்ளிரவுக்குப்பின் இந்தியப் படை திடீரென விடுதலைப்புலிகளுக்கு எதிரான தனது இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது.



வடக்குக் கிழக்கு ஐ.பீ.கே.எப்.படையினர்

இந்தியாவோடு போரொன்றைச் செய்வதற்கு புலிகள் விரும்பவில்லை. இந்திய அரசின் தெளிவற்ற அரசியல் கொள்கையினால், ஈழத்தமிழர் மீண்டுமொருமுறை, ஆயுதந்தாங்க நிர்பந்திக்கப் பட்டனர். 09-10-1987 நள்ளிரவு "நிதர்சனம்" எனும் புலிகளின் ஒளிபரப்புக் கருவிகளைக் கையகப்படுத்தியது. 10-10-1987ல் முரசொலி ஈழமுரசு எனும் பத்திரிகை அலுவலகங்கள் இந்தியப்படையினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. இதனைத் தொடர்ந்துதான், 10-10-87 பி.ப 2.00 மணியளவில் விடுதலைப் புலிகள் இந்திய அமைதிப்படையை எதிர்க்கத் தொடங்கினர். இந்திய அரசு விடுதலைப்புலிகளை ஒடுக்குவதிலும் அவர்களது ஆயூதங்களைக் களைவதிலும் காட்டிய வேகத்தை, உடன்படிக்கை நிறைவேற்றுவதற்கான அழுத்தத்தை சிறிலங்கா அரசின் மீது செலுத்துவதில் காட்டவில்லை. தனது இரும்புக் கரத்தால், ஈழத்தமிழர்களின் உணர்வுகளைத் திருகி எறியவே முடிவு செய்து இலட்சக் கணக்கான துருப்புக்களை இறக்கியது. எறிகணை விமானக் குண்டு வீச்சு மூலம் தமிழீழத்தைக் காயப்படுத்தத் தொடங்கியது. உடன்படிக்கையின் பேரில் தனக்குக் கிடைத்த அனுகூலங்களை சிறிலங்கா அரசு அமைதியாக அறுவடை செய்து கொண்டிருந்தது. இந்திய அமைதிப்படை வந்த பிறகு சிறிலங்கா இராணுவத்தில் ஒரு வீரருக்குக் கூட சிறு காயமில்லை, உயிரிழப்பில்லை, போர்ச் செலவுகள் குறைந்தன. சிங்களப் பகுதிகளின் அபிவிருத்தி கிடு கிடுவென, வளரத் தொடங்கியது. தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் அமோகமாய் நடந்தன. இந்தியாவின் செலவிலே இந்தியப்படைகளைக் கொண்டு தமிழருக்கு எதிரான போரைச் சிறிலங்கா நடத்திக் கொண்டு தெற்கிலே ஜே.வி.பி வன்முறைக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்தது. தம்மீது திணிக்கப்பட்ட இந்தியப் போருக்கு விடுதலைப்புலிகள் முகங்கொடுத்த போதும் போர் நிறுத்தம் செய்து அரசியற் பிரச்சனையை பேசித் தீர்க்கும்படி பலமுறை இந்தியாவை வேண்டினார்கள். தம்மாற் கைது செய்யப்பட்ட இந்தியப்படையினரை விடுவித்துத் தம் நல்லெண்ணத்தை வெளிபடுத்தினர். ஆயுதக்களைவைத் தவிர மறு பேச்சில்லை என்ற போக்கில் இந்திய அமைதிப்படை தமிழர் மீதான கொடிய போரை மேலும் மேலும் கூர்மைப்படுத்தியது. மனித நீதியுணர்ந்த எவருமே இந்திய அரசின் இந்த முடிவை ஏற்கவில்லை. சிங்கள ஜெயவர்த்தனாவின் படை முக்கியஸ்தராக இந்தியா ஏன் இயங்க வேண்டும் என்று கேட்டார். நிதிபதி வீ.ஆர் கிருஸ்ணஜயர்.

இந்தியப் படை புலிகளோடு யுத்த நிறுத்தம் செய்து, சிறிலங்கா அதிபரை உடன்படிக்கையை நிறைவேற்றும்படி அழுத்தங் கொடுக்க வேண்டும். இல்லையேல், தங்களது தலைவிதியைத் தாங்களே எழுதும் படி விட்டு விலகிவிட வேண்டும் என்று அவர் உறுதிபடக் கூறினார்.



1989-10-22 அன்று சாவகச்சேரி சந்தைக்கருகில் இந்திய விமானப்படை தாக்குதலினால் உயிர் இழந்தோர்

தமிழப் போராளிகள் நிராயுதப் பாணி ஆக்கப்பட்டால் அடுத்த கணமே இந்தியப்படைகளை விலகுமாறு சிறிலங்கா அரசு கேட்கும். இதன் பிறகு தமிழர்களின் மீது அக்கறை செலுத்தப்போவது எவர்? என்று கேள்வி எழுப்பினார் ஆலடி அருணா.

வை.கோபாலசாமி, நெடுமாறன், முரசொலிமாறன், கலைஞர் கருணாநிதி, ஜெயலலிதா, வீரமணி போன்ற தமிழகத் தலைவர்கள் எல்லோருமே இந்திய இராணுவத்தின் முறையில்லாப் போரைக் கண்டித்தனர். இந்திய அமைதிப்படை தமிழீழத்தில் நிகழ்த்திய போரின் விளைவு சொல்ல முடியாத் தரமற்றது., உயர் இழப்புக்கள், பாலியல் வல்லுறவுகள் என்று இரத்த ஆறு ஓடத் தொடங்கியது. இந்திய அரசு மிகப் பிடிவாதமாக, ஆயுதக் களைவு என்ற பெயரில் தமிழர்கள் மீது போரைத் தொடுத்தாலும் சிங்கள பேரினவாதத்தை திருப்திப்படுத்தவோ உடன்படிக்கையைச் செயற்படுத்தவோ அவர்களால் முடியவில்லை என்பதே உண்மை.

அரசுக்குத் துணைபோன சிலரைக் கொண்டு ஒரு பொம்மை மாகாண சபையை உருவாக்குவதில் இந்தியாவின் இராணுவ வல்லமை வெற்றி கண்டாலும், தமிழர்களின் உள்ளத்தையோ, சிங்களவரது இனவாதத்தையோ வெற்றி கொள்ள முடியாமல், அதிபர் பிரேமதாசவினால் அவமானப்படுத்தப்பட்டு வெளியேறியது...

*தொடரும்.*

# செந்தணல் வார இதழ் நடாத்தும் பாடசாலைகளுக்கிடையிலான அகில இலங்கை ரீதியான போட்டிகள்

செந்தணல் வார இதழ் தனது ஓராண்டு நிறைவையொட்டி பாடசாலைகளுக்கிடையிலான பின்வரும் போட்டி நிகழ்வுகளை அகில இலங்கை ரீதியாக நடாத்தவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் (பகுதி 2) ல் உள்ள விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து, பாடசாலை அதிபரின் சிபார்சுடன் 20/07/2004ம் திகதிக்கு இடையில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப்படிவங்களுடன் பங்குபற்றும் மாணவர்கள் விபரத்தையும் இணைத்து அனுப்பி வைக்கவும். இறுதிப்போட்டிகள் ஆடி மாத நடுப்பகுதியில் நடைபெறும்.

## குறிப்பு:

விண்ணப்பப் படிவங்கள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 20-07-2004 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## போட்டி நடைபெறும் இடம்

ஷாஹிறாக்கல்லூரி
மருதானை, கொழும்பு.
ஓகஸ்ட் 7ம், 8ம் திகதிகளில் நடைபெறும்.

## (பகுதி - 1) நிகழ்ச்சி நிரல்

| | | | | |
|---|---|---|---|---|
| கவிதை (எழுதுதல்) | - | (பிரிவு - 1) | பதினாறு வயதிற்கு கீழ்பட்டோர் | ஒருவர் மட்டும் |
| | | (பிரிவு - 2) | பதினாறு வயதிற்கு மேற்பட்டோர். | |
| சிறுகதை எழுதுதல் | - | (பிரிவு - 1) | பதினாறு வயதிற்கு கீழ்பட்டோர். | |
| | | (பிரிவு - 2) | பதினாறு வயதிற்கு மேற்பட்டோர் | |
| பேச்சு | - | (பிரிவு - 1) | பதினாறு வயதிற்கு கீழ்பட்டோர். | |
| | | (பிரிவு - 2) | பதினாறு வயதிற்கு மேற்பட்டோர் | |

(போட்டிக்கு முன் தலைப்புக்கள் தரப்பட்டு பதினைந்து நிமிடங்கள் தரப்படும்)

- அபிநயப்பாடல் - பத்து வயதிற்கு கீழ்பட்டோர் (6 -10பேர்) 10 நிமிடம்
- நாடகம் - திறந்த போட்டி
  1) இலக்கிய நாடகம் (25-30 நிமிடம்)
  2) சமூக நாடகம்
- நாட்டிய நாடகம் - திறந்த போட்டி (25 நிமிடம்)
- வில்லுப்பாட்டு - திறந்த போட்டி (30 நிமிடம்)
- குழு நடனம் (10பேர்) - திறந்த போட்டி (25 நிமிடம்)
- பரத நாட்டியம் (தனி) - திறந்த போட்டி (10 நிமிடம்)
- விவாதம் (6பேர்) - திறந்த போட்டி (30 நிமிடம்)

(போட்டிக்கு முன்பாக தலைப்புக்கள் தரப்பட்டு ஆயத்தம் செய்வதற்கு பதினைந்து நிமிடங்கள் தரப்படும்)

- கிராமியப் பாடல் (தனி) - (பிரிவு - 1) பதினாறு வயதிற்கு கீழ்பட்டோர். / (பிரிவு - 2) பதினாறு வயதிற்கு மேற்பட்டோர் — ஒருவர் மட்டும்

(சுருதிப் பெட்டியுடன் கிராமிய வாத்தியக்கருவிகள் உபயோகிக்க வேண்டும்.)

- தனிப்பாடல் - பத்து வயதிற்குட்பட்டடோர் (5 நிமிடம்) (பாரதியார், நவாலியூர் சோமசுந்தரம்பிள்ளை ஆகியோரின் பாடல்கள் மட்டும் பாடலாம்).
- கதை சொல்லுதல் - பத்து வயதிற்குட்பட்டோர் (3 நிமிடம்)

(முகபாவனையுடன் கூறுதல் வேண்டும், கையசைவுகள் தவிர்க்கப்படல் வேண்டும்.)

- போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கு, பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.
- செந்தணல் பத்திரிகையின் ஓராண்டு பூர்த்தி விழாவில் சிறந்த நிகழ்வுகள் அரங்கேற்றப்படும்.
- இறுதிப் போட்டிகள் கொழும்பில் பாடசாலை ஒன்றில் நடைபெறும்.

## (பகுதி - 2)

- பாடசாலையின் பெயர் : ______
- மாவட்டம் : ______
- வலயம்: ______
- பங்குபற்றும் போட்டிகள் விபரம்:- ______
- தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி ______
  (அதி/ ஆசி தொ.இலக்/ முகவரி ______
- பொறுப்பாசிரியர், அதிபர், கையொப்பம் ______

போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்த பாடசாலைகளுக்கு நிகழ்வுகள் புற்றிய மேலதிக விபரம் அனுப்பி வைக்கப்படும்.




# இளைய தலைமுறை

மாலை நேரம். வைரமுத்து துண்டை உதறித் தோளிற் போட்டுக் கொண்டார். வளைந்த கைப்பிடி கொண்ட குடையை எடுத்துக் கமக்கட்டில் சொருகிக் கொண்டார். "புள்ள வாறன்" என்றபடி நடையைக் கட்டினார்.

"இந்த மழை தூத்தலுக்குள்ள எங்க போறியள்?" என்றபடி எட்டிய மகள் வனஜா, வாசலைத் தாண்டும் தகப்பனாரைக் கண்டு, "ம், வயசானவர்களெல்லாம் வீட்டுக்குள் அடங்கிற நேரம். இந்த மனுஷன் எங்க போறாரோ?" என்று முணுமுணுத்தபடி வீட்டிற்குள் திரும்பினாள்.

அவர் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம், மகன் சத்யா வீட்டிற்கு வநதான். தூறலில் நனைந்து வந்தவனிடம், தலை துவட்டத் துணியைக் கொடுத்த வனஜா மீது, "சள்" ளென்று விழுந்தான் சத்யா. காரணம் புரியாமல் விழித்தாள் தாய்.

"அம்மா... இந்தத் தாத்தாவப் பாரு. அந்தப் பூவரசக் குளத்துக்கிட்ட நின்று கொண்டு, குளக்கட்டுல ஒரு உடைப்பு இருக்கிறதே, அந்த வழியைக் கல்லால் உருட்டி, அடைச்சிக்கிட்டு நிற்கிறாரு. இந்த மரத்தடியில் நின்ற பொடியனுகளை உதவிக்கு கூப்பிட்டாரு. ஒருத்தன் கூடப் போகல்ல அவனுகளெல்லாம் அவரைப் பகிடி பண்ணுறானுகள்."

"வயதுபோன மனுஷன் கஷ்டப்பட்டா, உதவாமல் பகிடி பண்ணுறது நல்ல வேலையா...?" வனஜா கேட்டாள்.

"அவருக்குத்தான் வேலையில்லையெண்டா அவனுகளுக்கும் வேலையில்லையா, என்னவோ இவருக்குத்தான் பெரிசா ஊரைக் காப்பாத்தற மாதிரி"

"ம் இவருக்கேன் இந்தத் தேவையில்லாத வேல, மழைக்குள்ள போகக்குள்ள நான் நினைச்சன், இண்டைக்கு வீட்டிற்கு வரட்டும்." சத்யாவின் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள் வனஜா.

பொழுதின் இருட்டோடு, மழையின் இருட்டும் சேர்ந்து இரவின் வயதைச் சற்று அதிகப்படுத்தியே காட்டியது. இருமலுடன் வீட்டிற்குள் நுழைந்த வைரமுத்துவை, ஆயத்தப்படுத்தி வைத்த கேள்விக்கணைகளோடு வரவேற்றாள் வனஜா.

இல்ல புள்ள, நான் இவன் கந்தசாமியைப் பார்க்க போனனான். அப்படியே வழியில எண்ட கண்ணுல தைச்ச, அந்த உடைஞ்ச குளக்கட்டச் சரிசெய்தனான். அங்கால சின்னப்பிள்ளைகள் விளையாடுற இடம், "மழ கிழ" பெரிசாப் பெஞ்சா, தண்ணி வந்திச் சென்டா? அப்படியே... அங்கால அந்தப் பூவரச மரத்தடியில், நம்மட ஊர்ப்பிள்ளைகள் வேலவெட்டியில்லாம, "சும்மா" கதைச்சுக்கொண்டு, பொழுதைக் போக்குதுகளே யெண்டு, "அதுகளுக்கும் பொழுது வீணாகக் கழியாமல் பிரயோசனமாய்ப் போகட்டும் எண்டும், நமக்கும் உதவியாயிருக்கட்டும் எண்டும், அதுகளையும் உதவிக்குக் கூப்பிட்டான். இப்போ, "பழுத்தோலையைப் பார்த்துக் குருத்தோலை சிரிக்கிற காலமாச்சே."

"ம்... ஒன்று கேட்டா, வேற காரணம் சொல்லுவயள் இந்த வயசான காலத்தில, வருத்தம் வந்து பிடிச்சா, ஆரு அனுபவிக்கிறது. சரி... சரி... கோப்பி போட்டுத், தேங்காய்ப்பால் விட்டுத் தாறன். இருமலுக்கு நல்லம். வந்து குடியுங்க" என்றபடி கோப்பி போடப் போனாள் வனஜா.

மறுநாள் பொழுது புலர்ந்தது. அன்று சத்யாவின் பிறந்தநாள். அதனால் அவனை அதிகாலை எழுப்பி கோயிலுக்கு போகும்படி நச்சரித்துக் கொண்டிருந்தாள் தாய். கொழும்பில் வேலை பார்க்கும் தந்தை தாமோதரம், தொலைபேசியினூடாக தன ஒரே மகன் சத்யாவிற்கு, பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். வைரமுத்து தன் பேரனுக்குப் பணம் கொடுத்து ஆசிர்வதித்தார்.

அன்றிரவு,

வீட்டில் சுவாமி விளக்கை ஏற்றிய வனஜா, இருட்டி வெகுநேரமாகியும், சத்யா வீட்டிற்கு வராததால் கலவரம் அடைந்தாள். அவள் மகனுக்கென ஆசையாய் செய்து வைத்த தொதள், உழுந்துவடை, முந்திரிப்பருப்பு பலகாரம், பாயாசம் என எல்லாம் தின்பண்டங்களும், தீண்டுவொரற்று, வைத்தது வைத்தது போல் கிடந்தன. கவலையடைந்தவள்.

"அப்பா... சத்யாவ இன்னும் காணல்ல. நீங்க ஒருக்கா, நாலெட்டு நடந்துபோய், அவனோட படிக்கிற குமார்ட வீட்டில சத்யா நிக்கிறானா? என்று பார்த்திட்டு வாங்களன்." என்றாள்.

"நான் சத்தியாட பிறந்தநாளை மதியம் ஒரு அனாதை இல்லத்திற்கோ, அவர்க

**தமிழச்செல்வி**

ளுக்குச் சாப்பாடு கொடுத்துக் கொண்டாடும்படி, காசு கொடுத்து அனுப்பினன். என்டாலும் இவ்வளவு நேரத்திற்கு என்ன செய்யிறன்." என்றபடி அரிக்கன் விளக்கை எடுத்துக் கொண்டு, சத்யாவை தேடிப் புறப்பட்டார் வைரமுத்து. அவர் தெருமுனையைக் கடக்கும் போது, தூரத்தே ஒரு உருவம் வைரமுத்துவை நோக்கி, ஓடிவந்து கொண்டிருந்தது. விளக்கைத் தூக்கி உற்றுப் பார்த்தவர். உருவம் நெருங்க நெருங்க அடையாளம் கண்டு கொண்டார். அது, குமாரின் தம்பி முரளி. வைரமுத்துவின் அருகே வந்த முரளி, உடல் படபடக்க பயத்தால் வெளிறிக் காணப்பட்டான்.

"எ... என்ன தம்பி முரளி. இந்த நேரத்தில எங்க போற? அதுசரி... இருட்டி இவ்வளவு நேரமாகியும் இன்னும் சத்யா வீட்டிற்கு வரல்ல. அங்க உங்கட வீட்ட, எங்கேயும் நிற்கிறானோ?"

அதுதான் தாத்தா சொல்ல வந்தனான். நான் இப்போ உங்கட வீட்டதான் வாறன். "சத்யா அண்ணன் வந்து... வந்து..." வார்த்தைகளை மென்று முழுங்கினான் முரளி.

"சத்...சத்யாவிற்கு என்னாச்சு? கெதியாச் சொல்லு?" அவசரப்பட்ட வைரமுத்து விடம், முரளி கூறிய செய்தி, அவரை நிலைகுலைய வைத்தது. "தலைமேல் இடிவிழுந்தது போலானார் வைரமுத்து அதிர்ந்து நின்றவர், சுயநினைவு வரத் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, முரளி பின்னால் ஓடினார்.

அங்கே, மருத்துவமனையில், வெட்டுக் காயங்களுடன், "தீவிர" சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தான் சத்தியா. சத்யா தான் கொடுத்த பணத்தைக் கொண்டு, கடற்கரையில் தன் நண்பர்களுக்குப் "பார்ட்டி" கொடுத்ததும், அங்கு "மது"வும் பாவிக்கப்பட்டதும், போதையில் இருக்கும் போது, சத்யாவிற்கும், அவனது நண்பனுக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டு இறுதியில் அது, "வெட்டுக்குத்து" கைகலப்பில் முடிந்தது, முரளி கூறியதை நினைக்க நினைக்க வைரமுத்துவிற்கு நெஞ்சு வெடித்தது.

நாட்கள் நகர்ந்தன சுகமடைந்து வீடு திரும்பினான் சத்யா. தன் தாத்தா தனக்குக் கூறிய அறிவுரைகளும், பண்பாடு, ஊர்ப்பற்று என அவர் வாழ்கின்ற விதமும், "போற்றுதற்குரியனவே அன்றிக் கேலிக் குரியன அல்ல." என்பதை அவன் வெகுவாக புரிந்து கொண்டான். மறுநாள் விடிவு, இரு ளெல்லாம் அகன்று மிகவும் பிரகாசமானதாக இருப்பது போல், 'சத்யா' விற்குப்பட்டது. அதிகாலையில் எழுந்து குளித்து "இறை வணக்கம்" செய்தவன்.

"அம்மா... தாத்தா... நான் வாறன்" என்றபடி வீட்டைத்தாண்டி வாசலில் இறங்கினான். சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த வனஜாவினதும், வைரமுத்துவினதும் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. அங்கே மண் வெட்டி, குப்பைவாளி சகிதம் சத்யா சென்று கொண்டிருந்தான்.

"சத்யா... எங்க போறாய்?"

"நம்மட ஆஸ்பத்திரி வளைவுக்குள நாங்க இண்டைக்குச் சிரமதானம் செய்யிறம்" என்று கூறியபடி சத்தியா நடந்தான்.

(கற்பனை)

# இப்படியும் சொந்தங்கள்

"யாழ்ப்பாணம் போய் எங்கடை வீட்டிலை இருக்கலாம்" என்று சொல்லி இருந்த வீட்டையும் விட்டுப் போட்டு இப்படிச் சனசந்தடியில்லாத பாழடைந்த வீட்டிலை கொண்டு வந்து விட்டுப்போட்டு விடிஞ்சாப்பொழுதுபட்டா எந்தநாளும் தலையிலை கைவைத்துக்கொண்டு யோசித்துக்கொண்டிருக்கின்றீர்களே இதற்கு என்னப்பா அர்த்தம்? எப்போது எமது சொந்த ஊருக்குப் போவம், எமது உறவினர்களைப் பார்ப்பம் என்று எவ்வளவு ஆவலுடன் இருந்தேன். தெரியுமா? உங்களுக்கென்ன எல்லாவற்றிக்கும் பேசாமல் இருப்பீர்கள் இல்லை வெளியிலை உலாத்தப்போய்விடுவீர்கள் கஸ்டப்படுவது நாங்கள் தான். இடம் பெயர்ந்து வந்து வேலை வாய்ப்புக்கிடைத்து நன்றாக உழைத்தவர்களில் நீங்களும் ஒருவர் தான். இந்த எட்டு வருடகாலத்தில் எவ்வளவு உழைத்தீர்கள் எட்டு ரூபா என்றாலும் சேமித்தீர்களா? எத்தனை ஆயிரம் ரூபா உங்கள் கைகளுக்கு வந்திருக்கும் ஒரு காணித்துண்டு வாங்கினீர்கள்? ஒவ்வொரு வருடமும் வீட்டிற்கு அலைந்து திரியும் எங்களுக்குத் தான் அந்த வேதனை தெரியும். எமக்கும் என்றொரு வீடு இருந்தால் கௌரவமாக, மரியாதையாக வாழ்ந்திருக்கலாம் தானே? எங்களுக்கு நீங்கள் ஒரு குறையும் வைக்கவில்லை. நாங்கள் கேட்டதெல்லாம் வாங்கித்தந்தீர்கள்தான் அதை நான் இல்லை என்று சொல்லவில்லை இவையெல்லாம் நாளை எம்வாழ்க்கைக்கு உதவுமா? ஒரு மனிதனுக்கு பணமும் பதவியும்தான் முக்கியம் அவை இரண்டும் இருந்தால் தானப்பா அவனை இந்த உலகம் மதிக்கும்"

என்று சற்றுக் கோபத்துடன் தகப்பனைப் பார்த்து வார்த்தைகளைக் கொட்டி விட்டு ஓய்ந்தான் ராஜி "அம்மா இன்னும் ஏதும் மிச்சம் இருக்கோ இல்லை எல்லாம் கொட்டி முடிச்சிட்டியோ? நீங்கள் என்ன சொன்னாலும் நான் கோபப்படாமல் கேட்டுக் கொண்டிருக்க வேண்டியவன் தான். காரணம் நான் உழைத்த உழைப்பிற்கு எவ்வளவு பணம் சேர்த்திருக்கலாம், எப்படி எல்லாம் வசதியாக வாழ்ந்திருக்கலாம். அது உண்மைதான் சரி இனிப் போன பஸ்சிற்கு கைகாட்டிப் பிரயோசனம் இல்லை இனி என்றாலும் பார்ப்பம்.

"கண்கெட்ட பிறகு சூரியநமஸ்காரமா" வேதனையிலும் தகப்பனைப் பார்த்து மெல்

**செல்வி.அ.பரமேஸ்வரி**
**திருகோணமலை**

லச் சிரித்தாள் ராஜி. அப்பா! அதை எல்லாத்தையும் விடுங்கோ இப்ப எப்ப நாங்கள் எங்கடை ஊருக்குப் போறது அதை முதலில் சொல்லுங்கோ!

அம்மாவும் நானும் முதலில் ஊருக்குப் போய் வந்து உங்கள் எல்லாரையும் கூட்டிப் போவதாகச் சொன்னீர்கள். போய் வந்து என்ன இரண்டுபேரும் அந்தக்கதையே இல்லாமல் இருக்கிறியள்?

அவ்வளவு நேரமும் தகப்பனும் மகளும்



கதைப்பதை எல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த தாய் பவளம் வாய் திறந்து கதைத்தாள். இல்லைக் கத்தினாள் என்றே சொல்லலாம்.

எங்கேயிருக்குதெடி வீடு எங்களுக்கு? அந்த நாசமாய்ப் போனவங்கள் குண்டு போட்டு வீட்டின் ஒரு பகுதியை சேதமாக்கினால். மிச்சம் இருந்த எல்லாவற்றையும் சொந்தக்காரரும், அயலவர்களும் சேர்ந்து பிடுங்கி எடுத்துப் போட்டார்கள். கட்டிடம் மட்டும்தான் மிஞ்சிக் கிடக்குது. அந்தப் பாழாய்ப்போன சனங்கள் நாங்கள் மீண்டும் அங்கே திருப்பிப்போகமாட்டோம் என்று நினைத்தார்களே தெரியாது. பழி பாவத்திற்கு அஞ்சாமல் இப்படிச் செய்து போட்டுதுகள். என்ர வீட்டிலை கைவைச்சதுகள் எவராயிருந்தாலும் அவர்கள் உருப்படவேமாட்டார்கள். என்றைக்குமே நாங்கள் இப்படியே இருப்போம் என்று சனங்கள் நினைத்துவிட்டார்கள்.

வாடகை வீட்டில் இருந்து இன்னல் படாமல் சொந்த ஊருக்குப்போய் கஞ்சியோ, கூழோ குடித்தாலும் நிம்மதியாக வாழலாம் என்றால் அதுவும் ஆண்டவனுக்குப் பொறுக்கவில்லை போலும்: வீட்டைத் திருத்துவதென்றால் எங்களுடைய தற்போதைய நிலையில் முடியவே முடியாது. எமக்கு உதவிசெய்யக்கூட எவரும் இல்லை. எமக்கென்று இருக்கும் ஓரே ஒரு சொத்து அந்த இடிந்துபோன கட்டிடமும், காணித்துண்டும்தான். நான் உயிருடன் இருக்கும்வரை அதை எவர் கைமாறவும் விடமாட்டேன். இரவு பகல் என்று பாராமல் உறக்கம் இன்றி கடுமையாக உழைத்து குருவி சேர்த்தது போல் சேர்த்துக் கஸ்டப்பட்டுக் கட்டின வீடு ஆசையுடன் பார்த்துப் பார்த்துக் கட்டிய வீடு பட்டினி கிடந்து உருவாக்கியவீடு அதில் போய்க் கைவைத்தார்களே! பாவிகள்.

என்று அழுகையுடனும், ஆவேசத்துடனும் கூறி முடித்த தாய் பவளம் மீண்டும் மகள் ராஜியைப் பார்த்து "நீங்கள் ரோசமுள்ள வைராக்கிய முள்ள பிள்ளைகளாக இருந்தால் எங்களுக்கு இப்படியான அநியாயம் செய்தவர்கள் முன் நன்றாக வாழ்ந்து காட்டுங்கள். மீண்டும் அதே காணிக்குள் ஒரு வீட்டைக் கட்டி எழுப்புங்கள். ஒரு நாள் என்றாலும் நான் என் சொந்த வீட்டில் இருந்து போட்டுச் சாகவேண்டும் இதுதான் என் ஆசை நிச்சயமாக மீண்டும் அங்கே என் காணிக்குள் ஒரு வீடு உருவாகும், உருவாக்குவீர்கள் என்ற பெரும் நம்பிக்கை எனக் குண்டு. அந்த நம்பிக்கையில் தான் என் மனதை இன்று சாந்தப்படுத்திக் கொண்டிருக்கின்றேன் என் நம்பிக்கை, ஆசை, வீண் போகாது வீண் போகாது" என்று கூறியவள் அப்படியே சரிந்து படுத்துக் கண்ணயர்ந்து விடுகின்றாள்.

தாயின் நிலைமையைப் பார்த்து பரிதாபப்பட்ட ராஜி சொந்தங்களின் செயலை நினைத்து வெறுப்படைந்தவனாய் ஏதோ ஒரு வைராக்கியத்துடனும் உறுதியுடனும் வேலைக்குப் புறப்படத் தயாராகுறாள்.

- முற்றும்.

# உங்கள் ராசி பலன்கள்



## விருச்சிகம்

தொடர்ச்சி....

ஜோதிட சக்ரவர்த்தி

## ஏ.எம். ராஜகோபாலன்

13.04.2004 முதல் 18.08.2004 வரை
(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை வரை)

குருபகவானின் பார்வை உங்கள் ராசிக்கு வாக்கு, தனம், குடும்பம், சுகம்,ருண, ரோகம், சத்ரு ஆகிய ஸ்தானங்களுக்கு ஏற்படுகிறது. 8-ல் சனி. இத்தகைய கிரகநிலைகளில்தான் தாரண புத்தாண்டும் பிறக்கிறது. உடல்நலனில் தொடர்ந்து கவனமாக இருத்தல் நல்லது. குடும்பச் சூழ்நிலை சாதாரணமாகவே இருக்கும். முயற்சிகள் அனைத்திற்கும் தடங்கல் கள் ஏற்பட்டு ஏமாற்றமளிக்கும். பணவசதி போதுமான அளவிற்கு இராது. திருமண முயற்சிகள் கைகூட அடுத்துவரும் நான்குமாதங்களுக்குப் பொறுமையுடன் காத்திருக்க வேண்டியுள்ளது. நீதிமன்ற வழக்குகள் இருப்பின் எவ்வித முடிவும் இன்றி அது நீடிக்கும்.

வேலைக்குச் சென்றுவரும் இந்த ராசி அன்பர்கள் தொடர்ந்து நிதானத்துடன் செயல்படுவது அவசியம். எத்தகைய தருணத்திலும் இவர்கள் தங்கள் மன உணர்ச்சிகளை வெளிக்காட்டக்கூடாது. நியாயமில்லாத குற்றச்சாட்டுகளையும், சக ஊழியர்களின் நியாயமற்ற பேச்சுக்களையும் எதிர்கொள்ள நேரிடும். தொழிலதிபர்களுக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஆகஸ்ட் 18ம் தேதி வரை தொழிலாளர் பிரச்சனை, மற்றும் நிர்வாகத்துடன் கருத்து வேற்றுமை, அவ்வப்போது பொருளாதாரச் சிரமங்கள் ஆகியவை ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. எதிலும் நிதானமாக நடந்து கொள்வது அவசியம். வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படின், அந்த ஒப்பந்தங்களின் ஷிரத்துக்களைத் தீர ஆராய்ந்த பின்னரே நீங்கள் கையெழுத்திட வேண்டும்.

வியாபாரத்துறையினருக்கு அதிக உழைப்பும், கடினமான போட்டிகளைச் சமாளிக்க வேண்டிய நிர்பந்தங்களும், சில தருணங்களில் பணப்பிரச்சனைகளும் கூட ஏற்படும். வெளியூர்ப பயணங்களினால் உழைப்பிற்கும், அலைச்சலுக்கும் தகுந்த லாபம் கிடைக்காது. அதனால் செய்துவரும் வியாபாரத்திலேயே வெறுப்பு உண்டாகும். சக கூட்டாளிகளுடன் பகையும், வீண்வாக்குவாதமும் உண்டாகும். கலைத்துறை அன்பர்களால் எதையும் பெரிய அளவில்தான் திட்டமிட முடியும். முதலீடுகளும் அவ்விதம் பெருமளவிலேயே செய்வீர்கள். இதுதான் உங்களுடைய மிகப்பெரிய பலவீனமும், ஆபத்துமாகும். நஷ்டம் வந்தால் மிகப்பெரிய அளவில்தான் வரும் உங்களுக்கு. இனியாவது இத்தகைய மனப்பான்மையை நீங்கள் மாற்றிக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

அரசயல்துறையினருக்கு ஆகஸ்ட் 18ம் தேதி வரை சோதனைக்காலம் என்றே கூற வேண்டியுள்ளது. தொட்டதெல்லாம் தோல்வியில் முடியும். தலைவர்களுடன் பகை உணர்ச்சி மேலிடும். தொண்டர்களின் ஆதரவு குறையும். தேர்தலில் நின்றால் வெற்றி பெறுவது மிகவும் கடினம். மாணவ, மாணவியருக்கு மட்டும் சிறிது நன்மைகளைக் கூறமுடிகின்றது. பாடுபட்டுப் படிக்க வேண்டிவரும். மற்றபடி எவ்விதச் சிரமமும் இராது. வெளிநாடுகளில் படித்துவரும் மாணவர்களுக்குப் படிப்பில் முன்னேற்றம் தடைபடாது. விவசாயிகளுக்கு விளைச்சல் திருப்திகரமாக இருப்பினும் ஏதோ ஒரு காரணத்தினால் வருமானம் மட்டும் குறைவாகவே இருக்கும். பழைய கடன்கள் தொல்லைதரும். கால்நடைகள் நோய்வாய்ப்படுவதால் பணம்விரயமாகும். சென்ற இரண்டாண்டுகளுக்கு மேலாகவே விருச்சிக ராசிப் பெண்மணிகளுக்குக் கிரக நிலைகள் சரியில்லை. அந்நிலையில் சிறிதளவு நல்ல மாற்றம் ஏற்பட்டிருந்தும் போதுமான அளவிற்கு கிரகங்கள் அனுகூலமாக மாறுவதற்கு மேலும் நான்கு மாதங்கள் ஆகும். அதுவரை குடும்பப் பிரச்சனைகள் நீடிக்கத்தான் செய்கின்றன.

19.08.04 முதல்
13.04.05 வரை

இரண்டாண்டுகளுக்கு மேலாகக் கடுமையான சோதனைகளை அனுபவித்து வந்த இந்த ராசி அன்பர்களுக்கு ஒரு விடிவுகாலம் வந்துள்ளது.

சனிபகவான் அஷ்டமத்தில் நீடித்தாலும் மிதுனத்தில் பாதியைக் கடந்து விட்டதால் அவரால் ஏற்பட்ட சிரமங்கள் பெருமளவில் குறையும். குடும்பச் சூழ்நிலையில் நல்ல மாற்றம் ஏற்படும் இப்போது. உடல்நலனிலும் அபிவிருத்தி காணலாம். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். நிதி நிலைமை சிறிது சிறிதாக சீர்படத் தொடங்கும். தொடர்ந்து கட்டுக்கடங்காது ஏற்பட்ட வீண் செலவுகள் சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பிக்கும். வருமானமும் உயரும் தடைபட்டிருந்த திருமண முயற்சிகள் இனி கைகூடும். கடன்கள் அடைபடி வழி பிறக்கும். உத்தி யோகம், தொழில், வியாபாரம் ஆகிய துறையினருக்கு இதுவரை சந்தித்து வந்த சிரமங்கள் அனைத்தும் இனி இராது. கலைஞர்கள் இனி அவர்களது புது முயற்சிகளில் ஈடுபடலாம். அவை லாபகரமாக இருக்கும். அவை லாபகரமாக இருக்கும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். அரசியல் துறையினரும் மீண்டும் கட்சியில் செல்வாக்கு ஏற்படும். புதிய பொறுப்புக்களை ஏற்பதற்குச் சாத்தியக்கூறு உள்ளது. பெண்மணிகளுக்குக் கவலை தீரும் வேளை வந்துவிட்டது.

**அறிவுரை:-**

தாரண புத்தாண்டு ஆரம்பம் முதல் ஆகஸ்ட் 18ம் தேதிவரை நீங்கள் மிகவும் பொறுமையாக இருந்தலும், முன்கோபத்தையும் உணர்ச்சிகளையும் எத்தனைதான் நலல உள்ளமிருந்தாலும் உங்கள் முன்கோபமே உங்களுக்கு எதிரியாகி விடுகிறதல்லவா?

**பரிகாரம்:-**

ஸ்ரீமத் நிகமாந்த மகா தேசிகரின் 'அபீத ஸ்தவம்' ஸ்தோத்திரமும் மிருத்துஞ்ஜய ஸ்தோத்திரமும் தினமும் பாராயணம் செய்து வரவும். வசதி இருப்பின் ஒருமுறை காசி அல்லது ஹரித்வார் சென்று கங்கா நதியில் ஸ்நானம் செய்துவிட்டு வரவும். இந்தப் பரிகாரங்களே போதும்.

இராசி பலன் அடுத்த இதழில்......

---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

**பாடசாலை.....**

செல்வி.க.தங்கேஸ்வரி தொடர்ந்து பேசுகையில் "மண்டபத்தடி அ.த.க.பாடசாலை ஒரு ஆரம்பப்பாடசாலையாக இருந்தாலும், அதன் செயற்பாடுகள் நகரப்பாடசாலைகளின் தரத்தில் அமைந்துள்ளன. இவ்விளையாட்டுப்போட்டி நிகழ்ச்சி புறக்கிரத்திய நடவடிக்கைகளின் ஒரு குறியீடாகும். இதன்மூலம், அதிபரின் நிர்வாகத்திறன், ஆசிரியர்களின் ஒத்துழைப்பு, பெற்றோரின் பங்களிப்பு முதலியவற்றை அவதானிக்க முடிகிறது. பெற்றோர் சிரமதானத்தின்மூலம் இப்பாடசாலையின் விளையாட்டுமைதானத்தை அமைத்துக் கொடுத்திருப்பது பாராட்டத்தக்க முயற்சியாகும்." எனக்கூறினார். பாடசாலை அதிபர் புலேந்திரக்குமார் பேசுகையில் "இப் பாடசாலை படுவான்களைப் பிரதேசத்தின் பின் தங்கிய கிராமங்களில் ஒன்றான மண்டபத்தடிக் கிராமத்தில் அமைந்துள்ளது. இப் பாடசாலையைக் கட்டிஎழுப்புவதில் வலயக் கல்விப் பணிமனை பிரதேசக் கல்விதிணைக்களம் ஆகியவற்றின் உதவி பெரிதும் தேவைபடுகிறது. விளையாட்டு மைதானம், சுற்றுவேலி முதலியன இதன் அத்தியாவசிய தேவைகளாக உள்ளன" எனக் கூறினார்.

பிரதிக்கல்விப்பணிப்பாளர் ஏ.எம்.ஈ.போல் பேசுகையில், "இப்பாடசாலை ஒரு ஆரம்பப் பாடசாலையாக இருந்த போதிலும், அதிபரின் சிறந்த தலைமைத்துவத்தாலும் ஆளுமையாலும் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளது அதிபர், ஆசிரியர், பெற்றோர் ஆகியோரின் கூட்டு முயற்சிக்கு இவ்விளையாட்டுப் போட்டி ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும்" எனக்கூறினார்

பிரதேசக்கல்வி அதிகாரி எஸ்.சண்முகம், முன்னாள் சிரேஷ்ட உதவிச் செயலாளர் அன்புமணி இரா.நாகலிங்கம். ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

விளையாட்டுப்போட்டியில், வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு, விருந்தினர்களும், மன்முனை மேற்குப் பிரதேசத்தில் உள்ள 25 பாடசாலைகளின் அதிபர்களும் பரிசுப்பொருட்களை வழங்கினர். படுவான்கரைப் பிரதேசத்தில் உள்ள அனைத்துப்பாடசாலைப் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

---

# மருதமடு அன்னையின் ஆடித்திருவிழா

யாத்திரைத் தலங்களுள் பிரசித்தி பெற்று விளங்கும் மருதமடுத் திருப்பதியின் ஆடித் திருவிழா 2ம் திகதி வெள்ளிக்கிழமை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

23ம் திகதி புதன்கிழமை பொடியேற்ற விழாவுடன் ஆரம்பித்து வெள்ளிக்கிழமை (01ம் திகதி) மாலை நற்கருணை சிறப்பு ஆராதனை இடம் பெற்று, 2ம் திகதி காலை திருநாட்திருப்பலியும் திருச்சரூபப்பவனியும் இடம்பெற்றது. ஆடித் திருவிழாவிற்கு இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் அன்னையின் அருள்வேண்டி விழாவில் கலந்து கொண்டனர்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மருதமடுத் திருப்பதி 16ம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகும். போர்த்துகேயரின் வருகையால் கிறிஸ்தவ மதம் பரவப்பட்டு பலர் அம்மதத்தை தழுவத் தெடங்கியதால் ஆத்திரமடைந்த சங்கிலிய மன்னன் 600க்கும் மேற்பட்டோரை கொடூரமாய்ச்சிரச்சேதம் செய்தான். இவ்வாறு வேதசாட்சிகளாக மரித்த இவர்களை அடக்கம் செய்த கல்லறையை இன்றும் காணலாம்.

மாந்தை எனும் இடத்திலேதான் மடு அன்னையின் ஆதியிருப்பிடமிருந்தது. ஆரோக்கியமாதா என்ற பெயரில் அன்னையின் திருச்சுரூபத்தை ஸ்தாபித்து வழிபட்டு வந்தனர்.

1670 இல் இலங்கை ஒல்லாந்தர் வசமான போது கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டு ஆலயங்கள் தகர்க்கப்பட்டன.

இக்காலகட்ட த்தில் இலங்கையின் புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள புனித ஜோ்ஸப்வாஸ் அடிகளாரும், யாக்கோமே கொன்ஸால்வாஸ் அடிகளாரும் மக்களுக்குப் பணியாற்றினர்.

1706இல் கிறிஸ்தவர்களின் தலைமைப்பீடம் 'சிலேனா மடுவில்' நிறுவப்பட்டதாகவும், அருட்தந்தை பேதுறு பெற்றாஸ் அடிகளார் திருச்சபைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டதாகவும். 1795வரை அங்கேயே அவர் வாழ்ந்ததாகவும் சான்றுகள் சாட்சிபகர்கின்றனர்.

குடிசைக்கோயிலாக இருந்த மடு அன்னையின் ஆலயம் 1870-08-08ம் திகதி கொழும்பு மறைமாவட்ட பேராயர் அதி.வண.கலாநிதி பொஞ்சின் ஆண்டகையினால் புதிய ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 1924இல் பரிசுத்த பாப்ரசின் பிரதிநிதி மருதமடுத்தாய்க்கு மூடிசூட்டும் வைபவமும் நடைபெற்றது.

அமல மரித்தியாகிகளின் பொன்விழாவை முன்னிட்டு 1948 இல் 50க்கும் மேற் பட்ட குழுக்கள் சேர்ந்து கூட்டுப் பூசையும் நடைபெற்று அன்னையின் திருச்சுரூபம் யாழ் மெற்றிராசணத்தை சேர்ந்த சகல ஆலயங்களுக்கும் எடுத்துச் செல்லபட்டது. அதன் பின் 1949இல் அன்னையின் மூடிசூட்டு விழாவின் வெள்ளிவிழாவும் கொண்டாடப்பட்டோடு இனமத குலபேதமின்றி அன்னையை நாடி பக்தர்களின் எண்ணிக்கை பெருகியது.

1976 இல் யாழ் மறை மாவட்டத்திலிருந்து மன்னார் மறைமாவட்டமாகப் பிரிக்கப்பட்டு முதலாவது ஆயராக அதி.வண.கலாநிதி தோமஸ் சவுந்திரநாயகம் பதவியேற்றார்.

தற்போது அதி.வண கலாநிதி இராயப்பு ஜோசப் அடிகளார் சேவையாற்றிக் கொண்டிருக்கிறார். இவருடைய காலகட்டத்தில் 2001ஆம் ஆண்டு மருதமடு அன்னையின் திருச்சுரூபம் தென்னிலங்கைக்கும் எடுத்து வரப்பட்டது.

அமைதியின் நாயகி தஞ்சம் புகுந்த அகதிகளை அரவணைத்து மீண்டும் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைத்த மருதமடு கானகச் சொல்வி நாட்டில் நிரந்தர சமாதானம் நிலவ வழிவகுப்பாராக.

'மருத மடுமாதாவே, மனுக்குலத்தின் தாயாரேகருணை அருட் செபமாலை கனிந்திட நாம் செய்தாயே!.

---

# மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்த நியாயமான மந்திரி இல்லை

பொதுஜன ஐக்கிய முன்னணி, மலையக தொழிலாளர் வர்கத்திற்கு ஆட்சியில் இருந்த கால கட்டங்களில், ஸ்ரீமா சாஸ்திரி ஒபபந்தத்தின் மூலம், பிரஜா உரிமை வழங்கியமை, தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாபநிதி வழங்கியமை, தோட்டங்களை அரசு பொறுப்பேற்றது போன்ற சேவைகளை ஆற்றியுள்ளது.

ஆகவே இம்முறை வெற்றி பெற்றுள்ள கூட்டு முன்னணி அரசாங்கம் தோட்டதொழிலாளர்களுக்கு மாதசம்பளம் வழங்கள், மற்றும் சுகாதாரவசதி, சம்பளஉயர்வு,நவீன முறையில் குடியிருப்பு வசதி அமைத்து கொடுத்தல், போன்ற பிரச்சனைகளுக்கு, தொழிலாளர்வர்க்த்தின் அடிப்படை பிரச்சனைகளை தீர்ப்பதற்கான முயற்சிகளும், புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு ஈடுபடவேண்டும்.

அதே நேரம் கடந்த காலத்தில் இன்றைய அரசு இருந்தபோது மலையக தமிழர்களுக்கு இரண்டு நியமன பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை வழங்கி கௌரவித்தது.

இன்று தேர் தலில் வெற்றிபெற்று ஆட்சி பீடம் ஏறியதும், மலையகத்தை பிரதிபலிப்பதற்காக கட்சியோடு ஒன்றிணைந்து செயற்பட்ட மலையக அரசியல் தலைவருக்கு, மலையத்தை பிரதிநிதித்துவ படுத்துவதற்கு ஒரு நியமன மந்திரி பதவி வழங்காதது வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே ஜனாதிபதி அவர்கள் மலையகத்தை பிரதிநிதிப்படுத்துவதுவதற்காக ஒரு நியமன பாராளுமன்ற உறுப்பினர் பதவி மலையகத்தை பிரதி நிதித்துவபடுத்தக் கூடிய தலைமைகளுக்கு வழங்கி மலையக மக்களையும் கௌர விக்கவேண்டுமென அம்பே கமுவ பிரதேச சபை உறுப்பினரும், இலங்கை ஜன நாயக முன்னணியின் உதவி செயலாளருமான செல்லையா சிவசுந்தரம் தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளார்.

மலையக அரசியல் தலைமைகளுக்கு ஒரு பிரதிநிதித்தவத்தை வழங்குவதன் மூலம் மேலும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்திட்டங்களையும் அவரது சேவைகளையும் மலையக மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு வாய்ப்பாக இருக்குமென செல்லையா சிவசுந்திரம் J.P. தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

**-செ.தி.பெருமாள்-**

---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

**பண்டாரவன்னியன்...**

மனித அறிவிற்கும், தமிழ் பண்டிக்குளம் மாறாகச் செயற்படும் ஒவ்வொரு செயல்களும் சமூக விரோதமாகும். குழுக்களாகத்திரிவது, சண்டையிடுவது, சந்திகளில் நிற்பது, பெண்களுடன் தகாத முறையில் நடந்து கொள்வது, பாலியல் பலாத்காரம் விபச்சாரம், தீய நாட்டங்களில் ஈடுபட்டு, போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுவது.

குறிப்பிட்ட வயதிற்குட்பட்டோர் மது அருந்துதல், புகைத்தல், வீதியில் நின்று நகையாடுதல் மக்களுக்கு இடையூறு விளைவித்தல், களவு, கொள்ளை, பொருள் பறித்தல், போன்றவற்றில் ஈடுபடுவோர் அனைவரும் சமூக விரோதிகளாகவே கருதப்படுவீர்கள்.

எனவே தேசத்தின் விடுதலைக்காக சமூக விரோதிகளை அழிக்க நாம் ஒருபோதும் தயங்கமாட்டேன். தேசத்தின் துரோகிகளா கவும், சமூகத்தின் விரோதிகளாகவும் திகழ்ந்து விலை மதிப்பற்ற உங்கள் உயிர்களை வீணாக்கிக் கொள்ளாதீர்கள்.

உங்கள் வாழ்வு எதிர்காலம் பற்றி உங்கள் அறிவு நல்லதொரு முடிவு எடுக்காவிட்டால் எங்கள் ஆயுதம் நிலையானதொரு முடிவு எடுக்கும்.

ச. மயூரன

# ஆசியக் கிண்ணத்தில் பாகிஸ்தானை தோல்வியடையச் செய்வோம்

## -ராகுல் ராவிட்

இம்மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் அணியை தோல்வியடையச் செய்து ஆசியக் கிண்ணத்தை கைப்பற்றுவது உறுதி என்று கூறியுள்ளார், இந்திய அணியின்



துணைத் தலைவர் ராகுல் டிராவிட்.

இப்போட்டிக்கான பயிற்சி முகாமில் கலந்து கொள்வதற்காக சென்னைக்கு வந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுபற்றி மேலும் தெரிவிக்கையில், இத் தொடரிற்கான பயிற்சிப் போட்டியிற் கலந்து கொள்ள சென்னைக்கு வந்துள்ளேன். ஏற்கனவே பெங்களுரில் நடைபெற்ற பயிற்சி ஆட்டம் எமது வீரர்களிற்கு சிறப்பான பயிற்சியாக அமைந்துள்ளது. அதேபோலவே இப்பயிற்சி முகாமும் பயனுள்ளதாய் அமையும். இத் தொடரில் பயன்படுத்தும் யுக்திகள் குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை. எமது பயிற்சியாளர் ஜோன் ரைட் என்ன கூறுகி றாரோ அதன்படி செய்வோம் என்றார்.

# ஒருநாள், டெஸ்ட் எதில் விளையாடினாலும் சிறப்பாக விளையாட வேண்டும்.

## -பட்டேல்

இம்மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் விளையாட இருக்கும் இந்திய அணியின் டெஸ்ட் விக்கெட் காப்பாளர் பார்தீவ் பட்டேல் இப்போட்டி பற்றிக் கூறும்போது:-

"ஒரு நாள் ஆட்டம், டெஸ்ட் ஆகிய இரு அணிகளில் எதில் விளையாடினாலும் சிறப்பாக விளையாட வேண்டும் என்பதே எனது குறிக்கோள். இந்த ஒருநாள் ஆட்டத் துக்கான இந்திய அணியில்தான் விளையாடக் காத்திருப்பதாகவும், இத்தொடர், இந்தியா விலோ அல்லது வேறு அயல் நாடுகளிலோ இடம் பெற்றாலும், அந்த ஆட்டத்தில் விளை யாடும் போது மிகவும் சிறப்பாக விளையாட வேண்டும். ஒரு நாள் ஆட்டத்திற்கான இந் திய அணியில் இடம் பெறாமல் போனது எனக்கு மனவருத்தத்தை அளிக்கிறது. இந்த அணியில் நிரந்தர இடம் பிடிக்க நான் முயற் சிகளை எடுத்து வருகின்றேன். இது தொடர் பான பயிற்சி முகாம்களில் விக்கெட் காப்பு, துடுப்பாட்டம் இரண்டிலும் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றேன். இந்தப் பயிற்சி மூலம் எனது குறிக்கோளை எட்ட முடியும் என்றார்.

## பாடசாலைகளிற்கிடையேயான விளையாட்டுப் போட்டி

கடந்த 03ம், 4ம் திகதிகளில் யாழ்ப்பாண துரையப்பா விளையாட்டரங்கில் கரும்புலி கள் தினத்தை முன்னிட்டு வட-கிழக்குப் பாடசாலைகளிற்கிடையிலான விளையாட் டுப் போட்டிகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோண மலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டப் பாடசாலைகளிற்கிடையே விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து போட்டிகளில் வென்றவர்களிற் கான பரிசளிப்பு வைபவமும்இடம் பெற்றது.

# விளையாட்டுச் செய்திகள்

தொகுப்பு:- ஜெயம்

# பாகிஸ்தான் அணி எங்களிற்கு சவாலாக இருக்கும்

எதிர்வரும் 16ம் திகதி இலங்கையில் ஆசி யக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் ஆரம்பமாக இருக்கின்றது. இத்தொடரில் இலங்கை, இந் தியா, பாகிஸ்தான் ஆகிய அணிகள் விளை யாடவுள்ளன. இப்போட்டிக்கான பயிற்சியை பயிற்சி முகாமில் இந்திய அணி மும்முரமாக மேற்கொண்டு வருகின்றது. இப்போட்டிகள் பற்றி இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் ஜோன்ரைட் தெரிவிக்கும் போது:-

ஆசியக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் எதிரணி வீரர்களின் பலம், பலவீனம் பற்றி எங்களிற்கு தெரியும். புதிய இந்த கிரிக்கெட் தொடரை வெற்றியுடன் ஆரம்பிப்போம். எமது வீரர்கள் அனைவரும் தயாராக இருக் கிறார்கள். யாருக்கும் எந்தப் பிரச்சனையும் இல்லை. இந்தத் தொடரில் முக்கியமாக பாகிஸ் தான் அணி எங்களிற்கு சவாலாக அமையும்.



-ஜோன் ரைட்

இத்தொடரில் எங்களுடன் விளையாடும் எதி ரணி வீரர்களைப் பற்றி நாங்கள் நிறையவே ஆராய்ச்சி செய்திருக்கிறோம். கம்யூட்டர் நிபுணர் உதவியுடன் எதிரணி துடுப்பாட்ட வீரர்கள் பந்து வீச்சாளர்கள் பற்றி, அவர்கள் பலம் பலவீனங்களை துல்லியமாக அறிந்து வைத்திருக்கிறோம். குறிப்பாக பாகிஸ்தான் இலங்கை அணி வீரர்களைப்பற்றி ஆய்வு செய்திருக்கிறோம். இத்தொடரில் இந்த அணுகுமுறை எங்களிற்கு மிகவும் உதவியாக இருக்கும். இந்திய வீரர்களிற்கு கபில்தேவ், போய் கொட் போன்றவர்கள் சிறப்புப் பயிற்சி கொடுப்பதால், எனக்கு எந்த வருத்தமும் இல்லை என்றார்.

இந்திய அணியின் ஆரம்ப ஆட்டக்காரர் பற்றிய சர்ச்சை அண்மையில் ஏற்பட்டது. இது பற்றி அவரிடம் கேட்ட போது, அணி க்குத் தேவையான வீரர்களை தேர்வுக் குழு தான் முடிவு செய்யும் எந்த வீரர் எந்த இடத் தில் இறங்க வேண்டும் என்பதை தலைவர் தான் முடிவு செய்வார். இந்த விடயத்தில் பயிற்சியாளர், துணைத் தலைவர் இருவரும் தலைவருக்கு ஆலோசனை வழங்குவோம் என்றார்.

# முதல் முறையாக சம்பியனான மரியா ஷரபோவா

ரஷ்யாவைச் சேர்ந்த 17 வயதான மரியா ஷரபோவா விம்பிள்டன், டென்னிஸ் பெண் கள் ஒற்றையர் சம்பின் பட்டத்தைத் தட்டிச் சென்றுள்ளார். நடப்புச் சம்பியனான அமெ ரிக்காவின் செரினா வில்லியம்ஸை அதிர்ச்சித் தோல்விக்குள்ளாக்கிய இவர், தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை தனது பெற்றோ ரிற்கு அர்ப்பணித்தார்.

இப்போட்டி லண்டனில் நடந்து வருகி ன்றது. இப்போட்டியின் போது நடப்பு சம்பிய னான செரினா வில்லியம்ஸ் 17 வயதான மரியா ஷரபோவாவை எதிர்த்து விளையாடி னார். உற்சாகமாக களமிறங்கிய ஷரபோவா முதல் செட்டை 6-1 என்ற கணக்கில் வென்று அதிர்ச்சி அளித்தார். அடுத்த ஆட்டத்திலும் இவர் தனது திறமையை வெளிப்படுத்தி 6-4 என்ற கணக்கில் வென்று சம்பியம் பட் டத்தை தனதாக்கினார். இவர் இந்த சம்பியன் பட்டத்தை வெல்வது இதுவே முதல் தடவை



யாகும்.

இந்த ஆட்டத் தொடரில் ஒரு செட்டில் மட்டுமே தோல்வியடைந்த செரினா இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்று 1-6, 4-6 என்ற புள்ளியில் தோல்வியடைந்தார். இதனால் இவர் அதிர்ச்சியடைந்துள்ளார்.




# பதில்கள்

? **அன்பின் திரிசூலியாரே! ஒருத்தியை நேசி எயிட்சை யோசி எனது புது மொழி எப்படி?**

எஸ். ஜ ரகு, வவுனியா.

! ரகு ஒருத்தியை நேசி என்று வீட்டீர். பின் எதற்கு எயிட்சை யோசிக்கக் கூறுகிறீர். ஒருத்தியை நேசித்தால் வாசிக்கத் தேவை யில்லை அந்த வாசகத்தை.

? **அன்பின் திரிசூலியாரே! எப்பொழதும் அதிகம் தமக்குத்தான் தெரியும் எனக் கூறி குற்றம் பேசிக்கொண்டிருப்பவர்க ளைப் பற்றி என்ன சொல்லலாம்?**

எச். எம். தர்கீஸ், பொரளை.

! பாவம் சுற்றத்தைப் பேணத் தெரியாதவர் கள் அடுத்தவரின் சிறுபிழைகளையா வது சுட்டிக்காட்டி தாம் பெரியவராகி விட முடியாதா என்ற ஆதங்கம் தான்.

? **அன்பின் திரிசூலியாரே! துன்பத்தின் போது என்ன செய்தால் தீரும்?**

செந்தில் குமரன், குருமன்காடு.

! துன்பத்தின் போது எது செய்தாலும் அது தீராது, ஆனால் துன்பச் சுமையைக் குறைக்க வழிஉண்டு. அந்த துன்பத்தைத் தாங்கக் கூடிய மனோபலம், எதிர் கொள் ளக்கூடிய திடம், எந்த நேரத்திலும் சிந்தித்து செயற்படக்கூடிய சக்தி எல்லாம் உமக்கு வரவேண்டும், ஏற்படவேண்டும் என நீர் உமக்குள்ளேயே அவற்றை எல் லாம் வளர்த்துக்கொள்ளும் துன்பம் உம் மைக் கண்டு பயந்து ஒதுங்கும்.

? **அன்பின் திரிசூலியாரே! ஆறிப்போனால் பழங்கஞ்சியா?**

மு. ராதிகா, முள்ளியவளை.

! இல்லை, புதுக்கஞ்சியையும் பருக இலகு வாக்க ஆறவைக்க வேண்டும் - இது பழம் கஞ்சியல்ல. நீர் சூடாக இருக்கி றீரோ ராதிகா.

? **அன்பின் திரிசூலியாரே! இலங்கையின் கிழக்கு மாவட்டத்தில் அடிக்கடி உயிர் குடிக்கும் துணிவற்ற கோழைகளைப் பற்றி எமது கருத்தென்ன?**

S. தேவகுமார், முதலியார்குளம்.

! அதுதான் நீரே கூறி விட்டீரே கோளைக ளென்று.

? **அன்பின் திரிசூலியாரே! கவிதை எழதுகி றார்களே அவர்களெல்லாம் விரைவில் காதலித்து கல்யாணம் பண்ணி விடுவார் களா?**

Y. ஜெனி, வவுனியா.

! நானும் தான் கவிதை எழுதி எழுதி வைத்திருக்கிறேன், காதலிக்கத்தான் இன் னும் யாரும் கிடைக்கவில்லையே என்ன செய்வது.

? **ஜனாதிபதி நாட்டை மீண்டும் யுத்தகள மாக்கிவிடுவார் போலிருக்குறதே திரிசூலி யாரே?**

பி. ரம்மியா, விவேகானந்தமேடு, கொழும்பு -13.

! எனக்கும் கூடப் பயமாகத்தான் இருக் கிறது. ரம்மியா, பழையபடி செக் பொயிண்டுகள், ரவுண்டப், கைது.

? **மட்டக்களப்பு குட்டிகள் அழகானவர்க ளாம், மலைநாட்டு நண்பன் கூறினான். அவன் சீதனமும் இல்லாமல் கரம்பிடிக்க ஆசைப்படுகிறானாம் என்ன சொல்லலாம்?**

ர. திலீபன், மட்டக்களப்பு.

! என்ன திலீபன் மட்டக்களப்பில் கன்றுக் குட்டி, ஆட்டுக்குட்டி, இவற்றையெல்லாம் கூட கரம்பற்றலாமே?... ஓகோ தெய்வீக காதலோ...

? **அன்பின் திரிசூலியாரே! ஒரு ஆண் செய்யும் செயலை பெண்ணும் செய்தால் இதற்கு என்ன அர்த்தம்?**

சு. ஞானம், அலகொல்வ, உடப்புசல்லாவ.

! ஆணுக்கு நிகராகப் பெண் இருக்கிறாள் என்று அர்த்தம்.

? **அன்பின் திரிசூலியாரே! அஜித்தின் 'ஜனா' திரைப்படத்தை தொடர்ந்து நடிக்கும் திரை ப்படங்கள் யாவை? அதன் இயக்குனர்க ளையும் குறிப்பிடுக?**

எம்.எஸ்.எம். ஸப்ரான், தர்காநகர்.

! "ஜி" படம் (இயக்குனர் - லிங்குசாமி) (ஆகஸ்ட் 15ம் திகதி ரிலீஸ்), திபாவளிக்கு அட்டகாசம், (இயக்குனர்- சரண்), மிரட் டல் ரிலீஸ்.

? **அன்பின் திரிசூலியாரே! விஜயகாந்தின் விலாசத்தைக் குறிப்பிடுக?**

க. ரமணன், செட்டிக்குளம்.

**Vijayakanth**
No. 12A, Kannambal Street,
Kannapioran Colony, Saligramam,
Channai - 600093

உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:
**திரிசூலியின் பதில்கள்**
த.பெ.இல: 1601, கொழும்பு -03.

# தித்திக்கும் திரை





## நதியா தான் முதல் சொய்ஸ்

எம்.குமரன் சன் ஆஃப் மகாலெட்சுமி என்கின்ற படத்தை இயக்குனர் ராஜா இயக்க ஜெயம் ஹீரோ ரவி நடிக்கின்றார்.

இந்தப் படத்தில் தாய்க்கும் மகனிற்குமிடையே இருக்கின்ற பாசத்தை ஒரே சீனில் ரொம்ப இம்ப்ரஸிவ்வாக எடுக்கப்பட்டுள்ளதால் அந்தளவிற்கு ஒரு ஸ்பெஷல் அம்மா பாத்திரம் இப்படத்தில் வருகிறதாம் இந்தப் பாத்திரத்திற்காக நிறையப் பேரை மனதில் வைத்திருந்தோம். ஆனாலும் நதியா தான் முதல் சொய்ஸ்.

அவங்க தான் நடிக்கணும் என்று நான் மிகவும் பிடிவாதமாக இருந்தேன் அதே மாதிரி அவங்களையே நடிக்க வைத்தேன். மிகவும் நன்றாக நடித்திருக்கிறாங்க. அவங்க ஷூட்டிங் முடிஞ்சு லண்டன் போனதின் பிறகும் ஏதாவது விட்டுப் போய்விட்டதா? திரும்ப எடுக்கணும் என்றால் திரும்பி வர்றேன்னு *E-mail* பண்ணி இருக்காங்க அந்தளவிற்கு அவங்க மிகவும் கிரேட் என்று நதியாபுகழ் பாடுகிறார் இயக்குனர் ராஜா.



மீரா வாசுதேவன்



## லைலா ரசித்த ஜோக்

உங்க பொண்ணை தீயணைப்புப் படைவீரருக்குத்தான் கட்டிக்கொடுப்பேன்னு சொல்றீங்களே... ஏன்?

பின்னே... எதுக்கெடுத்தாலும் எரிஞ்சு எரிஞ்சு விழறாளே.



ஐஸ்வர்யா

## ஐஸ் ஒரு தடவை சொன்னால்....

*The Rising* என்ற இந்திப் படம் பிரபல டைரக்டர் கேதன் மேத்தாவினால் வெளிவரவுள்ளது. இதில் ஐஸ்வர்யாராய் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். டைரக்டர் படத்தின் கதையை ஏற்கனவே ஐஸ்ஸிடம் சொல்லியிருந்தார் ஆனால் படப்பிடிப்பு ஆரம்பமானபோது ஸ்கிரிப்ட் மாற்றப்பட்டிருப்பதையும், அவரிற்கான காட்சிகள் குறைக்கப்பட்டிருப்பதையும் அறிந்த ஐஸ் அது பற்றி டைரக்டரிடம் கேட்டாராம். அதற்கு அவர் "என்னிடம் விளக்கம்கேட்பதா" என்று ஆத்திரப்பட்டுள்ளார்.

ஐஸ்வர்யாவும் முதல் சொன்னது ஒன்று பிறகு இஷ்டப்படி மாற்றிக் கொள்வதெல்லாம் ஐஸ்வர்யாராயிடம் நடக்காது அதற்கு வேறு ஆள் பாருங்கள் என்றிருக்கிறார். "என்னுடைய படத்திலிருந்து நீங்கள் நீக்கப்படுகிறீர்கள் என்றிருக்கிறார் டைரக்டர். அதற்கு ஐஸ் உங்கள்படத்தில் நடிக்க நான் தயாராகவில்லை என்றிருக்கிறார். தகறாறு முற்றி இறுதியில் வேறு ஏற்பாடுகள் நடந்த போது படத்தில் ஐஸ் இல்லை என்றால் நாங்கள் வரமாட்டோம் என்று அறைகூவல் விடுத்தனர் ஏனையோர். இதனால் டைரக்டர் சென்று உங்களது கரெக்டரை பழையமாதிரியே மாற்றி தருகிறேன் மீண்டும் வந்து நடிக்குமாறுகேட்டிருக்கிறார். ஆனால் ஐஸ் வெரி ஸாரி உங்கள் படத்தில் நடிக்க விருப்பமில்லை என்று ஒருமுறை அழுத்தமாக சொல்லிவிட்டேன். இனி அதில் எந்த மாற்றமும் இல்லை நீங்கள் புறப்படலாம் என்று அனுப்பிவிட்டாராம்.



## ஜெயிச்சாலும் தமிழில் ஜெயிக்கணும்

*பிரியாமணி*

தமிழ் சினிமாவில் பெரிதாக வருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நாயகி பிரியாமணி ஆனால் தற்போது மலையாளப் பக்கம் சாய ஆரம்பித்து விட்டார். ஆனால் இவர் என்ன சொல்கிறார் தெரியுமா? நான் மிகவும் எதிர்பார்ப்புடன் நடித்த படம் கண்களால்கைதுசெய் ஆனால் அந்தப் படம் எனக்கு நடிப்பென்றால் என்னவென்று தெரிந்து கொள்ள கற்றுக் கொள்ள வாய்ப்பாக அமைந்தது. இயக்குனர் பாரதிராஜா எனக்கு நீச்சல் பண்ண அடிப்படையான விடயங்களை கற்றுத் தந்திருக்கிறார். நானாகத்தான் இனிமேல் நீந்தப் பழகிக் கொள்ள வேண்டும் தமிழில் நடித்து ஜெயிக்கணும் அது தான் என்னுடைய ஆசை என்கிறார். அண்மையில் உங்களிற்கும் வசிக்குமிடையில் காதல் என்று செய்திகள் வெளிவந்தன. அது பற்றி என்ன கூறுகிறீர்கள் என்று கேட்டதற்கு சாதாரணமாக கூட நடிக்கிற ஹீரோவோட ஏற்பட்ட நட்புதான் அவரோடயும் இருக்கு இதை யாரும் குறுகிய எண்ணத்துடன் பார்த்து காதல் என்று பெயர் சூட்ட வேண்டாம் என்கிறார் அம்மணி.

## பிரசாந்தை ஷாக்கில் ஆழ்த்திய சம்பவம்



பிரசாந்தை ஷாக்கில் ஆழ்த்திய சம்பவம் என்ன தெரியுமா? நடிகை திவ்யாபாரதியின் அகால மரணம் தான் என்னை ஷாக்கில் ஆழ்த்திய சம்பவம் ஏப்ரல் 6ம் தேதி எனது பிறந்த நாள் அதற்கு முதல் நான் ஐதரபாத்தில் இளம் நெஞ் சேவா படத்தில் நானும் திவ்யபாரதியும் நடித்துக் கொண்டிருந்தோம். எனது பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக நான் சென்னை கிளம்பிவிட்டேன் மறுநாள் பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ள வருவதாகக் கூறிக் கிளம்பிச் சென்றார். ஏப்ரல் 6ம் தேதி அதிகாலை திவ்யபாரதியைக் கூட்டி வருவதற்காக காரை அனுப்பி விட்டு அவர் வருகைக்காக காத்திருந்தேன். ஆனால் காலை 6.30 போல போன் வந்தது திவ்ய பாரதி மாடியிலிருந்து விழுந்து தற்கொலை செய்து விட்டதாக இந்த ஷாக்கிலிருந்து நான் விடுபட நீண்ட நாட்கள் சென்றது.



கில்லி-விஜய்




## யார் முதலிடம்?

சினிமா கதாநாயகிகளில் முதல் இடத்தில் இருந்தவர் நடிகை குஷ்பு இவர் திருமணமாகிச் சென்றுவிட அடுத்ததாக சிம்ரன் பறந்து வந்துமுதலிடத்தைப் பிடித்தார். இப்போது இவரும் திருமணமாகி சென்றுவிட்டார் இவரைத் தொடர்ந்து தொப்பையைக் குறைத்து முதலிடத்திலிருந்தவர் நடிகை ஜோதிகா. அண்மையில் தமிழ் படங்களில் நடிப்பதற்கு இவரிற்கு தடை போடப்பட்டுள்ளது. இவர் தொடர்ந்தும் முதலிடத்தில் இருக்க வேண்டுமானால் தமிழ்ப் படங்களில் நடிக்க வேண்டும் ஆனால் அதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே தெரிகின்றன. இதனால் இவர் விட்டுப் போன இடத்தைப் பிடிப்பதற்காகப் போட்டி நடைபெறுகின்றது. திரிசா, சோனியா, நமீதா ஆகியோர் இந்த இடத்தைப் பிடிக்க போட்டி போடுகிறார்களாம்.



அஸின்

வானம் வசப்படும் - கார்த்திக்குமார், பூங்கோதை



உலகில் பூச்சிகளை மயக்கிச் சாப்பிடும் செடிகள் பல உண்டு. அமெரிக்க கரோலைனா மாகாணத்தில் உள்ள 'வினஸ் ஃப்ளை ட்ராப்' என்ற செடி எல்லா இதழ்களையும் விரித்து அழகாகக் காத்திருக்கும். பூச்சி உட்கார்ந்தவுடன் படக்கென்று எல்லா இதழ்களையும் மூடிக் கொண்டுவிடும். உள்ளே ஜீரணமானதும் மறுபடி இதழ்களைத் திறக்கும்!.








சட்டத்தரணி மருதமுனை இஸ்மாயில் பீ.பஆரிஃப் எழுதிய 'அரசியல் நெருக்கடிகளும், முரண்பாடுகளும்" என்ற நூல் வெளியீட்டு விழா மருதானை ஸாஹிராக் கல்லூரி கபூர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது நூலின் முதற்பிரதியை பிரதம அதிதியான தகவல் ஊடகத்துறை பிரதி அமைச்சர் ஷேகு இஸ்ஸதீனிடமிருந்து இலங்கைக் கப்பல் கூட்டுத்தபானப் பணிப்பாளர், சபை உறுப்பினர் புரவலர் ஹாஷிம் உமர் பெறுவதையும் அருகில் நூலாசியர் இஸ்மாயில் பீ. ம ஆரிஃப்பையும் படத்தில் காணலாம்.



உலகில் மிகப் பெரிய முட்டையிடும் பறவையினம் எது தெரியுமா? நெருப்புக் கோழி தான். அருகில் உள்ள படத்தில் இந்த இராட்சத முட்டைகளைக் காணலாம்.




தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய அரசியற் தத்துவம் சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பு விடுதலை நூல் அறிமுகவிழா, வவுனியா இந்துக் கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போது தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை உரையாற்றுகின்றார்.

*படம் : ச. மயூரன்*



உலக சுற்றாடல் தினம் அன்று வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களில் சுற்றாடல் தினம் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வவுனியா மாவட்ட முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஆதரவில் இடம் பெற்றது.

இதன்போது முன்பள்ளிகளில் மரம் நடுகை திட்டத்திற்கான மரக்கன்றை வவுனியா தமிழர் புனர்வாழ்வுக்கழக நிர்வாகப் பணிப்பாளர் இ.சத்தியமூர்த்தி பெற்றுக்கொள்வதையும் அம்மரக்கன்றை வவுனியா மாவட்ட உதவித்திட்டப் பணிப்பாளர் பரமகுலசிங்கத்தால் வழங்கி வைக்கப்படுகின்றது. அருகில் விசேட அதிதியாகக் கலந்து கொண்ட வவுனியா அரச அதிபரையும் படத்தில் காணலாம்.

*படம் + தகவல்: ச. மயூரன்*


ALCATEL

Sensational French Models



One Touch 320

One Touch 332
Colour Screen

One Touch 535
Colour Screen/ MMS

One Touch 735
Camera Phone / Colour Screen

எல்லா வகையான கையடக்கத் தொலைபேசிகளுக்கும் இரண்டு வருட உத்தரவாதம்
விற்பனைக்குப் பிந்திய சேவைகளும் நவீன தொழில் நுட்பத்தினுடனான திருத்தியமைத்தலும்
24 மணி நேரத்தினுள் செய்துகொடுக்கப்படும்.

A·R·C·A·D·E THE ONE STOP PHONE SHOP

Dialog GSM
TheFuture.Today.
Phone : 2678678

ALCATEL
ONE STOP SHOP

கொழும்பு Tel: 0777 592592 கண்டி Tel: 0777 904878
நுகேகொட Tel: 0777 363666 காலி Tel: 0777 707474
யாழ்ப்பாணம் Tel: 0777 266005 திருகோணமலை Tel: 0777 584348

· 285, R.A. De Mel Mawatha, Colombo 3. Tel: 2370370

THE PHONE SHOP
455, Union Place,
Colombo 2.
Tel: 2679679

மாத்தறை Tel :041-2222479 வெல்லட்ட Tel :047 2243635 பதுளை Tel :056 2222296 மத்துகம Tel :034 2247332
சிலாபம் Tel :032 2222106 நிக்கவாரட்டிய Tel : 037 2260200 தெகிவளை Tel : 0777 340549 மகரகம Tel :2851777
ஜாஎல Tel :2233757 நீர்கொழும்பு Tel :031 2232883 தம்புள்ள Tel :0777 843464 கொட்டாவ Tel :0777 309726
புத்தளம் Tel :032 5290044 ரன்ன Tel :0777 565595 கொகுவல Tel :0777 636956 நாவல Tel :2607437 ஹபரண Tel : 066 2270054
எலிப்பிட்டிய Tel :091 2291634 அம்பாந்தோட்டை Tel :047 2225319 பேருவளை Tel :034 2276699 களுத்துறை Tel :034 222238


## சித்திரமும் சிறுகதையும்



### நீங்களும் எழுதலாம்

இப்படத்திற்குப் பொருத்தமான குட்டிக்கதையினை 250 சொற்களுக்கு மேற்படாதவாறு எழுதி அனுப்புங்கள் சிறந்த கதை பிரசுரிக்கப்படும். அனுப்ப வேண்டிய முகவரி: த.பெ.இல. 1601, கொழும்பு







இப்பத்திரிகை பொரஹெரமாவத்த, கொழும்பு-03ல் அமைந்துள்ள சூரியன் வெளியீட்டகத்தினற்காக இல. 315, ஜம்பட்டாவீதி, கொழும்பு13ல் அமைந்துள்ள ஈ குவாலிட்டி கிரபிக்ஸில் அச்சிட்டு 10-07-2004 அன்று வெளியிடப்பட்டது.